# எனது முதல் சந்திப்பு

MADURAI UNIVERSITY LIBRARY
4 AUG 1970
MADURAI

டி. எஸ். சொக்கலிங்கம்

பழனியப்பா பிரதர்ஸ்
சேப்பாக்கம், சென்னை-5 :: தெப்பக்குளம், திருச்சி-2

முதற் பதிப்பு: 25—12—'56
உரிமை பதிப்பகத்தார்க்கே

விலை ரூபா
**1—8—0**

ஏஷியன் பிரிண்டர்ஸ்,
4, வெங்கடேச நாயக்கன் தெரு,
சேப்பாக்கம், சென்னை-5.

# எனது முதல் சந்திப்பு

... UNIVERSITY ... ADUR

# உள்ளுறை



| | | | |
|---|---|---|---|
| 1. | காந்திஜி | ... | 1 |
| 2. | ராஜாஜி | ... | 13 |
| 3. | காமராஜ் | ... | 22 |
| 4. | வ. வெ. சு. அய்யர் | ... | 28 |
| 5. | வ. உ. சி. | ... | 32 |
| 6. | பாரதியார் | ... | 38 |
| 7. | திரு. வி. க. | .... | 43 |
| 8. | வ. ரா. | ... | 49 |
| 9. | டாக்டர் நாயுடு | ... | 56 |
| 10. | டாக்டர் சங்கரய்யர் | .... | 64 |
| 11. | ஸ்ரீ. ராமசாமி ரெட்டியார் | ... | 69 |
| 12. | ஸ்ரீ. அவிநாசிலிங்கம் | ... | 75 |
| 13. | ஸ்ரீ. குமாரசாமி ராஜா | ... | 79 |
| 14. | மணிக்கொடி சீனிவாசன் | ... | 86 |
| 15. | ஸ்ரீ. பக்தவத்சலம் | ... | 92 |
| 16. | மட்டப்பாறை சிங்கம் | ... | 95 |

MADURAI UNIVERSITY LIBRARY
MADURAI.

# எனது முதல் சந்திப்பு

## 1. காந்திஜி

அக்காலத்தில் வெடிகுண்டு வழக்குகள், சதி யாலோசனை வழக்குகள் இவைதான் பெரிய தேசீயச் செய்திகளாய் இருக்கும். சுயராஜ்யத்திற்காகப் பாடுபட வேண்டும் என்ற விருப்பமுள்ளவர்களுக்கு என்ன வழி என்பதே தெரியாது. அதைக் காட்டுவாரும் யாரும் இல்லை. மகாநாடுகள் என்பவை யெல்லாம் ரொம்ப ரொம்ப அபூர்வம். வருஷத்திற்கு ஒரு தடவை காங்கிரஸ் மகாசபை கூடுவதுதான் பெரிய தேசீய விழாவாய் இருக்கும். காங்கிரஸ் மகாசபைக்குப் போய் வருவது ஒன்றுதான் பெரிய தேசீயத் தொண்டாய் விளங்கி வந்தது.

தேச சேவை செய்ய வேண்டும் என்று எனக்கு ஆசை தோன்றியது. ஆனால், எப்படிச் செய்வது? அதற்கு வழிதான் ஒன்றும் இல்லை. இச்சமயத்தில் ஆமதாபாத்தில் சத்தியாக்கிரக ஆசிரமம் ஒன்றை மகாத்மா ஆரம்பித்ததைப் பத்திரிகைகளில் பார்த்தேன். அதில் போய்ச் சேருவது என்று முடிவு செய்தேன். ஆனால், எப்படிப் போவது? வீட்டில் தெரிந்தாலோ போகவிடமாட்டார்கள். 'திருநெல்வேலி சதியாலோசனை வழக்கில்' சம்பந்தப்பட்டு என் சகோதரர் இரண்டு வருஷம் ஜெயிலில் இருந்துவிட்டு வெளியே வந்தார். அதுமுதல் நான் படிக்கிறவைகளையும், எனக்குத் தபாலில் வரும் கடிதங்களையும் கவனமாய் என் வீட்டார் கண்ணோட்டம் போட்டு வந்தார்கள். அக்காலங்களிலெல்லாம் காலணா கார்டில் எழுதிப் போட்டால் போதும். ஓர் ஆள் சுமை, 'காட்லாக்'குகள் வந்து சேரும். அந்தக் 'காட்லாக்'குகளில் கூட ராஜதுவேஷம் இருக்குமோ என்று என் வீட்டிலுள்ள சிலர் சந்தேகப்படுவார்கள். இந்த நிலைமையில் வீட்டாரின் சம்மதத்தோடு ஆமதாபாத் போவது என்பது நடவாத காரியம். எனவே தெரியாமல் புறப்பட்டு விடுவது என்று முடிவு செய்தேன்.

முதலில் ஆசிரமத்தில் சேருவதற்கான விதிகளின் விவரங்களைப் பற்றி எழுதிக் கேட்டேன். விதி விவரங்கள் டைப் அடித்து வந்ததாக ஞாபகம். அதோடு ஒரு கடிதமும் வந்தது. ஆசிரமத்தில் இடம் காலியாய் இல்லை என்றும், அனுமதி பெற்ற பின்பே அங்கு வரவேண்டுமென்றும் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்கள். இந்த அனுமதியைப் பற்றி நான் கவலைப்படவில்லை. அவ்வளவு

தூரம் போனபின்பு சேர்த்துக்கொள்ள மறுத்துவிட மாட்டார்கள் என்பது என் நினைப்பு.

1917-ஆம் வருஷம் மே மாதக் கடைசியில் புறப்பட்டேன். ஆமதாபாத் போவதென்ருல் சென்னைக்குப் போய், அங்கே மற்ருெரு ரயிலில் ஏறி, பம்பாய் போக வேண்டும். பம்பாயில் இன்ஞெரு ரயில் ஏறி ஆமதாபாத் போய்ச் சேரவேண்டும்.

ஹிந்தியோ எனக்குக் கொஞ்சம்கூடத் தெரியாது. இதைச் சமாளிப்பது எப்படி? இரண்டாவது வகுப்பில் பிரயாணம் செய்தால் சாப்பாடு காரியங்களுக்கு 'ரிபிரெஷ்மெண்ட் ரூம்'காரர்களோடு ஆங்கிலத்தில் பேசிச் சமாளிக்காலம் என்று நினைத்தேன். அதனுல் சென்னைக்கு மூன்ருவது வகுப்பில் வந்து, சென்னையிலிருந்து ஆமதாபாத்துக்கு நேராக இரண்டாவது வகுப்பு டிக்கட் எடுத்தேன். 62 ரூபாய் என்று ஞாபகம். பம்பாயில் போய் இறங்கியதும் ஹோட்டல் ஏஜெண்டுகள் பிரயாணிகளை வரவேற்ருர்கள்.

அந்த ஹோட்டல்களில் மதராஸ் ஹோட்டலுக்குப் போனுல்தான் பாஷை, சாப்பாடு தகராறுகள் இல்லாமல் இருக்கு மாகையால் மதராஸ் ஹோட்டலுக்குப் போனேன். அங்கு இரண்டு மூன்று நாட்கள் இருந்துவிட்டு ஆமதாபாத் போய்ச் சேர்ந்தேன். அங்கே சபர்மதி என்று ஓர் ஆறு ஓடுகிறது. அதன் கரையில் மகாத்மாவின் ஆசிரமம் இருந்தபடியால் அதற்குச் சபர்மதி ஆசிரமம் என்று பெயர் இருந்தது. ஆசிரமத்திற்கு நான் போனதும் மகாத்மா அங்கு இல்லை என்பதை அறிந்தேன். பீஹாரில் சாம்பரான் பிரதேசத்தில் தோட்டத் தொழிலாளர் தகராறு ஏற்பட்டது. அச்சமயம் மகாத்மா

அங்கே சட்டமறுப்புச் செய்து தொழிலாளரின் குறைகளை விசாரிக்க ஒரு கமிட்டியைச் சர்க்கார் நியமிக்கும்படி செய்தார். அந்த வேலை சம்பந்தமாக மகாத்மா சாம்ப ரான் போயிருப்பதாகவும், ஆமதாபாத் திரும்ப ஒரு வாரம் ஆகுமென்றும் சொன்னார்கள். ஆசிரமத்தின் மானேஜ ராக ஸ்ரீ. மகன்லால் காந்தி என்பவர் இருந்தார். அவர் மகாத்மாவின் ஒன்றுவிட்ட சகோதரர். அவரைப் பார்த்தேன்.

அவர் என்னைப் பார்த்ததும், 'அனுமதி பெருமல் வரக் கூடாது என்று எழுதி யிருந்தேனே' என்று கேட்டார். கடைசியாக மகாத்மா திரும்பி வந்த பின்பு பேசிக் கொள்ளலாம் என்றும், அதுவரை நான் அங்கே இருக்க லாம் என்றும் சொன்னார். அப்புறம்தான் எனக்குச் சோதனை ஆரம்பமாயிற்று.

காலையில் ரொட்டியும் மோரும் கொடுத்தார்கள். சுலபமாய்ச் சாப்பிட்டேன். 11 மணிக்குச் சாப்பாடு ஆரம்பமாயிற்று. ஒவ்வொருவரும் தங்கள் தட்டுகளைக் கொண்டு போய்ச் சமையல் இடத்தில் தங்களுக்கு வேண்டிய அளவு வாங்கிக் கொள்ளவேண்டும். மத்தியில் ஒரு நீளமான மேஜை மீது உணவு வகைகள் வைக்கப் பட்டிருந்தன. பரோட்டா, பூரி, சாதம், பருப்பு, காய் கறிகள், உப்பு, எலுமிச்சம் பழத் துண்டுகள், பால், சர்க் கரை—இவ்வளவும் இருந்தன. மேஜையின் ஒரு பக்கத் தில் ஸ்ரீ. மகன்லால் காந்தி, அவர் மனைவியார், இன்னும் சிலர் நின்றுகொண் டிருந்தார்கள். ஆசிரமவாசிகளின் தட்டுகளில் அவர்களுக்கு வேண்டியவைகளை எடுத்து வைப்பார்கள். மகாத்மா காந்தியும் அன்னை கஸ்தூரிபாயும் ஆமதாபாத்தில் இருக்கிற நாட்களில் அவர்களும்

இந்தப் பரிமாறும் வேலையில் கலந்து கொள்ளுவார்கள். உணவை வாங்கிக்கொண்டு போய்த் தங்களுக்குப் பிரிய மான இடத்தில் வைத்து உண்ணலாம். சாதமோ, பருப்போ, சப்பாத்தி பூரிகளோ எவ்வளவு வேண்டு மானாலும் கிடைக்கும். ஆனால், அவற்றை எப்படிச் சாப்பிடுவது? அதுதான் புரியவில்லை. இப்பொழுதாய் இருந்தால் ஒரு சிரமமும் இல்லாமல் சாப்பிடுவேன். சாதத்தில் பருப்பும், நெய்யும், குழம்பும் விட்டுச் சாப்பிட்டு, பின்னால் மோர்ச் சாதம் சாப்பிட்டுப் பழக்க மாய் விட்டதால், அங்கே சாம்பாரையோ, ரசத்தையோ, மோரையோ காணமல் போனது பெரிய ஏமாற்றமாய் இருந்தது. மிளகாய் என்பது ஆசிரமத்துக்குள் நுழை யவே கூடாது. ஆசிரமத் தோட்டத்திலேயே எத்த னையோ புளிய மரங்கள் இருந்துங்கூட, புளி என்பது சமையல் அறைப் பக்கமே போகக்கூடாது. உணவில் புளிப்புக்காக ஓர் எலுமிச்சம்பழத் துண்டைச் சேர்த்துக் கொள்ளலாம். அவ்வளவுதான். அந்த வயதில் அந்தச் சாப்பாட்டை என்னால் சாப்பிடவே முடியவில்லை.

ஆசிரம விதிகளில் நாக்கிற்கு அடிமையாகக் கூடாது என்பதும் ஒன்று. உடலுக்கு அவசியமானதை உண்ண வேண்டுமே ஒழிய, நாக்கிற்கு ருசி வேண்டும் என்பதற் காக அவசியமில்லாததை உண்ணக்கூடாது. இந்த அவசியம் இல்லாத வகையில், புளியும் மிளகாயும் சேர்ந்துவிட்டன. இந்த வித்தியாசத்தை விதியைப் படித்தபோது என்னால் உணர முடியவில்லை. ஆசிரம உணவு எப்படி இருக்கும் என்பதே தெரியாதபடியால் இதைப் பற்றி நான் சிந்திக்கவே இல்லை. உணவு அப்படி இருக்கும் என்று முன்னதாகத் தெரிந்திருந்தால் நான்

ஆசிரமத்துக்குப் போகத் துணிந்திருப்பேனு என்பது சந்தேகம்தான். எனவே, ஆசிரம உணவு மனத்தில் இருந்த தேசசேவை உற்சாகத்தை ரொம்பக் குறைத்தது என்ருலும், எப்படியாவது சமாளிக்கலாம் என்ற உறுதி ஒரு பக்கம் இருந்து கொண்டே இருந்தது. ஒரு நாள் ஆசிரமத்துக்கு வெளியே நடந்துபோய் வரலாமென்று புறப்பட்டேன். சபர்மதி ஆற்றுப் பாலம் பெரிய பாலம். அதைக் கடந்து அப்பால் போனபோது வரிசையாகக் கடைகள் இருந்தன. அவற்றில் மிட்டாய்க் கடைகளைப் பார்த்தபோது என் உற்சாகம் மீண்டும் திரும்பியது. உடலுக்கு அவசியம் இல்லாத உணவை உண்பது திருடுவதற்குச் சமானம் என்று ஆசிரம விதி சொல்லு கிறது. என்ருலும், மிட்டாய்க் கடைகளைப் பார்த்ததும் அந்த விதிகள் எல்லாம் மறந்தே போயின. வேண்டிய அளவு மிட்டாய்களை வாங்கி உண்டு ஆவலைத் தணித் தேன். திடீரென்று நிறைய மிட்டாய் சாப்பிட்டதால் இரண்டு மூன்று தினங்களில் ஜுரம் வந்தது. இதற்குள் மகாத்மாவும் திரும்பிவிட்டார்.

அக்காலத்தில் மகாத்மா இடுப்பில் பஞ்சகச்ச வேஷ்டி யும், உடம்பில் நீளமான சட்டையும், தலையில் ஒரு பெரிய தலைப்பாகையும் அணிந்திருப்பார். சாம்பரானி லிருந்து திரும்பிய மகாத்மா ஆமதாபாத் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து ஆசிரமத்துக்கு நடந்தே வந்தார். அவருடன் அவர் நண்பர்களின் கூட்டமும் நடந்தே வந்தது.

ரயில்வே ஸ்டேஷனில் அவரைப் பார்க்க வேண்டும் என்று பல நாட்களாக நான்கொண்டிருந்த ஆவல்பூர்த்தி யாயிற்று. அதனுல் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டது.

ஓர் ஆவல் நிறைவேறிற்று. அடுத்த ஆவலாகிய தேச சேவை என்பது இன்னும் பாக்கி இருக்கிறது. இதை எப்படி நிறைவேற்றுவது? மகாத்மாவுக்குத் தொண்டு செய்வதைத் தவிர வேறு வழி இருப்பதாய்த் தெரிய வில்லை. ஆகவே, தேசத் தொண்டு செய்யும் மகாத்மா வுக்குத் தொண்டு செய்வதுதான் தேசசேவை என்று தீர்மானித்தேன். மகாத்மாவின் சுற்றுப் பிரயாணங்களில் அவரோடு செல்ல விரும்பினேன். இதை மகாத்மாவிடம் தெரிவித்தேன். அவர் ஆட்சேபணை சொல்லவில்லை. ஆனால், ஒரு நிபந்தனை போட்டார். "நீ நன்றாய் ஹிந்தி படித்துக் கொண்டால் உன்னைக் கூட்டிக்கொண்டு போகி றேன். இல்லாவிட்டால் போகிற இடங்களில் பாஷைக் கஷ்டம் ஏற்படும்" என்று சொன்னார். "மூன்று மாதங் களில் படித்துவிடலாம்" என்றும் அவரே சொன்னார். அன்றே ஹிந்தி படிக்க ஆரம்பித்தேன். ஆனால், அன்று ஆரம்பித்த ஹிந்திப் படிப்பு இன்று 28 வருஷங்களாகியும் இன்னும் பூர்த்தியாகவில்லை. ஒவ்வொரு ஜெயில் வாசத் திலும் அந்த ஹிந்திப் படிப்பிற்குப் புத்துயிர் ஏற்படும். விடுதலையாகி வெளியே வந்ததும் மறந்து போகும். அது வேறு கதை!

எனக்கு ஜுரம் வந்ததை மகாத்மா அறிந்ததும், என்னை அழைத்து விசாரித்தார்; நாக்கை நீட்டச் சொன்னார். எதனால் ஜுரம் வந்தது என்பதை அவர் கேட்கவில்லை. கேட்டிருந்தால் மிட்டாய் சாப்பிட்டதை நான் சொல்லியிருப்பேன். இன்று பூராவும் பாலைத் தவிர வேறு எதுவும் வேண்டாமென்று உத்தரவிட்டார். பால் சாப்பிட்டதும் ஜுரம் மறுநாளே போய்விட்டது. ஆகார விஷயத்தில் எனக்குள்ள கஷ்டத்தை அவர் எப்படியோ

தெரிந்து கொண்டார். உணவு விஷயங்களிலுள்ள ஆசிரம விதிகள் ரொம்பக் கண்டிப்பாய் அமுல் செய்யப் பட்டு வந்தன. யாருக்காவது விதிவிலக்கு வேண்டு மானால் மகாத்மாவின் உத்தரவு வேண்டும். அச்சமயத் தில் பாஞ்சாலவாசியான பேர் பெற்ற சுவாமி சத்திய தேவ் அந்த ஆசிரமத்தில் தங்கி, ஹிந்தி கற்றுக் கொடுத்துவந்தார். அவர் ஒருவருக்குத்தான் மகாத்மா விதிவிலக்குக் கொடுத்திருந்தார்.

விதிவிலக்கு என்றால், பெரிய விருந்துச் சாப்பாடு என்று நினைக்காதீர்கள். அவருக்குக் கொடுக்கும் பருப் பில் ஒரே ஒரு மிளகாய் போட்டுக் கொடுக்கும்படி உத்தர விட்டிருந்தார். ஒரே ஓர் மிளகாய். அவ்வளவுதான்! அந்த . ஒரு மிளகாய் பிரமாதமாக ஆசிரமத்துக்குள் விளங்கியது. சுவாமி சத்தியதேவுக்கு ஆசிரம உணவு உடம்புக்கு ஒத்துவராமல் இருந்ததால் அந்த அனு மதியை மகாத்மா கொடுத்தார். இந்தப் பெரிய விதி விலக்கை எனக்கும் கொடுக்கும்படி மகாத்மா உத்தர விட்டார். ஆனால், இந்த ஒரு மிளகாயினால் என்னுடைய உணவுப் பிரச்சினை தீர்ந்து விடவில்லை.

தேவதாஸ் காந்தி அச்சமயம் அங்கேதான் இருந் தார். ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு வேலை செய்யவேண் டும் என்பது ஆசிரம விதி. அதை யொட்டி அவகாசம் கிடைத்தபோதெல்லாம் தறியில் நெசவு செய்வார். அவ ருக்குத் தமிழ் கற்றுக்கொள்ள வேண்டும் என்று விருப்பம் இருந்தபடியால், தினம் சில தமிழ் வார்த்தைகளை நான் அவருக்குச் சொல்லிக்கொடுப்பது என்று ஏற்பாடாயிற்று.

அக்காலத்தில் இயக்கங்களோ, பிரச்சினைகளோ, பத் திரிகைகளோ அதிகமாய்க் கிடையாது. எனவே, ஆசிரம

வாசிகள் வாதிக்கக் கூடிய அரசியல் விஷயங்களும் கிடையாது. ஆசிரம வாழ்க்கை சுமுகமாய்ப் போய்க்கொண்டிருந்தது. மகாத்மா காந்தி ஏதோ ஒரு வேலையாகப் பம்பாய் போவதென்று தீர்மானமாயிற்று. மகாத்மாவோடு பம்பாய் போய் ஒன்றிரண்டு நாட்கள் மதராஸி உணவை உண்டு திரும்பி வந்தால் உணவுப் பிரச்சினையைச் சமாளிப்பது சுலபமாய் இருக்குமென்று எனக்குத் தோன்றிற்று. 'மகாத்மாவோடு நானும் வரலாமா?' என்று கேட்டேன். அவர் சம்மதித்தார். மகாத்மா அக்காலத்திலும் மூன்ருவது வகுப்பில்தான் பிரயாணம் செய்வார். பம்பாய் போய்ச் சேர்ந்ததும் நான் அவருடைய ஜாகைக்கு அப்பொழுது வரவில்லை என்றும், ஒரு நண்பரைப் பார்த்துவிட்டு அப்புறம் வருவதாகவும் மகாத்மாவிடம் சொன்னேன். மறுநாள் இரவு ஆமதாபாத் புறப்படுவதாகவும் அதற்குள் தம்முடைய ஜாகைக்கு வந்துவிடுமாறும் மகாத்மா சொன்ஞர். சரி என்று சொல்லிவிட்டு நேராக நான் முன்ஞல் தங்கியிருந்த பிரின்ஸெஸ் தெரு ஹோட்டலுக்குப் போனேன். மதராஸி உணவைச் சாப்பிடும் ஆவலோடு நான் ஹோட்டலுக்குள் நுழைந்ததும் அங்கே ஓர் ஆச்சரியம் எனக்காகக் காத்திருந்தது. அந்த ஆச்சரியம் மீண்டும் நான் சபர்மதி ஆசிரமத்துக்குப் போகாமல் தடுத்துவிட்டது.

ஹோட்டலுக்குள் நுழைந்ததும் முந்திய தடவை அதே ஹோட்டலில் தங்கியபோது பழக்கமான நண்பர் ஒருவர், "நல்ல ஆள் ஸார்!" என்ருர். எனக்கு விஷயம் புரியவில்லை. "என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டேன். அவர், "இப்படித்தான் வீட்டில் சொல்லாமல் வருவதா?" என்ருர்.

"அதைப் பற்றி இப்பொழுது என்ன ?" என்று கேட்டேன். அவர் விஷயத்தைச் சொன்னார். விஷயம் என்னவென்றால், என்னைத் தேடிக்கொண்டு என் தாயாரே அங்கே வந்துவிட்டார். என் தாயாரும், துணைக்கு என் மைத்துனரும் வீட்டுச் சமையல்காரரோடு ஆமதாபாத் போய்ச் சேர்ந்தார்கள். பம்பாயில் அதே ஹோட்டலில் தங்கிவிட்டு முதல்நாள் இரவு ஆமதாபாத் புறப்பட்டுப் போனார்கள். அதே இரவில்தான் நான் ஆமதாபாத்திலிருந்து பம்பாய்க்குப் புறப்பட்டேன். ஆனால், இருவரும் சந்திக்க முடியவில்லை.

ஆரம்பத்தில் ஆமதாபாத்துக்கு நான் வந்து சேர்ந்ததும் வீட்டுக்குக் கடிதம் எழுதினேன். அதனால் நான் இருக்கும் இடத்தைத் தெரிந்து கொண்டார்கள். இனிமேல் நானாவது ஊருக்குத் திரும்புவதாவது என்று அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் என் தாயாருக்குப் பீதியை உண்டுபண்ணிப் புறப்படும்படி செய்துவிட்டார்கள். பம்பாயில் இந்த விஷயத்தைக் கேள்விப்பட்டதும் சபர் மதி ஆசிரமத்துக்குத் திரும்பும் ஆசை போய்விட்டது. அதனால், மகாத்மாவை அப்புறம் நான் பார்க்கவில்லை. மறுநாள் இரவு மகாத்மா ஆமதாபாத் புறப்பட்டார். அவரை ஆமதாபாத்தில் என் மைத்துனர் சந்தித்தார். விஷயங்களைச் சொல்லி என்னை அழைத்துக் கொண்டு போக அனுமதி கேட்டார். அச்சமயம் மகாத்மா வருத்தப் பட்டாராம்; வருத்தப்பட்டதற்குக் காரணத்தையும் சொன்னாராம்: அதாவது, சென்னை மாகாணத்திலிருந்து ஆசிரமத்துக்கு யார் வந்தாலும் உணவு வித்தியாசத்தினால் மூன்று மாதங்களுக்கு மேல் தங்குவதில்லையாம். அச்சமயம் சென்னைவாசி யாருமில்லையாம். நானாவது தங்கி

இருப்பேன் என்று நினைத்தாராம். என்னை அவருடைய சுற்றுப் பிரயாணங்களில் அழைத்துக் கொண்டு போக நினைத்திருந்தாராம். அவ்வளவையும் சொல்லிவிட்டுக் கடைசியில் அனுமதி கொடுத்தார். மகாத்மாவுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற என்னுடைய முதல் ஆசை இந்த விதமாக முடிந்தது.

மகாத்மாவின் ஞாபகசக்தி அபாரமானது என்பது உலகமறிந்த விஷயம். திருச்சி ஜெயிலிலிருந்து 1941-இல் நான் வெளிவந்த பின்பு மகாத்மாவுக்கு ஒரு கடிதம் எழுதினேன். தனிப்பட்டவர்கள் சத்தியாக்கிரகத்தை எதிர்த்துத் தமிழ்நாட்டில் சில காங்கிரஸ் தலைவர்கள் பிரச்சாரம் செய்து வந்ததை அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன். மகாத்மா அதற்குப் பதில் எழுதினார். அந்தப் பதில் கடிதத்தில் கடைசியில் ஒரு வரி சேர்த்திருந்தார். அதாவது, ‘‘கடப்பை ஆசாமி உன்மீது சொல்லும் குற்றச்சாட்டிற்கு என்ன பதில் சொல்லுகிறாய்?’’ என்று கேட்டிருந்தார். அவருக்குத் தினம் வரும் ஆயிரக்கணக்கான கடிதங்களில் இதை ஞாபகத்தில் வைத்திருந்து அவர் கேட்டது எனக்கு ஆச்சரியமாய் இருந்தது. எந்தக் காங்கிரஸ்காரரும் மகாத்மாவிடம் பொய் சொல்லமாட்டார்கள். திருச்சியில் நடந்த விஷயங்களை உள்ளது உள்ளபடி மகாத்மாவிடம் சொல்லித்தான் ஆகவேண்டும். ஆனால், கடிதத்தில் எழுதுவதைவிட நேரில் சொல்லுவதே நல்லது என்று எனக்குத் தோன்றியது. நேரில் போய்ச் சொல்லுவதற்கு அனுமதி கோரி மகாத்மாவுக்குக் கடிதம் எழுதினேன். நேரில் வரவேண்டாமென்றும், அதைப் பற்றி விசாரித்து எழுதும்படி டாக்டர் சுப்பராயனுக்குச் சொல்லியிருப்பதாகவும் மகாத்மா பதிலெழுதினார்.

ஆனுல், டாக்டர் சுப்பராயனின் விசாரணை ஆரம்பமாகத் தாமதமாயிற்று. இதனுல் மகாத்மாவுக்கு வருத்தம் ஏற்பட்டது. அச்சமயம் அங்கே சென்றிருந்த ராஜாஜியிடம் இதைப் பற்றிப் பிரஸ்தாபித்தார். உடனே திருச்சியில் நடந்ததை மகாத்மாவுக்கு எழுதியனுப்பும்படி ராஜாஜி எனக்குக் கடிதம் எழுதினுர். அப்படியே நானும் எழுதினேன். உள்ளதை ஒப்புக்கொண்டு எழுதியதற்காகச் சந்தோஷம் தெரிவித்து மகாத்மா பதில் எழுதினுர். அந்த விஷயம் அதோடு தீர்ந்தது. மகாத்மா அச்சமயம் எழுதிய கடிதங்களைப் பொக்கிஷம் மாதிரி போற்றி வைத்திருக்கிறேன்.

# 2. ராஜாஜி

**1920**-ஆம் வருஷத்தில் ஒத்துழையாமைப் பிரசாரம் செய்வதற்கா ராஜாஜியும், டாக்டர் ராஜனும் தமிழ் நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்தார்கள். தென்காசிக்கும் அவர்கள் வரவேண்டுமென்று, டாக்டர் ராஜனுக்கு நான் கடிதம் எழுதினேன். அவர்கள் வர ஒப்புக்கொண்டு வந்தார்கள். ரயில்வே ஸ்டேஷனில் வரவேற்புக் கொடுத்தோம். அது முடிந்ததும், "சொக்கலிங்கம் யார் ?" என்று டாக்டர் ராஜன் கேட்டு என்னை அறிந்து கொண்டதும் ராஜாஜிக்கு அறிமுகம் செய்து வைத்தார். அன்றுதான் முதன் முதலாக ராஜாஜியைச் சந்தித்தேன். அன்று இரவு தென்காசியில் பிரம்மாண்டமான பொதுக் கூட்டம் கூடியது. பெரிய பிரசங்க மேடையும், அதன் மீது பந்தலும், அலங்காரங்களும் செய்திருந்தோம்.

ராஜாஜியும், டாக்டர் ராஜனும் பிரசங்கம் செய்தார்கள். ராஜாஜி மாகாண காங்கிரஸ் தலைவரானபடியால் காங்கிரஸ் ஆட்சியில் அவர் மாகாண கவர்னருக்குச் சமானம் என்பது என்னுடைய மனத்தில் அக்காலத்தில் தோன்றியது. மகாத்மாவுக்கு அடுத்தபடியாக ராஜாஜி மீது எனக்கு மதிப்பும் ஏற்பட்டது.

இன்றும் ராஜாஜி மீது எனக்குள்ள மதிப்பு அப்படியேதான் இருக்கிறது. ஆனால் ஒரு விஷயம். "நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் வேறொன்று நினைக்கிறது" என்ற பழமொழி என் விஷயத்தில் பலித்து விட்டது. அவர்மீதுள்ள மதிப்பு எனக்குக் குறையவில்லை. என்றாலும் பல கிளர்ச்சிகளில் அவருக்கு எதிராக நான் இருந்திருக்கிறேன். இந்த முரண்பாட்டினால் எனக்கு அவர்மீது மதிப்பு உண்டு என்று சொல்லுவதை நம்புவதற்குப் பலருக்குக் கஷ்டமாய் இருக்கலாம். ஆனால் நான் சொல்லுவதுதான் உண்மை. ரா்ஜாஜி 1923-ஆம் வருஷத்தில் சட்ட சபை பிரவேசத்தை எதிர்த்ததை நான் பலமாய்க் கண்டித்திருக்கிறேன். குருகுலப் போராட்டக் காலத்தில் அவரைப் பலமாய்க் கண்டித்திருக்கிறேன். ஆனால், 1937-ஆம் வருஷத்தில் அவர் முதல் மந்திரியாய் வந்ததும் அவரைப் பூரணமாய் ஆதரித்தேன். அவருக்கு விரோதமாக அச்சமயத்தில் கிளம்பிய சோஷலிஸ்டுகளை (கம்யூனிஸ்ட்கள்தான் அச்சமயம் சோஷலிஸ்ட்கள் என்ற பெயரோடு இருந்தார்கள்.) எதிர்த்து ஊர் ஊராய்ப்பிரசங்கம் செய்திருக்கிறேன். அதற்காக என்மீது கோபம் கொண்ட சோஷலிஸ்ட்கள் 'தினமணி' காரியாலயத்தில் வேலை நிறுத்தம் செய்யத் தூண்டினார்கள். அது பலிக்கவில்லை. ராஜாஜி கொண்டு வந்த கட்டாய ஹிந்தியை

நான் தீவிரமாய் ஆதரித்தேன்; இன்றும் ஆதரிக்கிறேன். ஹிந்தி கற்பதால் தமிழ் கெட்டுவிடும் என்று சொல்லுவதில் உண்மை கிடையாது என்பதுதான் என்னுடைய தீவிரமான கருத்து. ராஜாஜி ஏற்படுத்திய கட்டாய ஹிந்தியைக் கவர்னர் ஆட்சிக் காலத்தில் ரத்துச் செய்யாமல் இருந்திருந்தால் இன்று தமிழரின் நிலைமை எவ்வளவோ மேன்மையாய் இருக்கும். தலைமை சர்க்காரின் பப்ளிக் சர்விஸ் கமிஷனில் ஹிந்தியில் கேள்வி கேட்பார்களே என்று தமிழர்கள் மலைத்து நிற்க வேண்டிய அவசியம் ஏற்படாது. இந்நாட்டுத் தேசிய பாஷையாக ஹிந்தி வந்துதான் ஆகவேண்டும். இதை முன் யோசனையோடு ராஜாஜி செய்தார். இந்த யோசனையைத் தமிழர்கள் எதிர்க்கிற வரையில் அதனால் தமிழ் நாட்டுக்குத்தான் நஷ்டம்.

சேலத்தில் ராஜாஜி பிரபல கிரிமினல் வக்கீலாய்ப் பிரகாசித்தவர். அதனால் ஏற்பட்ட அநுபவங்களும், அவற்றால் ஏற்பட்ட சுபாவங்களும் அவர் உடம்பில் ஊறிப் போய் விட்டன. ஒரு விஷயத்தில் தீர்மானம் கொண்டு விட்டால் அப்புறம் அவரை அதிலிருந்து அசைக்கவே முடியாது. குலத் தொழில் பயிற்சித் திட்டத்தை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். முதல் மந்திரி வேலையை விட்டுவிடத் தயாராய் இருந்தாரே ஒழிய, அந்த அரை நேரப் பள்ளித் திட்டத்தை வாபஸ் வாங்க அவர் தயாராய் இல்லை. கிரிமினல் வழக்குகளில் திடீரென்று பாயின்டுகளைக் கிளப்பிப் பழக்கப்பட்ட ராஜாஜி, ராஜீய விஷயங்களிலும் திடீர் திடீரென்று கருத்துக்களை வெளியிட்டு மக்களைப் பிரமிக்க வைப்பதில் ரொம்ப ஆர்வங் கொண்டவர். சேலம் ஜில்லா மதுவிலக்கு,

மதுரை மீனுட்சியம்மன் கோவில் பிரவேசம், பாகிஸ் தான் கட்சியை ஒப்புக் கொண்டது, பாதி நேர கல்வித் திட்டம் இவையெல்லாமே அந்த ரகத்தில் வெளி யானவைதான். பாதி நேரக் கல்வித் திட்டத்தைச் சட்ட சபை காங்கிரஸ் கூட்டத்தில் முதலில் அவர் பிரேரித் திருப்பாராலுல் ஆட்சேபணை இல்லாமல் அது நிறை வேறி இருக்கும். ஆனுல், அப்படிச் செய்ய அவரது "திடீர் வெடிகுண்டு" சுபாவம் இடம் கொடுக்கவில்லை. அதனுல் கல்வி மந்திரிக்குக் கூட அதைச் சொல்லாமல் ரகசியமாய் வைத்திருந்து திடீரென்று ஒரு பொதுக் கூட்டத்தில் வெளியிட்டார். அப்படி வெளியிட்ட போதா வது உண்மையான காரணத்தைச் சொல்லி இருக்கக் கூடாதா? நாட்டில் எல்லாச் சிறுவர்களுக்கும் கல்வி போதிப்பதென்ருல் போதுமான பள்ளிக்கூடங்கள் இல்லை. இருக்கிற பள்ளிகளில் பாதி நேரம் ஒரு கூட்டம், மறு பாதி நேரம் மற்ருெரு கூட்டமாக முறை வைத்துச் சொல்லிக் கொடுப்பதென்ருல்தான் அரசியல் சட்டப்படி பத்துவருஷங்களுக்குள் எல்லாக் குழந்தைகளையும் பள்ளி களில் சேர்க்க முடியும். இதுதான் உண்மைக் காரணம். இதைச் சொல்ல ராஜாஜிக்கு இஷ்டமில்லை. சொல்லி யிருந்தால் எதிர்ப்பே இருந்திருக்காது. அதைச் சொல் லாதது மட்டுமல்ல; பாதி நேரத்தில் குலக் கல்வியைச் சொல்லிக் கொடுக்கப் போவதாக வேறு கூறி வைத்தார். இருக்கிற ஜாதிச் சண்டைகள் துவேஷங்களுக்கிடையில் ராஜாஜியின் குலக் கல்வித் திட்டம் பிரமாதமான எதிர்ப்பைக் கிளப்பி விட்டது. முதல் மந்திரி பதவியி லிருந்து அவரை விரட்ட விரும்பியவர்களுக்கு அந்தக் கிளர்ச்சி பெரிய ஆயுதமாக உபயோகப்பட்டது. பிரபல

கிரிமினல் வக்கீலாய் இருந்த பழைய வாசனையை மற்ெருரு விஷயத்திலும் காணலாம். எந்தப் பொதுக் கூட்டமாய் இருந்தாலும் சரி. அது எதற்காகக் கூட்டப்பட்டதோ அதற்கு நேர் விரோதமாய்ப் பேசுவார்; அல்லது தமக்கு முந்தியவர் என்ன பேசினரோ அதை மறுக்கிற விதத்தில் பேசுவார். கிரிமினல் வழக்குகளில் எதிர்க் கட்சி சொல்லுவதற்கு விரோதமாகப் பாயின்டுகளை எடுத்து வீசிவீசி ஏற்பட்ட பழக்கம் ராஜீய விஷயங்களிலும் அவரை விடவில்லை.

கூட்டாகப் பலருடன் சேர்ந்து, அபிப்பிராயங்களை விவாதித்து, விட்டுக் கொடுத்து வேலை செய்வது ராஜாஜியால் முடியாது. தாம் சொல்லுவதை ஆட்சேபணையில்லாமல் மற்றவர்கள் ஒப்புக் கொள்ள வேண்டும் என்ற மனோபாவமுள்ளவர். இதனல், தாசாதி தாசனுக இருந்தாலொழிய ராஜாஜியிடம் யாரும் பழக முடியாது. ஜனநாயகம் என்பதிலோ, மற்றவர்களுக்கும் புத்தி உண்டு என்பதிலோ அவருக்கு அவ்வளவு நம்பிக்கை கிடையாது. அதனல் எப்பொழுதுமே அவருக்குக் காங்கிரஸ் கட்சியில் கீழிடங்களில் ஆதரவே கிடையாது. மேலிடத்தாரின் ஆதரவைக் கொண்டே காரியங்களை நடத்துவார். மேலிடத்தார்தான் எவ்வளவு தூரம் ஆதரவு கொடுக்க முடியும்? ஆகவே, மேலிடத்தார் ஆதரவின் எல்லையைத் தாண்டியதும் அடுத்தபடியாக ராஜாஜி தோல்வியையே அடைய வேண்டி இருக்கும். 1946-ஆம் வருஷத்தில் மகாத்மாவே விரும்பியும் அவருக்கு முதல் மந்திரி பதவி கிடைக்காமல் போனதற்கும், ஜவஹர்லால் நேருவே விரும்பியும் அவருக்குக் குடியரசு பிரஸிடென்ட் பதவி கிடைக்காமல் போனதற்கும்,

ஜவஹர்லாலின் ஆதரவிருந்தும் 1954-இல் அவர் முதல் மந்திரி பதவியிலிருந்து விலக நேரிட்டதற்கும் மேலே சொல்லிய குணங்களே காரணம்.

1942-ஆம் வருஷத்தில் இராமநாதபுரம் ஜில்லா திருவாடானை பகுதியில் போலீஸ் அட்டூழியம் அதிகமாய் இருந்ததால் அதைக் கவர்னரிடம் தெரிவிப்பதற்கு ராஜாஜியைப் பார்க்கும்படி ஒரு நண்பர் எனக்கு எழுதியிருந்தார். அதன்படி ராஜாஜியைப் பார்த்தேன். ஆகஸ்ட் புரட்சியை ஒப்புக் கொள்ளாமல் அவர் காங்கிரசிலிருந்து விலகியிருந்த காலம். என்றாலும், தம்மால் கூடிய உதவிகளைச் செய்து வந்தார். 'குலசேகரபட்டணம் கொலை வழக்'கிலும் அப்பீல் விஷயமாக அவரைப் பார்த்தேன். அவரால் சாத்தியமான உதவிகளைச் செய்தார். 'ஆகஸ்ட் புரட்சிக்கும் தமிழ் நாட்டுக்கும் சம்பந்தம் இல்லை என்று பல காங்கிரஸ்காரர்கள் கையெழுத்தோடு அறிக்கை வெளியிட்டால் என்ன?' என்று என்னிடம் கேட்டார். அவர் யோசனைக்கு எந்தக் காங்கிரஸ்காரரும் ஆதரவு கொடுக்க முன் வரவில்லை. 1944-இல், 'தினசரி' பத்திரிகையை ஆரம்பிப்பதற்காக இந்திய சர்க்காரிடம் நான் அனுமதி கோரி இருந்தேன். அச்சமயமும் " ஆகஸ்ட் புரட்சியை எதிர்ப்பதற்காகப் பத்திரிகை ஆரம்பிப்பதாகச் சொல்லு, அனுமதி வாங்கித் தருகிறேன்" என்று ராஜாஜி கூறினார். " அம்மாதிரி சொல்லி அனுமதி வாங்கிப் பத்திரிகை நடத்துவதை நான் விரும்பவில்லை" என்று பதில் சொன்னேன். ஒரு காரியத்தை எடுத்தால் பிடிவாதமாக அதைப்பற்றிப் பேசிக்கொண்டே இருப்பது ராஜாஜியின் சுபாவம் என்பதைக் காட்டுவதற்காகவே இந்த உதாரணங்களைச் சொல்லுகிறேன்.

1946-ஆம் வருஷத்தில் அவர் முதல் மந்திரியாக வரக் கூடாது என்ற கிளர்ச்சியில் நானும் சம்பந்தப் பட்டிருந்தேன். 1942-ஆம் வருஷத்தில் நெருக்கடியான கட்டத்தில் காங்கிரசிலிருந்து விலகிப் போனவர், காங்கிர சோடு பிரிட்டிஷ் சர்க்கார் சமரசம் பேச ஆரம்பித்தவுடன் மேலிடத்தாரின் தயவால் மீண்டும் காங்கிரசுக்குள் வந்து சேர்ந்தது எல்லாக் காங்கிரஸ்காரருக்குமே கோபத்தை உண்டு பண்ணியது. இங்கே ஸ்தலத்திலுள்ள காங்கிரஸ் காரர்களுடன் அவர் தொடர்பு கொண்டு அவர்கள் மூலம் காங்கிரசுக்குள் வந்திருந்தால், அவருக்கு அவ்வளவு எதிர்ப்புத் தோன்றி இருக்காது. அவர் அப்படிச் செய்யா மல் காங்கிரஸ் பிரஸிடென்ட் மௌலானா அபுல்கலாம் ஆஸாத்திடமிருந்து அநுமதி வாங்கினார். இங்குள்ள காங்கிரஸ்காரர்கள்மீது அவருக்கு அவ்வளவு அலட் சியம். அதனால், ஸ்தல காங்கிரஸ்காரர்களும் அவரிடம் அலட்சியம் காட்டினார்கள். கிளர்ச்சி தீவிரமாய் நடந் தாலும், அவர் விரும்புகிற வேளைகளில் நான் அவரைப் போய்ப் பார்ப்பதுண்டு. அம்மாதிரி ஒரு சமயம் பேசிக் கொண்டிருந்தபோது என்னுடைய அபிப்பிராயத்தைக் கேட்டார். நான் பின் வருமாறு சொன்னேன்:

"காங்கிரஸ்காரர்களுக்கு உங்கள் மீதுள்ள கோபத் திற்கு ஒரு போக்குக் காட்டி ஆக வேண்டும். மேலிடத் தாரின் ஆதரவைக் கொண்டு நீங்கள் மீண்டும் முதல் மந்திரியாக வந்து விட்டால் அது தங்களுக்குத் தோல்வி என்று அவர்கள் நினைக்கிறார்கள். இதைச் சமாளிக்க எனக்குத் தோன்றுவது ஒரே வழிதான்: சட்ட சபை ராஜீயத்திலிருந்து விலகிக் கொள்ளுவதாக ஓர் அறிக்கை வெளியிட்டு விட்டு விலகிக் கொள்ளுங்கள்.

அப்படிச் செய்தால் உங்களை எதிர்ப்பவர்களின் ஆத்திரம் அதோடு போய் விடும். பின்னால் மந்திரி சபை அமைக் கிற சமயத்தில் உங்களை எல்லாரும் வருந்தி அழைப்பார் கள். ஏனெனில், பிரகாசத்திற்கு மெஜாரிட்டி ஆதரவு இருக்காது.''

இதைப் பற்றிக் கொஞ்ச நேரம் ராஜாஜி விவாதித் தார். ஒரு மணி நேரத்தில் அவர் ரயில் ஏறி வெளியூர் போக வேண்டி இருந்தது. அதனால் அவருடைய கட்சி யைச் சேர்ந்த ஒருவர் பெயரைக் குறிப்பிட்டு, அறிக் கையைத் தயாரித்து அவரிடம் காட்டும்படியும், அவர் சம்மதித்தால் வெளியிட்டு விடும்படியும் சொன்னார். இந்த யோசனை எனக்குத் திருப்தியாய்ப் படவில்லை. ஏனெனில், தலைவர் சம்மதித்தாலும் சீடர்கள் சம்மதிக்க மாட்டார்கள். அதுதான் உலக வழக்கம். ஆகவே, ராஜாஜி சொல்லிய சீடரை நான் பார்க்கவே இல்லை. மேலும், நான் சொல்லிய வழியை அவர் ஒப்புக்கொண் டிருந்தால் சீடரைப் பார்க்கும்படி என்னிடம் அவர் சொல்லியிருக்கவும் மாட்டார். அதனால்தான் வெளியூரி லிருந்து அவர் திரும்பிய பின்பு இதைப் பற்றி என்னிடம் அவர் பேசவும் இல்லை. ஆனால், அந்தச் சமயத்தில் அந்த வழியில் அவர் நடந்திருந்தால் 1946-இல் அவரே முதல் மந்திரியாய் வந்திருப்பார் என்பது என்னுடைய அசைக்க முடியாத நம்பிக்கை.

ராஜாஜி செய்கிற காரியங்கள் சில சமயங்களில் மக்களுக்குப் பிடிக்காமல் இருக்கலாம். என்றாலும், அவர் தமிழ் நாட்டிற்குச் சிங்கத்தைப் போல நின்று பலமும் பெருமையும் கொடுக்கக் கூடியவர். அவருடைய செய்

கைகள் நல்லவைகளாக இருந்தாலும் அவர் அவற்றிற்காகக் கையாளும் முறைகளும், பேசும் பேச்சுக்களும் அவற்றிற்கு எதிர்ப்பை உண்டு பண்ணி விடுகின்றன. அவருக்கு உடலும் மனமும் தெம்பாய் இருக்க வேண்டுமானால், அதற்கு வழி ஒன்றே ஒன்றுதான் : அதாவது, அவர் முதல் மந்திரியாய் இருக்க வேண்டும். அவருடைய மனோ நிலைமைக்கு அது ஒன்றுதான் அவருக்குச் சிறந்த டானிக்!

# 3. காமராஜ்

உப்புச் சட்ட மறுப்புக்கு முன்னுல் உள்ள காலத்தில் விருதுநகரில் காங்கிரஸ் சம்பந்தமான வேலைகளில் முத்துச்சாமி, காமராஜ் என்ற பெயர்கள் சேர்ந்தே அடிபட்டுக்கொண் டிருக்கும். எங்குச் சென்ருலும் இருவரும் ஒன்ருகவே போவார்கள். இருவரில் யார் முத்துச்சாமி, யார் காமராஜ் என்று எனக்குத் தெரியாமலேயே இருந்து வந்தது. அந்தச் சந்தேகம் 1923 அல்லது 1929-இல் அவர்கள் இருவரையும் ' தமிழ் நாடு ' காரியாலயத்தில் நான் பார்த்த பின்புதான் தீர்ந்தது. இருவரும் போகிற இடங்களில் முத்துச்சாமிதான் பேசிக்கொண்டே இருப்பார். காமராஜ் பேசவே மாட்டார். அவர் பேசாமல் மௌனமாய் இருப்பது கொஞ்ச நேரத்திற்குத்தான் என்று நினைக்கவேண்டாம். மணிக்கணக்காகப் பேசாமல் இருக்கவேண்டுமானுலும் இருப்பார். அவருடைய பலத்

திற்கு அந்தச் சாதனை ஒரு நல்ல உதவியாய் அமைந்திருக்கிறது. 1945-க்கு முன்னால் காமராஜூக்கும் எனக்கும் நெருங்கிய தொடர்பு கிடையாது. சத்தியமூர்த்தி காலத்தில் காமராஜ், சத்தியமூர்த்தி கோஷ்டியில் இருந்தார். நான் ராஜாஜி கோஷ்டியில் இருந்தேன். இதனால் காமராஜூடன் நெருங்கிய தொடர்பு எனக்கு ஏற்பட அவசியமில்லாமல் போயிற்று. 1945-இல் நிலைமை மாறியது. காங்கிரஸ்காரர்கள் ஜெயிலிலிருந்து விடுதலையானார்கள். ராஜாஜியோ காங்கிரசை விட்டு முன்பே விலகி விட்டார். சத்தியமூர்த்தியும் அகால மரணமடைந்து போனார். காமராஜ்தான் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டிக்குப் பிரஸிடென்டாய் இருந்தார். அவரைத் தீவிரமாய் ஆதரிப்பதா, இல்லையா என்ற பிரச்சினை எனக்கு ஏற்பட்டது. 1942 ஆகஸ்ட் போராட்டத்தில் சேராமல் ராஜாஜி காங்கிரசிலிருந்து விலகி விட்டதால் அவரை மீண்டும் காங்கிரசில் சேரவிடக் கூடாது என்ற கருத்து காங்கிரஸ்காரர்களில் பெரும்பாலோருக்கு இருந்தது. ஆனால், அவர்கள் கட்சியை ஆதரிப்பதற்கு ஒரு பத்திரிகை வேண்டும். நான் நடத்தி வந்த 'தினசரி' ஒன்றுதான் அவர்களுக்கு உதவி செய்யக் கூடிய நிலைமையில் இருந்தது. அதனால் அந்தக் கட்சிக்கு ஆதரவு கொடுப்பது என்று தீர்மானம் செய்தேன். இதற்குப் பூர்வாங்கமாகக் காமராஜ் ஜெயிலிலிருந்து விடுதலையான மறுநாள் அவருக்கு ஒரு வரவேற்பு விருந்து நடத்தினேன். அது முதல் 'தினசரி' பத்திரிகை நிற்கிறவரையில் அவர் சென்னையில் இருக்கும்போதெல்லாம் அநேகமாய் தினம் ஒரு தடவையாவது இருவரும் சந்திப்பதுண்டு. காமராஜ் - ராஜாஜி தகராறில் காமராஜ் கட்சியைத் 'தினசரி' தீவிரமாய் ஆதரித்து

வந்தது. 1946 அசெம்பிளி தேர்தலில் காமராஜ் கோஷ்டி, ராஜாஜி கோஷ்டி இரண்டுமே என்னைத் தென்காசித் தொகுதிக்கு அபேட்சகராய்ச் சிபார்சு செய்தார்கள். ஆனால், சர்தார் பட்டேல் என்னுடைய பெயரை நீக்கி விட்டார். ராஜாஜி - காமராஜ் தகராறில் நான் எழுதிய தலையங்கங்களை மொழிபெயர்த்துச் சர்தார் பட்டேலுக்கு ராஜாஜியின் நண்பர்கள் அனுப்பி யிருந்தார்கள். அவற்றைப் படித்துப் பார்த்த சர்தார் பட்டேல் என்னுடைய பெயரை ஒப்புக் கொள்ள முடியாது என்று சொன்னார். காரைக்குடி ராம விலாஸ் சொக்கலிங்கஞ் செட்டியாரும் அச்சமயம் ஓர் அபேட்சகர். அவர் ராஜாஜி கோஷ்டியில் இருந்தார். அப்படியிருந்தும் அவர் பெயரும் அடிபட்டுப் போயிற்று. இரண்டு சொக்கலிங்கங்கள் இருந்ததால் நான் எந்தச் சொக்கலிங்கம் என்பது பட்டேலுக்குச் சந்தேகமாய் இருந்தது. சந்தேகத்திற்கு இடம் வேண்டாம் என்பதற்காக இரண்டு சொக்கலிங் கங்களையுமே ஜாபிதாவிலிருந்து நீக்கினார். ஜாபிதாவைப் பரிசீலனை செய்த காலத்தில் நானும் காமராஜும் பம்பாயில் இருந்தோம். தம்மை வந்து சந்திக்கும்படி சர்தார் பட்டேல் காமராஜுக்குச் சொல்லியனுப்பினார். காமராஜ் ஒப்புக் கொள்ளவில்லை. பரிசீலனை முடிந்த பின்பு சந்திப்பதாகக் காமராஜ் பதிலளித்தார். என்னுடைய பெயரை எடுத்து விட்டதாக ஸ்ரீ. பக்தவத்சலம் மூலம் விஷயம் தெரிந்ததும் காமராஜ் மிகுந்த வருத்த மடைந்தார்; தாமும் தேர்தலுக்கு நிற்காமல் விலகி விடுவதாகச் சொன்னார். அப்படிச் செய்யக் கூடாதென்றும், என் பெயரை நீக்கி விட்டதால் எனக்கு வருத்த மில்லை என்றும் நான் வற்புறுத்திச் சொன்ன பின்பு அவர்

தேர்தலில் நிற்க ஒப்புக் கொண்டார். பின்னல் அரசியல் நிர்ணய சபைக்குத் தேர்தல் நடந்த போதும் எனக்கு ஒரு ஸ்தானம் கொடுப்பதாகக் காமராஜ் சொன்னர். 'தினசரி' யை ஆரம்பித்ததிலிருந்தே அதன்மீது வழக்குகள் ஏற்பட்டுப் பல தொந்தரவுகள் இருந்து வந்தபடியால், நான் சென்னையை விட்டு டில்லிக்குப் போய் நீண்ட காலம் இருப்பதென்பது சாத்தியமில்லாமல் இருந்தது. அரசியல் நிர்ணய சபைக்குப் போகக் கோயங்காவும் விரும்பிக்கொண் டிருந்தார். நான் ஒப்புக் கொண்டால் கோயங்காவுக்கு ஸ்தானம் கிடைப்பது கஷ்டம். அதனல் அவரே போகட்டும் என்று நினைத்தேன்.

காமராஜும் நானும் அடிக்கடி சந்தித்து வந்ததால் நான் சொல்லுவதையெல்லாம் காமராஜ் கேட்பார் என்று பலர் நினைத்தார்கள். அது தவறு. காமராஜும் நானும் பொது விஷயங்களைப்பற்றிப் பேசிக் கொள்ளுவோம். அவ்வளவுதான். ஒரே ஒரு விஷயத்தைத் தவிர வேறு எதிலும் இதைச் செய்யவேண்டும் என்று நான் அவரிடம் சொல்லியது கிடையாது. அம்மாதிரியே சொன்னலும் அவர் கேடகக் கூடியவரல்ல. யார் என்ன சொன்னலும் தமக்குச் சரியென்று தோன்றுகிறதைத்தவிர வேறு எதையும் அவர் செய்ய மாட்டார். நான் அவரிடம் வற்புறுத்திய விஷயம் அவர் முதல் மந்திரியாய் வரவேண்டும் என்பது ஒன்றேதான். 1946-ஆம் வருஷத்தில் ஸ்ரீ. முத்துரங்க முதலியாரைச் சட்ட சபைக் காங்கிரஸ் கட்சித் தலைவராய்த் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற பேச்சு நடந்த போது, நான் பல தடவைகளில் பிரகாசத்தைச் சந்தித்திருக்கிறேன். பிரகாசத்தை முதல் மந்திரியாகப் போடக்

கூடாது என்று மகாத்மா சொல்லி விட்டார். ஆகவே, அவருக்குக் காமராஜ் ஆதரவு கொடுக்க முடியாது. அத னுல்தான் முத்துரங்க முதலியாருக்கு ஆதரவு கொடுக் கும்படி பிரகாசத்திடம் கேட்டு வந்தோம். ஒரு நாள் பிரகாசம் பேசிக்கொண் டிருந்தபோது, "முதல் மந்திரி யாக நான் வருகிறேன்; அல்லது காமராஜ் வேண்டு மானுல் வரட்டும். எதற்காக முதலியாருக்குக் கொடுக்க வேண்டும்?" என்று சொன்னுர். அன்று அந்தப் பேச்சை விட்டுவிட்டு மறுநாள் பிரகாசத்திடம் மறுபடியும் பேசி னேன். "நீங்கள் சொன்னபடி காமராஜையே முதல் மந்திரியாக்கி விடுவோம்" என்று சொன்னேன். பிரகாசம் உடனே 'பல்டி' யடித்தார். "சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன். நான் எப்படி அதற்குச் சம்மதிக்க முடி யும்?" என்று சொல்லி விட்டார்.

ராஜாஜி மந்திரி சபை ராஜிநாமா செய்த சமயத்தில் காமராஜரே முதல் மந்திரியாக வரவேண்டும் என்று அவரிடம் வற்புறுத்தினேன். அவருக்கு அது இஷ்ட மில்லை. என்ருலும், சட்ட சபைக் காங்கிரஸ் கட்சியில் அவரையே தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள். தேர்தல் முடிந்ததும் நேராக என் வீட்டுக்கு வந்து, "உங்கள் விருப்பப்படியே நடந்து விட்டது" என்று சொன்னுர். என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவிப்பதற்காக அவருக்கு நான் மாலை சூட்டினேன். கட்சித் தலைவராக மட்டும் தாம் இருந்து கொண்டு, முதல் மந்திரியாக வேறு ஒருவரை நியமித்து விடலாம் என்று அவர் முயற்சி செய்து பார்த்தார். ஆனுல், மேலிடத்தார் அதற்கு ஒப்புக்கொள்ள வில்லை. அதனுல், அவர் முதல் மந்திரி யானுர்.

காமராஜுக்குப் பொறுமைக் குணம் அதிகமாய் உண்டு. ஆனால், அவருக்குச் சிறுமைப் பித்துக் கிடையாது. எந்தக் கூட்டத்திலும் கூச்சமில்லாமல் கலந்து கொள்ளுவார். யாராய் இருந்தாலும் சரி, தவறான காரியமாய் இருந்தால் அதை முகத்திற்கு நேராகச் சொல்லக் கூடிய தைரியம் உண்டு. ஆனால், அவரிடம் பெருமைப் பித்துக் கிடையாது. தமக்குப் பிடிக்காத கூட்டங்களிலோ, ஏற்பாடுகளிலோ கலந்து கொள்ள முடியாதென்று தாட்சண்யம் இல்லாமல் சொல்லுவார். ஒரு பெரிய பணக்காரர் சொல்லி விட்டார் என்பதற்காகத் தாட்சண்யம் காட்டுவதோ, அல்லது ஒரு தியாகி சொல்லி விட்டார் என்பதற்காக முறை தவறி ஒரு காரியத்தைச் செய்வது என்பதோ அவரிடம் கிடையாது. வருகிற பிரச்சினைகளைச் சமாளிப்பதில் அவர் கெட்டிக்காரர். புதிதாகப் பிரச்சினைகளை உண்டு பண்ணிக் கொள்ள அவர் எப்பொழுதுமே விரும்ப மாட்டார். யுத்த முறைகளில் வலுத் தாக்குதல், பாதுகாத்தல் என்று இரு முறைகள் உண்டு. இரண்டு முறைகளும் அவசியம்தான். ஆனால், இரண்டும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் முக்கியமானவை. எப்பொழுதும் வலுத் தாக்குதலிலோ அல்லது பாதுகாப்பிலோ இருந்து கொண்டிருக்க முடியாது. பாதுகாப்பு யுத்த முறையில் கை தேர்ந்தவர் காமராஜ். வலுத் தாக்குதல் பக்கம் அவர் போகவே மாட்டார். அது ஒன்றுதான் அவரிடமுள்ள குறை. பொது வாழ்க்கையில் அந்தக் குறையையும் கூடியவரையில் நிவர்த்தி செய்தால்தான் எல்லாக் காலங்களிலும் வெற்றிகரமாய்ச் சமாளிக்க முடியும்.

# 4. வ. வெ. சு. அய்யர்

ஸ்ரீ. வ. வெ. சு. அய்யர் ஒரு கல்விக் களஞ்சியம். அஞ்சா நெஞ்சு படைத்த புரட்சி வீரர். குழந்தைகளேயும் அதே மாதிரி கல்விக் களஞ்சியங்களாகவும், புரட்சி வீரராகவும் செய்வதற்காகச் சேர்மாதேவியில் அவர் ஒரு குருகுலம் ஆரம்பித்தார். ஆனல், வைதிகத்தை எதிர்க்கக் கூடிய துணிவு அவருக்கு ஏற்படவில்லே. மகாத்மா காந்தி ஆரம்பித்த சத்தியாக்கிரக ஆசிரமத்திலோ, மகா கவி தாகூர் ஆரம்பித்து நடத்திவந்த சாந்தி நிகேதனத்திலோ பந்திபோஜனத்தில் ஜாதி வித்தியாசம் பாராட்டவில்லே. வ. வெ. சு. அய்யரும் அம்மாதிரி செய்திருந்தால் அவர் ஆரம்பித்த குருகுலம் இன்று வளர்ந்தோங்கிப் பிரகாசமடைந்திருக்கும். தமிழ் நாட்டின் துரதிருஷ்டம் அப்படி நடக்காமல் போயிற்று. வ. வெ. சு. அய்யர் குருகுலம் ஆரம்பித்ததைத் தமிழ்நாடு மகிழ்ச்சியோடு வரவேற்றது. தமிழ்நாட்டிலுள்ள பல காங்கிரஸ்காரர்கள். தங்கள் குழந்தைகளேக் குருகுலத்திற்கு அனுப்பினர்கள். தமிழ் நாடெங்கும் நல்ல ஆதரவு இருந்தது. மலேயா,

பர்மா முதலிய நாடுகளில் வசித்துவந்த தமிழர்களும் ஏராளமாய் நன்கொடை கொடுத்தார்கள். பல தடவைகள் நான் ஆசிரமத்துக்குப் போயிருக்கிறேன். ஆசிரமத்தில் மானேஜராய் வேலை பார்த்து வந்தவர் பெயர் ஸ்ரீ. அனந்தகிருஷ்ணன். அவரும் நானும் பல ஊர்களுக்குப் போய்க் காங்கிரஸ் பிரச்சாரம் செய்திருக்கிறோம். அவர் குருகுல மானேஜராக வந்ததனால் நான் குருகுலத்திற்கு அடிக்கடி போகநேரிட்டது. அங்கேதான் ஸ்ரீ. வ. வெ.சு. அய்யரை முதன் முதலாகச் சந்தித்தேன். அந்தக் காலத்தில் பிராமணரும் பிராமணரல்லாதாரும் சமபந்தி போஜனம் செய்வதென்பது கிராமங்களில் சாத்தியமில்லாத காரியமாய் இருந்தது. பிராமணரல்லாதாருக்கு வெளித் திண்ணையில் இலைபோட்டுத்தான் பிராமணர் வீடுகளில் சாப்பாடு போடுவார்கள். அம்மாதிரி சாப்பிடுவதற்கு நான் சம்மதிக்க முடியாது. பிராமணரல்லாதார் வீடுகளில் பிராமணர்கள் சாப்பிட்டால் அத்தகைய பிராமணர்கள் செய்யும் பிரச்சாரத்தைக் கேட்கக் கிராமங்களில் பிராமணர்கள் வரமாட்டார்கள். பிரசாரகர்களில் பிராமணர்கள் பிராமணர் வீட்டிலும், பிராமணரல்லாதார் பிராமணரல்லாதார் வீட்டிலும் சாப்பிட்டுவிட்டுப் பிரச்சாரத்தை நடத்துவோமென்றால், அம்மாதிரி பிரிந்து சாப்பிடுவதில் எனக்கும் அனந்தகிருஷ்ணனுக்கும் சம்மதமில்லை. கிராமங்களில் ஹோட்டல்களும் அக்காலத்தில் கிடையாது. இதைப்பற்றி நானும் அனந்தகிருஷ்ணனும் யோசித்தோம். வைதிகக் கிராமங்களுக்குப் பிரச்சாரம் செய்யப்போனால் ஒருவர் வீட்டிலும் சாப்பிடக் கூடாதென்று முதலில் முடிவு செய்தோம். அடுத்தபடியாக, பொரிமாவையும் வெல்லத்தையும் எங்கள் கையுட

னேயே கொண்டு போவதென்றும், எங்கே பசி எடுக்கிறதோ அங்கே அதைச் சாப்பிட்டுக் கொள்ளுவதென்றும் ஏற்பாடு செய்தோம். வைதிகர்கள் காங்கிரஸ்காரர்களைப் பற்றித் தவருக நினைக்கக் கூடாதே என்ற ஒரே காரணத்திற்காகத்தான் நாங்கள் இந்த வழியை மேற்கொண்டோம். ஆகவே, சமபந்தி போஜனத்திற்குச் சாதகமான நிலைமை அக்காலத்தில் இல்லையென்பது உண்மைதான். என்றுலும், வ. வெ. சு. அய்யர் போன்ற தலைவர்கள், அந்த நியாயமற்ற வழக்கத்தைத் தகர்க்க வேண்டிய தலைவர்கள்கூட, அந்த வழக்கத்திற்கு அடிமையாய்ப் போனதைப் பார்த்தபோதுதான் தமிழ் மக்களுக்கு மனவருத்தம் ஏற்பட்டது. வ.வெ.சு.அய்யர் குருகுலத்தை ஆரம்பித்தபோது பந்தி வித்தியாசத்தை ஏற்படுத்தவில்லை. அவர் ஏற்படுத்தக் கூடியவருமல்ல. ஆனுல், அவருக்கு வந்துசேர்ந்த ஒரு வைதிகத் துணைவர் இந்த விஷயத்தை மெதுவாக நுழைத்துவிட்டார். ஸ்தல அபிப்பிராயம் அப்படி இருப்பதாக அந்தத் துணைவர் சொல்லி அய்யரின் உறுதியைத் தளர்த்திஞர். அந்தத் துணைவரின் போதனைக்கு அய்யர் உட்படாமல் இருந்திருக்கலாம். அல்லது வைதிக இடமான சேர்மாதேவியை விட்டு வேறு எங்காவது குரு குலத்தை மாற்றி இருக்கலாம். அய்யர் அப்படிச் செய்யவில்லை. அதனுல் ஒரு நல்ல ஸ்தாபனம் வளர முடியாமல் போயிற்று.

என்னைக் குருகுலத்தில் சேர்ந்து சேவை செய்யும்படி ஸ்ரீ. அய்யரும், அனந்தகிருஷ்ணனும் பல தடவைகள் என்னிடம் சொன்னுர்கள். ஒத்துழையாமை இயக்கம் நின்ற பின்பு தேச சேவையை எந்த விதத்தில் செய்வது என்று தெரியாமல் விழித்துக்கொண்டிருந்த காலம்.

என்றாலும், அந்தக் காலத்தில் குருகுல சேவை என் மனத்திற்குப் பிடிக்கவில்லை. பத்திரிகைத் தொழிலிலேயே என் மனம் சென்றுகொண்டிருந்தது. அதனால், குருகுலத்தில் சேராமல் 'தமிழ் நாடு' பத்திரிகையில் சேர்ந்தேன். நான் 'தமிழ் நாடு' பத்திரிகையில் இருந்த போதுதான் ஒரு நண்பர் தமது குழந்தையைக் குருகுலத்தில் சேர்க்கவேண்டும் என்று எனக்கு எழுதினார். ஆனால், சாப்பாடு விஷயத்தில் வகுப்பு வித்தியாசம் காட்டுவதாகக் கேள்விப்படுவதாகவும், அது உண்மையா என்றும் கேட்டிருந்தார். பந்தியில் வித்தியாசம் காட்டப்படுவது எனக்கு அதுவரை தெரியாது. அதனால், அனந்தகிருஷ்ணனுக்குக் கடிதம் எழுதிக் கேட்டேன். பந்தி வித்தியாசம் இருப்பது உண்மைதான் என்று அவர் பதில் எழுதினார். எங்களுக் கெல்லாம் அது பெரிய அதிர்ச்சியாய் இருந்தது. அன்றுதான் குரு குலக் கிளர்ச்சி ஆரம்பமாயிற்று. தமிழ்நாட்டு ராஜீயத்திற்கு அக்கிளர்ச்சி பெரிய அதிர்ச்சி வைத்தியமாக அமைந்தது.

மகாத்மா காந்தி சென்னைக்கு வந்திருந்தபோது இந்தக் கிளர்ச்சியை நிறுத்த அவர் ஒரு யோசனை சொன்னார். சமையல் செய்வதும் பரிமாறுவதும் பிராமணராய் இருக்கட்டும். ஆனால், பந்தி மட்டும் ஒரே பந்தியாய் இருக்கட்டும் என்று கூறினார். சமபந்தி போஜனத்திற்காகக் கிளர்ச்சி செய்து வந்த டாக்டர் நாயுடு கட்சியார் அதை ஒப்புக் கொண்டார்கள். ஆனால், அய்யர் ஒப்புக் கொள்ளவில்லை. அதனால், அந்தச் சமரசமும் பலிக்காமல் போயிற்று!

# 5. வ. உ. சி.

கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்களைப் பற்றித் தற்சமயம் தமிழ்நாடே அறியும். அக் காலத்தில் சுமார் 40 வருஷங்களுக்கு முன்னால் அவரைப் பற்றி அறியாதவர்கள் திருநெல்வேலி ஜில்லாவில் யாருமே கிடையாது என்று சொல்லலாம். அவருடைய சேவையைப் பற்றிய கதைகளை ரொம்ப ஆர்வத்தோடு அக்காலத்திய தேச பக்தர்கள் பேசிக் கொள்வார்கள். திருநெல்வேலி ஜில்லாவில் அக்காலத்தில் ஏற்பட்ட குழப்பங்களுக்கும், திருநெல்வேலி ஜில்லா கலெக்டர் ஆஷ் என்பவர் கொலை செய்யப்பட்டதற்கும் வ. உ. சி. யைப் பிரிட்டிஷ் சர்க்கார் ஜெயிலில் போட்டதுதான் காரணம். அக்காலத்திலெல்லாம் சென்னை மாகாணத் தில் தலைவர்கள் யார் என்றால், பிள்ளை, ஐயர் என்று இரண்டு பேர்களைத்தான் பிற மாகாணத் தலைவர்கள்

சொல்லுவார்கள். பிள்ளை என்றால், வ. உ. சி. ஐயர் என்றால், 'ஹிந்து', 'சுதேசமித்திரன்' போன்ற பத்திரிகைகளைத் தோற்றுவித்த ஜி.சுப்பிரமணிய ஐயர்.லோகமான்ய பாலகங்காதர திலகரின் நெருங்கிய சகாக்களில் ஒருவராய் இருந்தார் வ. உ. சி. எனவே, அவரைத் தரிசிக்க வேண்டுமென்ற அவா எனக்கு ஏற்பட்டிருந்ததில் ஆச்சரியமில்லை. ஆனால், அந்தத் தரிசனம் எதிர்பாராத விதத்தில் என் வீட்டிலேயே கிடைத்ததுதான் ஆச்சரியம்.

நான் வ. உ சி.-யைச் சந்தித்த காலம் ஒத்துழையாமை இயக்கம் நடந்துவந்த காலம். திலகர் காலமாய் விட்டார். திலகரின் சகாக்களும் கோஷ்டியாரும் ஒத்துழையாமையை ஆதரிக்கவில்லை. மகாத்மாவை ஒரு தலைவராகத் திலகர் கோஷ்டியார் ஏற்றுக்கொள்ளத் தயாராய் இல்லை. "திலகருடைய தலைமை எங்கே, இந்தக் காந்தி எங்கே?" என்பது அவர்களுடைய நினைப்பு. ஏதாவது மாறுதல் ஏற்படும்போது இம்மாதிரி எதிர்ப்பு இருப்பது சகஜம். புதிதாய்க் காங்கிரசில் வந்து சேருகிறவர்களைப் பழைய காங்கிரஸ்காரர்கள் மேலும் கீழும் பார்ப்பதை இன்றும் காணலாம். இதற்கு அந்த மாறுதலை விரும்பாத மனோபாவம்தான் காரணம். எனவே, காங்கிரஸ் மகாசபை சட்டசபை பகிஷ்காரத்தை நடத்திவந்த போதிலும் திலகர் கோஷ்டியார் அதை ஒப்புக்கொள்ளவில்லை. எனவே, அச் சமயம் டில்லி ராஜாங்க சபைக்குத் தேர்தலுக்கு நின்ற ஒரு சென்னை நண்பருக்கு வோட்டுகள் சேகரிப்பதற்காக வ. உ. சி. தென்காசிக்கு வந்தார். அந்த வோட்டுகள் தபால் மூலம் அனுப்பக்கூடிய வோட்டுகள்.

எனது சகோதரர் பெயரும் சிதம்பரம் பிள்ளை. வ. உ. சி.-யை ஜெயிலில் போட்டதன் காரணமாய் ஏற்பட்ட திருநெல்வேலி கலெக்டர் கொலை வழக்கில் சம்பந்தப்பட்டு ஜெயிலுக்குப் போனவர்களில் எனது சகோதரரும் ஒருவர். எனது சகோதரரும், அவரும் நண்பர்கள். எனவே, தென்காசிக்கு ரயிலில் வந்த வ. உ. சி. நேராக எங்கள் வீட்டுக்கே வந்தார். எனது சகோதரர் வரவேற்று உபசாரம் செய்தார். அச்சமயம் நான் வீட்டில் இல்லை. தென்காசியில் காங்கிரஸ் கமிட்டிக்கு நான் காரியதரிசியாய் இருந்தபடியால் சாப்பாட்டு நேரம் தவிர மற்ற நேரங்களில் நான் வீட்டில் இருப்பதில்லை. காங்கிரஸ் காரியாலயத்தில் தான் இருப்பேன். சாப்பாட்டுக்காக நான் வந்தபோது புது மனிதர் ஒருவர் கம்பீரமாய் வீற்றிருப்பதைப் பார்த்ததும் ஆச்சரியமடைந்தேன். எனது சகோதரர் அறிமுகப்படுத்தி வைத்தார். அப்புறம்தான் இவ்வளவு பெரிய தேசபக்தரை இவ்வளவு சுலபமாகத் தரிசிக்க அதிர்ஷ்டம் கிடைத்ததை நினைத்து என் மனம் பூரிப்படைந்தது.

வ. உ. சி. பேசுவது எப்பொழுதுமே வெட்டு ஒன்று, துண்டு இரண்டாய் இருக்கும். விளக்கெண்ணெய்ப் பேச்சே கிடையாது. கோபம் வந்தால் பிரமாதமாய் இருக்கும். ஆனால், தங்கமான மனம். வந்த கோபம் நொடியில் அமர்ந்துபோகும். ஒத்துழையாமை இயக்கம் நின்ற பின்பு காங்கிரஸ் பொதுக்கூட்டங்களில் எவ்வளவோ பேசியிருக்கிறார். என்றாலும், கூடிய வரையில் பொதுக்கூட்டங்களுக்குப் போக அவர் விரும்புவதில்லை. அதற்குக் காரணம், அவருடைய தீவிர தேசபக்தியே ஆகும். பிரசங்கம் செய்ய ஆரம்பித்துவிட்டால், அப்புறம்

அவருடைய ஆவேசத்தை அவரால் அடக்க முடியாது. கடைசியில் அந்தப் பிரசங்கம் ராஜத் துவேஷ குற்றத்தில் வந்து முடியும். அந்த மாதிரி அனுவசியமாகச் சிறைக்குப் போவதை அவர் விரும்பவில்லை. நாட்டிற்காக அவர் பட்ட கஷ்ட நஷ்டங்களுக்கு அளவே கிடையாது. ஆனல், மக்களின் ஆதரவைப் பற்றியோ சொல்ல வேண்டியதில்லை. பாரதியார் உயிருடன் இருந்தவரை எப்படி அலட்சியமாய் இருந்து, செத்த பின்பு மண்டபங்கள் கட்டினர்களோ, அதேமாதிரிதான் வ.உ.சி. -யிடமும் நடந்து கொண்டார்கள். ஆனல், கடைசி வரையில் அவருடைய மனத்தின் வேகம் மட்டும் கொஞ்சம்கூடக் குறையவே இல்லை. என்னைப் பார்த்ததும் அவர் சொன்ன வார்த்தைகள் இன்றும் என் மனத்தை விட்டு அகலவில்லை. அவர் சொன்னதாவது: "நீயோ, தீவிர காங்கிரஸ்காரன்; சட்டசபைகளைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்று சொல்லுகிறவன். நானே, சட்டசபைக்குள் போக வேண்டுமென்று சொல்லுகிறவன். ஏனப்பா எனக்கு வீட்டில் இருக்கக்கூட இடம் கொடுக்க மாட்டாயா ?"

அவர் தமாஷாய்த்தான் பேசினர். என்ருலும், கொள்கையில் உறுதி அவருக்கு எவ்வளவு இருந்ததோ, அதே உறுதியை மற்றவர்களிடமும் அவர் எதிர்பார்த்தார் என்பதை அவருடைய தமாஷ் பேச்சு நன்ருய் எடுத்துக்காட்டியது. அதன் பின்னல் பல தடவைகளில் வ. உ. சி.-யிடம் நெருங்கிப் பழகும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. புத்திரன் பேரில் தந்தைக்கு எவ்வளவு வாஞ்சை உண்டோ, அம்மாதிரி வாஞ்சையோடு என்னிடம் நடந்துவந்தார். அவருடைய சுயசரிதையைப்

பூர்த்தி செய்ய வேண்டுமென்று ஒரு நாள் அவரிடம் சொன்னேன். அச்சமயம், 'காந்தி' என்ற பெயரோடு நான் ஒரு பத்திரிகையை நடத்திவந்தேன். வ. உ. சி.-யும் சம்மதித்து இரண்டாம் பாகத்தை ஆரம்பித்துப் பூர்த்தி செய்தார். இரண்டாம் பாகம் ஆரம்பத்தில் அவர் எழுதியதாவது :

" உலகெலாம் புகழும்
நலனெலாம் அமைந்த
காந்திமா முனிவன்
ஏந்திய கொள்கையை
நிலனெலாம் பரப்புதற்(கு)
அவனற் பெயரால்
பத்திரிகை யொன்றை
எத்திசையும் செலுத்தும்
சொக்கலிங்கத் தூயோய் கேண்மோ!"

வ. உ. சி. எத்தனையோ கடிதங்கள் எழுதியிருக்கிறார். எனது பத்திரிகைக் கொள்கையைக் கண்டித்துக் கோபமாய்க்கூடப் பல தடவைகளில் எழுதியிருக்கிறார். என்றாலும், என்மீது இருந்த பிரியத்தில் மட்டும் என்றும் குறை ஏற்பட்டதில்லை. எல்லோரிடமும் அவர் சுபாவம் அதுதான். குறிப்பாகத் திருநெல்வேலி ஜில்லாவிலும், பொதுவாகத் தமிழ் நாட்டிலும், தேசபக்தியைத் தோற்றுவித்த மூல புருஷர்களில் அவரும் முக்கியமானவர். இந்தியரும் கப்பலோட்ட முடியும் என்று இந்தியாவுக்கு ஞாபகமூட்டி அந்த ஆசையை வளர்த்த மூல புருஷரும் அவர்தான். வ. உ. சி. - யைப் பற்றி எனக்குள்ள ஒரு வருத்தம் என்றும் மாறமுடியாதது. அவர் காலமாவ

தற்குச் சில தினங்களுக்கு முன்னுல் என்னைப் பார்க்க விரும்பினுர். ஆனுல், அந்த அவரது விருப்பம் அவர் காலமான பின்பே எனக்குத் தெரிவிக்கப்பட்டது. காரணம் எதுவாய் இருந்தால் என்ன ? அந்தச் சந்தர்ப்ப்த்தை யாரால்தான் இனித் தோற்றுவிக்க முடியும்?

# 6. பாரதியார்

உள்ளத்தில் உருவகமாகும் கனவுகளை அனுபவித்து அதிலேயே ஐக்கிய மாகிறவன்தான் உண்மையான கவி. அகராதிகளைப் புரட்டி வார்த்தைகளைப் பொறுக்கிப் போட்டு எழுதுகிறவர்களும் கவிகள் என்றுதான் சொல்லிக்கொள்கிருர்கள். ஆனல், அவர்கள் உண்மைக் கவிகள் அல்ல. எனவே, உண்மைக் கவிகளைப் பார்க்கும் போது இவர் என்ன துறவியைப்போல் இருக்கிருரே என்றுதான் எல்லோரும் சொல்லுவார்கள். அதாவது சாதாரண மக்களின் சம்பிரதாயங்களைப் பற்றி உண்மைக் கவிகளுக்குக் கவலையில்லை. தங்கள் கற்பனை உலகத் திலேயே அவர்கள் எப்பொழுதும் சஞ்சரித்துக்கொண் டிருப்பார்கள். இது காலஞ்சென்ற கவியரசர் சுப்பிர மணிய பாரதியாரிடம் எப்பொழுதும் விளங்கிக்கொண் டிருந்தது. வருகின்ற பாரதத்தை அவர் வாழ்த்தும் பாட்டில், "ஏறுபோல் நடையினுய் வா, வா" என்று கூறினர். அதையேதான் அவர் செய்கையிலும் காட் டினர். சிப்பாய் மாதிரி நிமிர்ந்துதான் நடப்பார்; வலப்

பக்கமோ, இடப்பக்கமோ திரும்பவேண்டுமானுல், 'ரைட் டர்ன், லெப்டர்ன்' போட்டு எப்படிச் சிப்பாய்கள் திரும்பு வார்களோ அம்மாதிரியேதான் திரும்புவார். சிப்பாய்கள் அம்மாதிரி நடந்தால் அது வேடிக்கையல்ல. ஆனுல், மற்றவர்கள் அப்படி நடந்தால் அது வேடிக்கையாகத் தானே இருக்கும்? அதனுல் அம்மாதிரி பாரதியார் நடந்து போவதைப் பார்த்து எல்லோரும் ஆச்சரியப்படு வார்கள். பாரதியார் தமது சிந்தனை உலகில், கவி உலகில் லயித்து ஒன்றுபட்டுப் போய்விட்டதால், பாரத நாட்டார் எப்படி நடக்க வேண்டுமென்று அவர் கனவு கண்டாரோ, அம்மாதிரியேதான் அவர் நடத்தையில் காட்டுகிருர் என்பது மற்றவர்களுக்கு எப்படிப் புரியப் போகிறது? அதனுல் அவர் ஓர் அதிசய மனிதராக மற்றவர்களுக்குத் தோன்றிவந்தார்.

1919-ஆம் வருஷம் ஆரம்பத்தில்தான் முதல் முத லில் நான் பாரதியாரைப் பார்த்தேன். அச்சமயம்தான் அவர் புதுச்சேரியை விட்டு வெளியே வந்தார். எனது சகோதரரும் அவரும் நண்பர்களானபடியால் புதுச் சேரியை விட்டுப் பாரதியார் வெளியே வந்ததும், சில தினங்கள் எங்கள் வீட்டில் வந்து தங்கினுர். பாரதியார் புதுச்சேரியில் இருந்தபோது எழுதிவந்த கதைகளையும், கவிதைகளையும், கட்டுரைகளையும் ஒழுங்காய்ப் படித்துவந் தேன். அவர் நடத்தி வந்த 'இந்தியா' என்ற பத்திரிகை யில் பிரசுரமான கார்ட்டூன்கள் என் மனத்தைப் பெரிதும் கவர்ந்தன. பாரதியாரின் பெருமையைப் பற்றிப் பூர்ண மாய் அறியக்கூடிய வயது எனக்கு அச்சமயம் இல்லை. ஆனுல், அவர் ஒரு பெரிய தேசபக்தர், புரட்சி வீரர் என்ற முறையிலேயே அச்சமயம் அவரைக் கருதினேன்.

எனக்கு ஒரு பாட்டு எழுதிக் கொடுக்கும்படி கேட்டேன். மறுபேச்சுப் பேசாமல் ஒரு காகிதத்தை எடுத்துத் தமது மணி மணியான எழுத்துக்களில், "ஜெயமுண்டு பயமில்லை மனமே" என்ற பாட்டை எழுதிக் கொடுத்தார். எதற்காக அந்தப் பாட்டைத் தேர்ந்தெடுத்தார் என்பதை நான் கேட்கவில்லை. ஒருவேளை அச்சமயம் என் வயதில் அந்தப் பாட்டுத்தான் எனக்கு அவசியம் என்று அவர் நினைத்திருக்கலாம்.

ஒரு நாள் எனது சகோதரர் தமது குழந்தையைப் பாரதியார் மடிமீது வைத்து ஆசீர்வதிக்கும்படி கேட்டுக் கொண்டார். பாரதியார் உடனே, "கொட்டடா ஜெய பேரிகை கொட்டடா" என்ற பாட்டைப் பாடினார். எந்தப் பாட்டையும் பாரதியார் உச்ச ஸ்தாயியில்தான் பாடுவார். அப்படி யிருந்தும் நல்ல வேளையாக, பாட்டு முடிகிற வரையில் குழந்தை அழவில்லை! குழந்தை எந்த வழியில் வளரவேண்டும், அதன் உள்ளத்தில் என்னென்ன பதியவேண்டும் என்று பாரதியின் கவிதா உள்ளம் சொல்லுகிறதோ, அது உடனே வெளிப்படு கிறது. நாம் சொல்லுவது குழந்தைக்குப் புரியுமா என்பதைப் பற்றி அவருக்குக் கவலையில்லை. குழந்தைக்கு எது அவசியம் என்று அவர் நினைக்கிறாரோ அதைச் சொல்லியாக வேண்டும். அங்கேதான் கற்பனையில் சதா லயித்திருக்கும் உண்மைக் கவியைப் பார்க் கிறோம்.

பாரதியார் தம்மோடு ஒரு வேலைக்காரப் பையனையும் அழைத்து வந்திருந்தார். அவன் சொந்தப் பெயர் என்ன என்பது எனக்கு ஞாபகமில்லை. பாரதியார் அவ னுக்குச் 'சமத்துவம்' என்று பெயரிட்டிருந்தார். ஒரு நாள்

எங்கள் வீட்டில் பாரதியாரும் சில நண்பர்களும் பேசிக் கொண்டிருந்தார்கள். எல்லாரும் நாற்காலிகளில் அமர்ந் திருந்தார்கள். சமத்துவம் ஏதோ வேலையாய்ப் போய் விட்டுத் திரும்பியவன் கீழே உட்கார்ந்தான். பாரதியார் அவனைப் பார்த்தார். "அடே, சமத்துவம்! நாற்காலி யில் உட்கார்" என்றார். அவன் நாற்காலியில் உட்காரத் துணியவில்லை. நடுங்கினான். பாரதி எழுந்து அவனைத் தூக்கி நாற்காலியில் உட்காரவைத்தார். அவர் அப்படிச் செய்தது மற்றவர்களுக்கு வேடிக்கையாய்த் தோன்றலாம். ஆனால், தமது கற்பனை உலகில் எப் பொழுதுமே லயித்துப்போயிருந்த பாரதிக்கு அப்படித் தோன்றவில்லை. சமத்துவத்தை உருவகப் படுத்திய அவருடைய கவிதை உள்ளம் எல்லாருக்கும் எல்லா இடத்திலேயும் சமத்துவத்தையே கண்டது.

ஸ்டார் கம்பெனி என்ற பெயரோடு நான் ஒரு கடை நடத்தி வந்தேன். ஒரு நாள் என் கடைக்கு வந்து அங்குள்ள சரக்குகளைப் பாரதியார் பார்வையிட்டார். துணி களைப் பார்த்தபோது, "தம்பீ, இந்தத் துணியில் கோட் தைத்தால் எனக்கு நன்றாய் இருக்கும்" என்றார். "எதில் வேண்டுமானாலும் தைத்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லித் தையற்காரனைக் கூப்பிட்டுத் தைக்கும்படி சொன்னேன். அந்தக் கோட்டுகள் தென்காசியைவிட்டு அவர் புறப்படுகிற வரையிலாவது அவரிடம் இருந்தனவா என்பது தெரியாது. அவர் சுபாவம் அப்படி. யார் கேட்டாலும் கொடுத்துவிடுவார். என் கடையில் அன்று பேசிக்கொண்டிருந்தபோது ஒரு விஷயம் சொன்னார். "தம்பீ, எனக்கு ஒரு லட்சம் ரூபாய் வேண்டும்" என்று சொன்னார். "எதற்காக?" என்று கேட்டேன். "எனது

கவிதைகளை அச்சிட்டு, புத்தகமாகப் போடவேண்டும்" என்று சொன்னார்.

நான்: அதற்கு அவ்வளவு பணம் செலவாகுமா?

பாரதியார்: என் புத்தகங்களை அமெரிக்காவில் அச்சிடவேண்டும்.

நான்: இங்கே அச்சிட்டால் என்ன?

பாரதியார்: உனக்குத் தெரியாது தம்பீ. உலகத்திலேயே அமெரிக்காவில்தான் சிறந்த முறையில் அச்சிடுகிறார்கள்.

நான்: அப்படியே இருந்தாலும் அதற்கு ஒரு லட்சம் ரூபாய் வேண்டியிருக்குமா?

பாரதியார்: 50 ஆயிர ரூபாய் அச்சுக் கூலி. இன்னும் 50 ஆயிரம் ரூபாய் சித்திரக்காரனுக்கு.

நான்: சித்திரக்காரன் எதற்கு?

பாரதியார்: என் பாட்டுகளுக்குச் சித்திரம் போட.

அன்று அவர் சொன்னது என் மனத்தில் பதிந்து போய்விட்டது. நான் பத்திரிகை உலகிற்கு வந்த பின்பு பாரதியார் பாடல்களுக்கு எப்படியாவது சித்திரம் போடவேண்டும் என்று நினைத்தேன். 1925-ஆம் வருஷத்தில் பிரசுரமான 'தமிழ் நாடு' பொங்கல் மலரில் பாரதியார் பாட்டுக்கள் சிலவற்றிற்குச் சித்திரங்கள் போட ஏற்பாடு செய்தேன். அதற்குப் பின்னால் தமிழ் நாட்டில் அந்த முறை வேகமாய்ப் பரவிவிட்டது. அதைப் பார்ப்பதற்குப் பாரதியார் உயிரோடு இல்லாவிட்டாலும் அவருடைய ஆத்மா திருப்தி யடையுமென்று நினைக்கிறேன்.

# 7. திரு. வி. க.

திரு. வி. க.-வை நினைக்கும்போது பெண்மை என்ற நினைப்பும் எனக்குத் தொடர்ச்சியாகவே ஏற்படுவதுண்டு. பெண்மைக் குணமே தம்மிடம் மிகுந்திருப்பதாக அவரே சொல்லுவார். ஒவ்வோர் ஆணிடமும் பெண்ணிடமும் ஆண்மையும் பெண்மையும் கலந்தே இருக்கும். அளவு தான் வெவ்வேறு விதத்தில் கலந்து தோன்றும். பெண்மை அல்லது மென்மை அதிகமாய் உள்ள ஆண் களுமுண்டு; ஆண்மை அல்லது பிடிவாதம் அதிகமாய்க் கொண்ட பெண்களும் உண்டு. திரு. வி. க.-விடம் பெண்மை அதிகமாய் இருந்தது. அவர் குரலும் இனி மையாகவே இருக்கும். ஆனல், ஹோம்ரூல் கிளர்ச்சி காலத்தில் அவர் எழுத்துக்கள் மட்டும் தேச பக்தி நெருப்பை ஜுவாலைவிட்டு எரியும்படி தூண்டிவிடக் கூடியதாய் இருந்தன. அவருடைய கட்டுரைகள் அக்காலத்தில் இனிமையோடு வீரம் கலந்ததாய் இருக் கும். 'நவ சக்தி'யை அவர் நடத்தி வந்தபோது அவ ருடைய கட்டுரைகள் முன்பு இருந்ததைப் போல அவ்

வளவு எளியதாய் இல்லை. இனிமையில் குறையவில்லை. ஆனால், நடை கொஞ்சம் கடினமாய்விட்டது.

தமிழ்நாட்டில் அக்காலத்தில் தேச பக்தியை வளர்த்தவர்கள் இரண்டே பேர்தான். ஒருவர், டாக்டர் வரதராஜுலு நாயுடு. மற்றொருவர், திரு.வி. க. இருவரிடமும் நெருங்கிப் பழகி இருக்கிறேன். திரு. வி. க. 'தேசபக்தன்' நடத்திவந்தபோது 'தேவிதாசன்' என்ற புனை பெயரில் நான் பல கட்டுரைகள் எழுதியிருக்கிறேன். இதனால் எனக்கும் அவருக்கும் தொடர்பு ஏற்பட்டது. இந்தத் தொடர்பினால்தான் திருநெல்வேலி ஜில்லா அரசியல் மகாநாடு தென்காசியில் நடந்தபோது அவரைத் தலைமை வகிக்கச் செய்ய வேண்டுமென்று நான் விரும்பினேன். அவருக்குக் கடிதம் எழுதினேன். அவரும் சம்மதித்தார். மாகாண மகாநாடு மாதிரி மிகப் பெரிதாக மகாநாட்டை நடத்தினோம். தலைவர் ஊர்வலமும் பிரமாதமாய் இருந்தது. ஆனால், ஊர்வலத்தில் நாதஸ்வரமோ, 'பாண்ட்' வாத்தியமோ கிடையாது. வரவேற்புக் கமிட்டியின் தலைவராக ஒரு முஸ்லீமைப் போட்டிருந்தோம். மேளங்கள் வாசிப்பது இஸ்லாத்திற்கே விரோதம் என்று அவர் சொன்னார். அதனால், மேள வாத்தியங்கள் இல்லாமல் தேசீய கோஷத்தோடு ஊர்வலத்தை நடத்தினோம். மகாநாடு சிறப்பாக நடந்தது பற்றித் திரு. வி. க.-வுக்கு மிகுந்த சந்தோஷம்.

நான் பத்திரிகைத் தொழிலுக்கு வந்த பின்பு திரு. வி. க.-வின் கொள்கைளை எதிர்த்து எத்தனையோ தடவைகளில் எழுதியிருக்கிறேன். அவரும் என்னைத் தாக்கிப் பலமாய்ப் பேசியிருக்கிறார். என்றாலும், அவர்மீது இருந்த

மதிப்பும் பிரியமும் மட்டும் எனக்கு எக்காலமும் குறைந்த தில்லை. நேரில் பார்க்கும்போதெல்லாம் இனிமையாகவே பேசிக்கொள்ளுவோம். அவரிடம் எனக்கிருந்த வருத்த மெல்லாம் ஒன்றே ஒன்றுதான் : முக்கியமான பிரச்சினை களில் இப்படியோ அப்படியோ சொல்லாமல் பொதுப் படையாக அவர் பேசியது சரியல்ல என்று நினைத்தேன். ஆனால், அவருடைய பண்பட்ட உள்ளத்திற்குக் கண்டிப் பாய் இப்படியோ அப்படியோ பேசுவது பிடிக்கவில்லை. மிகுந்த தாட்சண்யம் உள்ளவர். அதனால் மக்கள் கஷ் டப்படுவதைக் கண்டு அவரால் சகிக்கமுடியாது. அவ ருடைய இந்த இளகிய மனம்தான் அவரைத் தொழி லாளர் கட்சியில் இருக்கச் செய்ததே ஒழிய, அரசியல் நோக்கமல்ல. இதனால் அவருடன் சேர்ந்து காங்கிரசில் வேலை செய்துவந்த இரண்டு நெருங்கிய நண்பர்கள் முதல் மந்திரிகளாய் இருந்த காலத்திலும்கூட தொழி லாளருக்குத் தலைமை தாங்கிச் சர்க்காருக்கு விரோதமாகத் தீவிரமாகப் போராட்டங்களை நடத்தினர். அந்த நண்பர் கள் ராஜாஜியும், ராமசாமி ரெட்டியாரும்தான் என்பதை நான் சொல்லவேண்டியதில்லை.

தென்காசியில் நடந்த மகாநாட்டிற்கு 1922-இல் அவர் வந்தபோதுதான் முதன் முதலில் திரு. வி. க. வைச் சந்தித்தேன். என்னைப் பற்றி அவர் நல்ல அபிப் பிராயம் கொண்டதாகவே அவருடைய சுயசரித்திரத்தி லிருந்து அறிகிறேன். நாங்கள் இருவரும் அடிக்கடி சந்திப்பதில்லை. என்றாலும், அவசியம் நேரும்போது எனக்குச் சொல்லியனுப்புவார். அவர் சொல்லியனுப்பும் விதமும் ஓர் அழகாய் இருக்கும். ரெட்டியார் முதல் மந்திரியாய் இருந்த காலத்தில் ஒரு சமயம் திரு. வி. க.-

வின் தொழிலாளர் கிளர்ச்சி மும்முரமாய் இருந்தது. சென்னையில் தடையுத்தரவு போட்டார்கள். அதை யொட்டித் திரு. வி. க.-வைக் கைது செய்வார்கள் என்ற வதந்தியும் பலமாய் இருந்தது. அச்சமயம் ஒரு நாள் 'தினசரி' நிருபர் அவரைப் பார்க்கப்போனர். அவரிடம் என்னை விசாரித்ததாகச் சொல்லச் சொன்னர். "அது மட்டும் சொன்னல் போதுமா, அல்லது உங்களைப் பார்க்க வேண்டும் என்று சொல்லவா ?" என்று நிருபர் கேட்டார். "நீ வேருென்றும் சொல்லவேண்டாம். எங்கள் இருவர் மனத்திற்கும் மனத் தந்திப் போக்குவரத்து உண்டு. நான் சொல்லியதை மட்டும் கூறு. அவருக்குத் தெரியும்" என்று திரு. வி. க. பதில் கூறினர். அதைக் கேட்டதும் நான் திரு. வி. க.-வை நேரில் சென்று பார்த்தேன். அவர் உடம்பு ரொம்ப பலவீனமாய் இருந்தது. அந்த நிலைமையில் அவரைச் சிறையில் வைப்பது ஆபத்தானது என்று எனக்குத் தோன்றியது. நல்ல வேளையாகச் சர்க்கார் அவரைச் சிறைக்கு அனுப்பவில்லை !

திரு. வி. க. சிறைக்குப் போனதேயில்லை. 1930-இல் நடந்த உப்புச் சத்தியாக்கிரகத்தில் அவரைக் கலந்து கொள்ள வைத்துவிட வேண்டுமென்று எனக்கு ரொம்ப ஆசையாய் இருந்தது. அதற்காக அவரைப் பார்த்துப் பேசினேன். வேதாரண்யத்தில் ராஜாஜி கைதியாய் விட்டபடியால் அங்கே திரு. வி. க. தலைமை ஏற்க வேண்டுமென்று சொன்னேன். அவரும் சம்மதித்தார். அவரை அனுப்புவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை யெல்லாம் செய்துவிட்டு அவரை ரயிலேற்றி அனுப்புவதற்காக அவர் வரவை எதிர்பார்த்திருந்தேன். நான் இருக்கும் இடத்திற்கு அவர் வந்துகொண் டிருந்தபோது

அவர் ஏறிவந்த ரிக்ஷா குடைகவிழ்ந்து அவர் கீழே விழுந்து காயமடைந்து போனதாக மறுநாள் எனக்குத் தெரிவித்தார். அதனுல் அச்சமயம் அவர் வேதாரண்யம் போகமுடியவில்லை.

பாரதியின் கையெழுத்தைப் பார்த்த பின்பு எழுத்துக்களைத் தனித்தனியாக மணி மணியாக எழுத வேண்டும் என்ற ஆவல் தமிழ்நாட்டு வாலிபர்களிடம் பரவியது. திரு. வி. க.-வின் கட்டுரைகளைப் படித்துப் படித்துத் தனித்தமிழில் பிழையற எழுதவேண்டுமென்ற ஆவல் வாலிபர்களிடம் மிகுந்தது. தமிழ் மொழியை முற்றிலும் மறந்திருந்த தமிழ்நாட்டில் மொழிப்பற்று ஏற்படும்படி முதன் முதல் செய்தவர் திரு. வி. க. மொழிப் பற்றும் அரசியல் பற்றும் கலந்து தமிழ்நாட்டில் வளரும் படி செய்த பெருமை திரு. வி. க.-வைச் சேர்ந்தது.

திரு. வி. க. காலமாவதற்குச் சில தினங்களுக்கு முன்னுல் அவரைப் போய்ப் பார்த்தேன். அச்சமயம் அவர் கண்பார்வை சரியாய் இல்லை. படுக்கையில் படுத்திருந்தார். நான் வந்திருக்கிறேன் என்று சொன்னதும் பக்கத்தில் உட்காரச் சொன்னுர். என் கைகளை நீட்டச் சொல்லித் தம் கைகளில் பிடித்துக் கொண்டார். 15 நிமிஷம் என் கைகளை அவர் விடவில்லை. என்மீது அவருக்கிருந்த அந்த அன்புப் பிணைப்பைப் பார்த்து என் மனம் உருகியது. சுமார் ஒரு மணி நேரம் பேசிக்கொண்டிருந்தோம். ஜோதிடத்தில் அவருக்குப் பயிற்சி உண்டு. எனக்கும் அதில் கொஞ்சம் அபிமானம் உண்டு என்பதை அவர் அறிந்ததும், என் ஜாதகத்தில் உள்ள கிரக நிலைகளைச் சொல்லக்கேட்டு அவற்றிற்குப் பலன்களைச் சொல்லிவந்தார். அவர் என்ன பலன்கள் சொன்னுர்

என்பது எனக்கு ஞாபகமில்லை. அவரிடம் பேசிக்கொண்டிருந்த ஆனந்தத்தில் அவற்றை மறந்துவிட்டேன். தமிழ்நாட்டின் புனருத்தாரணத்தைச் சிருஷ்டித்த சிங்கங்களில் அவர் ஒருவர். அவரைத் தமிழ்நாட்டுச் சரித்திரம் மறக்கவே முடியாது.

# 8. வ. ரா.

'பாரதி என்ன, ஒரு கவியா?' என்று கேட்டவர்களும் தமிழ் நாட்டில் உண்டு. 'பாரதியின் கவிதைகள் உண்மையில் கவிதைகளா ? அவை வெறும் வசனம்தானே' என்று சொன்னவர்களும் உண்டு. 'பாரதி ஒரு தேசீய கவியே ஒழிய, மகாகவியல்ல' என்று பத்திரிகைகளில் எழுதி வாதிட்ட எழுத்தாளர்களும் உண்டு. இவர்கள் எல்லாருமே பிற்காலத்தில், "ஆஹா, பாரதியார் எப்பேர்ப்பட்ட கவி! அவர் மகாகவியல்லவா ? அவர் கவிதைகள்தாம் எவ்வளவு உயர்ந்தவை!" என்று ஏகோபித்துப் பேசவும் எழுதவும் ஆரம்பித்தார்கள். 'எதனுல் அவர்கள் அப்படித் திரும்பினுர்கள்? அவர்களுடைய செங்கல் மண்டையில் பாரதியின் பெருமை எப்படி ஏறிற்று?' என்று கேட்கலாம். அந்த மகாப் பெரிய அற்புதத்தைச் செய்தவர் யார் என்று கேட்கலாம். அவர்தான் வ. ரா.

இன்றுள்ள பல எழுத்தாளர்களை எழுத்தாளர்களாக ஆக்கியது அவர்தான். விடாப்பிடியாகப் பாரதியின் பெருமையைப் பற்றிச் சுத்தியலைக்கொண்டு அடிப்பதைப் போல அடித்து அடித்துச் சொல்லிச் சொல்லி, எதிர்ப்பவர் எப்பேர்ப்பட்டவராய் இருந்தாலும் எதிர்த்துத் தீரமாய்ப் போராடிப் பாரதியின் பெருமையைத் தமிழ் நாட்டில் அவர் நிலைநாட்டினர். பாரதியின் கவிதைகளைப் படித்துத் தமிழ்நாடு பயன்பெற்றது. ஆனால், பாரதியின் கவிதைகளைப் படிக்குமாறு செய்தவர் வ. ரா. ஆகவே, கவிதைகளைப் படித்துப் பயன்பெற்ற தமிழ்நாடு யாருக்கு நன்றி செலுத்துவது ? பயன்கொடுக்கக்கூடிய கவிதைகளைச் சிருஷ்டித்த பாரதிக்கு நன்றி செலுத்துவதா ? அல்லது அந்தச் சிருஷ்டியின் அற்புதத்தை எடுத்துக்காட்டிப் பயன்பெறும்படி செய்த வ. ரா.-வுக்கு நன்றி செலுத்துவதா? என்னுடைய அபிப்பிராயத்தில் அந்த நன்றி என்பது பாரதி, வ. ரா. இருவருக்குமே சமமாகச் சேரவேண்டும் என்றே தோன்றுகிறது.

இராமாயணத்தை வால்மீகி எழுதினர். ஆனல், தமிழர் எல்லாரும் தெரிந்து கொள்ளும்படி செய்தவர் கம்பர். அதே மாதிரி கவிதைகளைப் பாரதி எழுதினர். அவற்றின் மகிமையை எல்லாரும் தெரிந்துகொள்ளும்படி செய்வதையே தமது வாழ்க்கையின் லட்சியமாகக் கொண்டு வ. ரா. உழைத்துவந்தார். வ. ரா. அந்த வேலையைச் செய்திருக்காவிட்டால் பாரதியின் பெருமை இன்று தமிழ்நாட்டில் பரவியிருப்பதைப்போலப் பரவி இருக்காது.

'வர்த்தக மித்திரன்' என்ற பெயரோடும், பின்னல் 'சுதந்திரன்' என்ற பெயரோடும் 35 வருஷங்களுக்கு முன்னல் தஞ்சையில் வ. ரா. ஒரு பத்திரிகை நடத்தி

வந்தார். அந்தப் பத்திரிகையில் வ. ரா. எழுதிவந்த பிரஞ்சுப் புரட்சி சரித்திரத்தைப் படித்த பின்பு வ. ரா.-வின் எழுத்துக்களில் எனக்குக் கவர்ச்சி ஏற்பட்டது. அக்காலத்தில் கவர்ச்சிகரமாய்த் தமிழில் எழுதக்கூடியவர்கள் மூன்றே பேர்தான்: ஒன்று, பாரதியார். மற்ருருவர், வ. ரா. மூன்ருமவர், டாக்டர் வரதராஜுலு நாயுடு. இவர்கள் மூவரும் முறையே 'சுதேசமித்திரன்', 'வர்த்தக மித்திரன்', 'பிரபஞ்ச மித்திரன்' ஆகிய பத்திரிகைகளில் எழுதி வந்தார்கள். மற்றவர்கள் எழுதுபவையெல்லாம் வழவழா கொழகொழா என்றுதான் இருக்கும். இந்த மூவர் எழுதும் கட்டுரைகளை விடாமல் விருப்பத்தோடு நான் படிப்பதுண்டு. அதன் பலனுக நானும் பத்திரிகை நடத்த வேண்டும் என்று ஒரு விருப்பம் எனக்குத் தோன்றியது. 1923-இல் சேலத்தில் நடந்துவந்த 'தமிழ் நாடு' பத்திரிகையில் போய்ச் சேர்ந்தேன். 'தமிழ் நாடு' பத்திரிகையில் 'தேவிதாசன்' என்ற புனை பெயரில் கதைகள் எழுதிவந்தேன். அச்சமயம் தமிழ் நாடு அரசியல் மகாநாடு சேலத்தில் நடந்தது. அதற்கு வ. ரா. வந்திருந்தார். ஒரு நாள் 'தமிழ் நாடு' காரியாலயத்திற்குத் திடீரென்று வ. ரா.விஜயம் செய்தார். என்னைப் பார்த்ததும், 'நீங்கள்தான் தேவிதாசனே?' என்ருர். இதே கேள்வியைத் தேசபக்தர் சுப்பிரமணிய சிவாவும், அதே தமிழ்நாடு ஆபீஸில் மற்ருரு நாள் கேட்டார். 'நான்தான் என்பது உங்களுக்கு எப்படித் தெரியும் ?' என்று நான் கேட்டேன். இருவரும் ஒரே பதிலைத்தான் சொன்னுர்கள். "உங்கள் நெற்றியில் உள்ள குங்குமப் பொட்டே உங்களைக் காட்டிக்கொடுத்தது" என்று சொன்னுர்கள்.

வ. ரா.-வைப் பார்த்ததில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. அவருடைய கட்டுரைகளைப் படித்து அவரிடம் மிகுந்த மதிப்புக் கொண்டிருந்தபடியால், எதிர்பாராமல் அவர் தரிசனம் கிடைத்தது மட்டற்ற மகிழ்ச்சியைக் கொடுத்தது. இளம் எழுத்தாளர்களை உற்சாகப்படுத்துவது வ. ரா.-வுக்கு இயற்கையாக உள்ள ஒரு குணம். அதையொட்டி என்னுடைய கதைகளையும் கட்டுரைகளையும் பிரமாதமாகப் புகழ்ந்தார். அவருடைய புகழ்ச்சியால் எனக்கு உச்சி குளிர்ந்தது. அன்று சேலத்தில் ஏற்பட்ட நட்பு அவர் காலமாகிற வரையில் நீடித்தது. இடையில் எத்தனையோ அபிப்பிராய பேதங்கள் இருவருக்கும் ஏற்பட்டதுண்டு. என்றாலும், அந்த அபிப்பிராய பேதங்களுக்கு அப்பால் அவர்மீது இருந்த மதிப்பும் நட்பும் மட்டும் என்றும் மாறியதில்லை.

1933-இல் 'காந்தி' என்ற பெயரோடு நான் பத்திரிகை நடத்தி வந்தபோது ஓர் இலக்கிய வாரப் பத்திரிகையை நடத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு ஸ்டாலின் சீனிவாசன் பம்பாயிலிருந்து சென்னைவந்தார். திருவையாறு சென்று வ. ரா.-வையும் அழைத்து வந்தார். ஒரு நாள் சென்னை ஹைக்கோர்ட் கடற்கரையில் நாங்கள் மூவரும் உட்கார்ந்து புதிய பத்திரிகைக்கு என்ன பெயர் வைக்கலாம் என்று யோசித்துக்கொண்டிருந்தோம். அச்சமயம் கோட்டை மீது பறந்துகொண்டிருந்த பிரிட்டிஷ்கொடியின் கயிறு அறுந்து கீழேவிழுந்தது. அது வீழ்ந்ததில் எங்களுக்குச் சந்தோஷம். "பிரிட்டிஷ் கொடி வீழ்ந்தது. இனி நமது கொடிதான் பறக்கப் போகிறது" என்று பேசிக்கொண்டோம். அச்சமயத்தில்தான் புதுப் பத்திரிகைக்கு 'மணிக்கொடி' என்றபெயர் உதயமாயிற்று.

1925-இல் தமிழ்நாடு காரியாலயம் சேலத்திலிருந்து சென்னைக்கு வந்தது. 'தமிழ் சுயராஜ்யா' என்ற பத்திரிகையில் வ. ரா. இருந்தார். இரண்டு காரியாலயங்களும் வெகு சமீபத்திலேயே இருந்தபடியால் அநேகமாய் தினசரி மாலை வேளைகளில் சந்தித்துப் பேசிக்கொண்டிருப்போம். புதுச்சேரியில் அவர் பாரதியோடும் மகான் அரவிந்தரோடும் பழகிய பல விஷயங்களைச் சொல்லிக் கொண்டிருப்பார். அவற்றையெல்லாம் கேட்பதற்கு எனக்கு ரொம்பப் பிரியமாய் இருக்கும்.

ஜஸ்டிஸ் கட்சி தோன்றுவதற்கு முன்பே இம்மாதிரி ஒரு கட்சி தோன்றும் என்று சொல்லியவர் வ. ரா. சமூக விஷயங்களில் அவ்வளவு தீர்க்க தரிசனம் அவருக்கு உண்டு. அவர் கட்டுரைகள் ஆழ்ந்த கருத்துக்கள் கொண்டவையாக இருக்கும். கோமாளித்தனமாக எழுதுபவை யெல்லாம் அவருக்குப் பிடிக்காது. 'பிரச்சினைகளைச் சிந்தித்து முடிவு செய்யும் உணர்ச்சி தமிழருக்கு வரவேண்டுமானால், ஆழ்ந்த கருத்துக்களைக் கொண்ட கட்டுரைகளைப் படிக்கும்படி செய்யவேண்டும்; கோமாளித் தனமாக எழுதி, பிரச்னைகளைத் தட்டிக் கழிக்கும்படி செய்யக் கூடாது' என்ற உறுதியான கொள்கை உடையவர். புதுமைப்பித்தனின் மேதையை வ. ரா.-தான் கண்டு பிடித்தவர். புதுமைப்பித்தனுக்கு உற்சாகம் கொடுத்து மேலும் மேலும் தூண்டிவிட்டவர் அவர்தான். அவரைச் சுற்றி எப்பொழுதும் இளம் எழுத்தாளர் கூட்டம் ஒன்று இருந்து கொண்டே இருக்கும். அவருடைய ஆதரவான மொழிகளைக் கேட்கும்போதெல்லாம் ஒவ்வொருவரும் தாங்கள் பெரிய எழுத்தாளர் என்று நினைக்கும்படி தன்னம்பிக்கை ஏற்படும். இம்மாதிரி வாலிபர்களை

ஆதரித்துத் தூக்கிவிட வேண்டியது அவசியம் என்று 'கலிஸ்தீனஸ்' என்பவர் அச்சமயம் 'மான்செஸ்டர் கார்டியன்' பத்திரிகையில் எழுதியது எங்களுக்குக் கிடைத்தது. அதைப் படித்த வ. ரா. தமது கொள்கை எவ்வளவு அவசியமானது என்று கூறிச் சந்தோஷ மடைந்தார். அந்தக் கட்டுரையைப் படித்தபின்பு, இளம் எழுத்தாளர்களோடு அவர் இருப்பதைப் பார்க்கும்போ தெல்லாம் " 'கலிஸ்தீனஸ்' வேலையா?" என்று நான் கேட்பேன். எங்கள் இருவருக்குத்தான் அது புரியும். மற்றவர்களுக்கு அது தெரியாது. அவர் கடகடவென்று சிரிப்பார். வ. ரா. மாதிரி கடகடவென்று பலமாகச் சிரிப் பவர்களை நான் பார்த்ததில்லை.

வ. ரா.-வின் எழுத்துக்களில் ஸ்டாலின் சீனிவாச னுக்கு ரொம்பப் பிரியம் உண்டு. வ. ரா.-வைப் பார்க்கும் போதெல்லாம், 'ஏதாவது எழுதுங்கள்; எழுதுங்கள்' என்று சொல்லிக்கொண்டே இருப்பார். ஆனல், வ. ரா. -வை எழுதும்படி வைப்பது சுலபமான காரியமல்ல. பத் திரிகை அச்சுக்குப் போகவேண்டும்; இனி,தாமதம் செய்ய முடியாது என்ற மாதிரி நெருக்கடி ஏற்பட்டாலொழிய அவர் எழுதமாட்டார். அவருடைய எழுத்தின் மதிப்பை அறிந்த ஸ்டாலின் சீனிவாசன் அவரிடமிருந்து நிறைய எழுதி வாங்கித் தமிழ்நாட்டுக்குச் சேர்த்துவிட வேண்டு மென்று எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தார். அவருடைய முயற்சிகள் அவ்வளவாகப் பலிக்கவில்லை!

" 'குமரி மலர்' பத்திரிகைக்கு உங்களைப் பற்றி ஒரு கட்டுரை எழுதித் தருவதாக ஒப்புக் கொண்டுவிட்டேன். எழுதப் போகிறேன்" என்று ஒரு நாள் வ. ரா. என் னிடம் சொன்னர். 'வேண்டாம்' என்று நான் சொன்

னேன். அவர் கேட்கவில்லை. அவரைத் தடுப்பதற்கு ஒரேவழிதான் உண்டு என்பது எனக்குத் தெரியும். அந்த வழியை உபயோகித்தேன். "உங்களைப்பற்றி நான் 'குமரி மல'ரில் எழுதுகிறேன். என்னைப்பற்றி எழுத வேண்டாம்" என்றேன். அப்புறம்தான், 'சரி' என்று வ. ரா. ஒப்புக்கொண்டார். நான் கொடுத்த வாக்குப் படியே 'குமரி மல'ரில் எழுதினேன். அதைப் படித்து மிகுந்த திருப்தியடையந்தார். ஆனால், அந்தத் திருப்தி வெகுநாள் நீடிக்கவில்லை. கொஞ்சகாலம் கழித்ததும், "நீங்கள் சுருக்கமாய் எழுதியது போதாது. விரிவாய் எழுதவேண்டும்" என்று சொன்னார். 'சரி' என்று ஒப் புக்கொண்டேன். ஆனால், அந்த வாக்குறுதியை இன் னும் நிறைவேற்ற முடியவில்லை!

# 9. டாக்டர் நாயுடு

தமிழ் நாட்டுக்கு டாக்டர் வரதராஜுலு நாயுடு இரண்டு நன்மைகள் செய்திருக்கிறார். அந்த இரண்டும் காற்றையும் தண்ணீரையும் போலத் தமிழ் நாட்டுக்கு இன்றியமையாதவை. ஒன்று, தேச பக்தி. மற்றொன்று, மொழிப் பக்தி. இரண்டும் ஒன்றிற்கொன்று ஆதார மானவை. தமிழ் நாட்டில் ஹோம்ரூல் கிளர்ச்சிக் காலத்தில் தேச பக்தியை வளர்த்தவர் டாக்டர் நாயுடு. ஊர் ஊராக அவர் சென்று செய்த பிரசங்கங்கள் மக்களுக்கு உணர்ச்சியை ஊட்டித் தைரியத்தை வளர்த்தன. அச் சமயம் மக்களுக்கு இருந்த அதைரியம் இவ்வளவு என்று சொல்ல முடியாது. அவ்வளவு மோசமாய் இருந்தது. போலீஸ்காரன் என்றால், ஒரே நடுக்கமும் ஓட்டமும்தான். அந்த நிலையில் இருந்த தமிழர்களுக்கு

டாக்டர் நாயுடு போலீஸ்காரனைக் கேலிசெய்து தாக்கிப் பேசியது பெரிய அதிசயமாய் இருந்தது. டாக்டர் நாயுடுவைப் பெரிய வீரராய்ப் போற்றினார்கள். அவருடைய பிரசங்கம் என்றால், ஆயிரக்கணக்காய்க் கூடுவார்கள். அவர் பிரசங்கங்களைக் கேட்டுக் கேட்டு மக்கள் தைரியம் அடைந்து சுயராஜ்ய ஆவலை வளர்த்து வந்தார்கள். அக்காலத்தில் தென்காசியில் முதன் முதலாக அவருடைய பிரசங்கத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டிய பொறுப்பு எனக்கு ஏற்பட்டது. அச்சமயம்தான் முதன் முதலாக டாக்டர் நாயுடுவைச் சந்தித்தேன். தென்காசியில் கோவில் மண்டபத்திற்கு முன்பாக அவருடைய பிரசங்கம் நடப்பதற்கு ஏற்பாடு செய்தோம். அவருடைய குரல் இனிமையாகவும், பேச்சு கம்பீரமாகவும், விஷயங்கள் தோதுவாகவும், தாக்குதல்கள் வீரம் செறிந்தனவாகவும் இருந்தன. அவ்வளவுதான், மக்களுக்கு ஒரே உற்சாகம் தோன்றியது. தமிழ் நாடெங்கும் அவர் சுற்றுப் பிரயாணம் செய்து மக்களுக்கு உற்சாகத்தைக் கிளப்பிவிட்டார். அவர் செய்த அந்தச் சேவையேதான் பின்னால் 1920-இல் மகாத்மா காந்தி ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பித்தபோது அதில் கலந்துகொள்ள மக்களைத் தயாராக்கி வைத்திருந்தது. தமிழ் நாடெங்கும் அச்சமயம் டாக்டர் நாயுடு ஒருவரே தலைவராய் விளங்கினார். அவர் பெயர் தெரியாத ஊரே கிடையாது.

மதுரையில் அவர் மீது நடந்த ராஜத்துவேஷ வழக்கும், அந்த வழக்கு சென்னை ஹைக்கோர்ட்டில் விடுதலையில் முடிந்ததும் அவருடைய செல்வாக்கைப் பிரமாதமாய்ப் பெருக்கின. அடுத்தாற்போல ஒத்துழை

யாமை இயக்கத்திலும் சரி, அதற்குப் பின்னுலும் சரி, தேசீய இயக்கத்தில் ஈடுபட்டுக் கஷ்ட நஷ்டமடைந்த காங்கிரஸ் ஊழியர்களுக்கு டாக்டர் நாயுடு சளேக்காமல் பண உதவி செய்து வந்தார். தமிழ் நாட்டில் அவருடைய பிரச்சார வழிகளே புது மாதிரியாய் இருந்தன, பிரச்சார வித்தைகளில் அவரை யாரும் அக்காலத்தில் மிஞ்ச முடியாது. திடீரென்று தடையுத்தர்வை மீறப் போவதாகக் கிளம்புவார்; வருமான வரியைக் கொடுக்க முடியாது என்று சொல்லுவார். இம்மாதிரியான காரியங்களால் மக்களின் உற்சாகம் குறைந்து விடாமல் காப்பாற்றி வந்தார். ஹோம்ரூல் கிளர்ச்சிக்கும், உப்புச் சத்தியாக்கிரகத்திற்கும் மத்தியில் தமிழ் நாட்டில் தலை சிறந்த தலைவராய் டாக்டர் நாயுடு விளங்கினுர். அந்தக் காலத்தில் ராஜீய விடுதலைக்கும், சமூக சீர்திருத்தத்திற்கும் அவர் செய்த சேவைகள் பிரமாதமானவை.

ஹோட்டல்களில் ஹரிஜனங்களுக்கு இடமோ, உணவோ கொடுக்க மறுப்பவர்களுக்கு இக்காலத்தில் ஜெயில் தண்டனை கிடைக்கும். அக்காலம் அப்படியல்ல. சமபந்தி போஜனம் கூட பிராமணரல்லாதாரோடு பிராமணர் செய்யக்கூடாது என்று சொல்லி வந்த காலம். அதற்காக டாக்டர் நாயுடு ஒரு போராட்டத்தையே நடத்தி வெற்றி பெற்ருர். தம்முடைய இல்லத்தில் ஒரு ஹரிஜன சமையல்காரரை வேலைக்கு அமர்த்தினுர். இவையெல்லாம் அக் காலத்தில் பெரிய புரட்சிகளாய் விளங்கின.

டாக்டர் நாயுடு முதலில் 'பிரபஞ்சமித்திரன்' என்ற வாரப் பத்திரிகையைத் திருப்பூரில் நடத்தி வந்தார். அப்புறம் 'தமிழ் நாடு' பத்திரிகையைச் சேலத்தில்

ஆரம்பித்தார். ‘பிரபஞ்சமித்திர’னும் ‘தமிழ் நாடு’ம்தான் அக்காலத்தில் மக்களின் உள்ளத்தைக் கவர்ந்த பத்திரிகைகளாய் இருந்தன. அவற்றின் மூலம் தமது பிரச்சாரத்தை வேகமாய் நடத்திவந்தார். ‘பிரபஞ்சமித்திர’னை நான் படித்து வந்தபோதுதான் பத்திரிகையில் எழுத வேண்டுமென்ற ஆசை எனக்கு ஏற்பட்டது. நானும் பத்திரிகைளுக்கு எழுதி அனுப்பிக்கொண் டிருந்தேன். பின்னுல் ‘தமிழ் நாடு’ பத்திரிகையில் சேவை செய்ய 1923-இல் சேலத்திற்குப் போனேன். ஒத்துழையாமை இயக்கத்தை மகாத்மா நிறுத்திய பின்பு என்னைப் போன்ற முழுநேர காங்கிரஸ் ஊழியர்களுக்குச் சோர்வு ஏற்பட்டது. உற்சாகமான காங்கிரஸ் வேலைகள் எதுவும் இல்லாதபடியால் பத்திரிகைக் காரியாலயத்தில் சேர்ந்தால் என்ன என்ற நினைப்பு எனக்குத் தோன்றியது. அச்சமயம் “உதவி ஆசிரியர்கள் தேவை” என்று ‘தமிழ் நாடு’ பத்திரிகையில் விளம்பரம் வந்தது. நானும் ஒரு மனு போட்டு வைத்தேன். அச்சமயம், அதாவது 1923 ஆரம்பத்தில், காங்கிரஸ் நிதிக்குப் பணம் திரட்டுவதற்காக டாக்டர் நாயுடு ஒரு சுற்றுப் பிரயாணம் ஆரம்பித்தார். ஜில்லா தலைநகருக்கு ஆயிரம் ரூபாய், தாலுகா தலைநகருக்கு ஐந்நூறு ரூபாய், மற்ற இடங்களுக்கு நூறு ரூபாய் வீதம் கொடுத்தால் அந்த இடங்களுக்குப் பிரசங்கம் செய்ய வருவதாய்ச் சொன்னுர். அதன் மூலம் சுமார் இருபத்தையாயிரம் ரூபாய் வசூல் செய்ததாக எனக்கு ஞாபகம். தென்காசியில் ஐந்நூறு ரூபாய் வசூல் செய்து கொடுத்து அவர் பிரசங்கத்திற்கு ஏற்பாடு செய்தோம். அவர் தென்காசிக்கு வந்திருந்தபோதுதான் நான் ‘தமிழ் நாடு’

MADURAI UNIVERSITY LIBRARY
46672

பத்திரிகையில் சேருவதென்று தீர்மானமாயிற்று. ஆகவே, நான் பத்திரிகைத் தொழிலில் சேருவதற்கு டாக்டர் நாயுடுதான் காரணம். அவர் அச்சமயம் என்னைச் சேர்க்காமல் இருந்தால் அதற்கான வாய்ப்பு எனக்குக் கிடைக்காமலே போயிருக்கும். அதைப் போலவே பத்திரிகைத் தொழிலில் என்னைப் பயிற்றுவித்ததும் அவரே தான். கட்டுரைகளிலும் மொழிபெயர்ப்புகளிலும் தமிழ் மரபே இருக்க வேண்டும் என்பதில் அவர் மிகவும் கண்டிப்பானவர். 'நீர்வீழ்ச்சி' என்று ஆங்கிலப் பதங்களை மொழிபெயர்ப்பதை அவர் அடியோடு விரும்பமாட்டார். அருவி என்ற தமிழ்ச் சொல்லையே உபயோகிக்க வேண்டும் என்பார். எழுத்துக்களை அநாவசியமாக அதிகரிப்பதையும் அவர் ஆட்சேபிப்பார். "மகாத்மாவின் பிரசங்கம்" என்பதை "மகாத்மா பிரசங்கம்" என்று போட்டாலே போதுமே என்று சொல்லுவார். "போலீசாரின் துப்பாக்கிப் பிரயோகம்" என்ற மாதிரி வார்த்தைகள் அக்காலப் பத்திரிகைகளில் அடிபடும். டாக்டர் நாயுடுவுக்கு அது பிடிக்காது. "துப்பாக்கிப் பிரயோகம்" என்று அவ்வளவு நீளமாக ஏன் எழுத வேண்டும். "போலீசார் சுட்டனர்" என்று போட்டாலே போதுமே என்று சொல்லுவார். ஆங்கிலத்தில் உள்ளதைப் படித்து மனத்தில் வாங்கிக்கொண்டு தமிழில் பிறருக்கு அதைச் சொல்லுவதென்றால் எப்படிச் சொல்லுவோமோ அம்மாதிரி எழுதவேண்டும் என்று சொல்லுவார். இம்மாதிரியாகப் பத்திரிகைத் தமிழில் அவர் செய்த சீர்திருத்தங்கள் ஏராளமானவை. நேராக மனத்தில் படும்படி எழுதவேண்டும் என்பதே அவருடைய கொள்கை. பேசுவதில் எப்படி மக்களைக் கவரும்படி

செய்து வந்தாரோ அதேமாதிரி எழுதுவதிலும் அவர் திறமையானவராய் இருந்தார்.

'தமிழ் நாடு' பத்திரிகை சேலத்தில் நடந்து வந்தபோது ஒவ்வொரு வாரமும் அவர் எழுதும் தலையங்கத்தைத் தந்தியில் வரவழைத்து, 'ஹிந்து' பிரசுரித்து வந்தது. அவ்வளவு செல்வாக்கு அவருக்கு இருந்தது. 'சுதேசமித்திர'னும் அவருடைய 'தமிழ் நாடு' கட்டுரைகளைத் தவருமல் வாரா வாரம் பிரசுரித்து வரும். கருத்துக்களை விளக்குவதற்காக அவர் கையாண்ட கதைகளும் உதாரணங்களும் அபூர்வமாய் இருக்கும். வெற்றிலை பாக்கோடு வாய் மணத்திற்காகப் போட்டுக் கொள்ளுவதற்கு 'ஜின்டான்' என்ற ஜப்பான் தாம்பூல மாத்திரை அக்காலத்தில் பிரபலமாய் இருந்தது. ஒத்துழையாமை இயக்கத்திற்கு விரோதமாக மகாகனம் சீனிவாச சாஸ்திரியாரைப் பிரிட்டிஷ் சர்க்கார் உபயோகித்து வந்தார்கள். இரண்டையும் உதாரணம் காட்டி டாக்டர் நாயுடு அச்சமயம் எழுதிய கட்டுரை எனக்கு இன்னமும் நன்ருய் ஞாபகத்தில் நிற்கிறது. "வயிற்றில் கோளாறு ஏற்பட்டால் வாயில் மணம் மாறுகிறது. அதை மறைப்பதற்காக 'ஜின்டான்' உபயோகமாகிறது. அதே மாதிரி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் வயிற்றில் கோளாறு ஏற்பட்டிருக்கிறது. அதை மறைத்து வெளியே பகட்டைக் காட்டுவதற்காகச் சாஸ்திரியை உபயோகிக்கிருர்கள்" என்று பொருள்படும்படியாக எழுதிஞர். அந்தக் கட்டுரைக்கு "ஜின்டான் சாஸ்திரி" என்று தலைப்புக் கொடுத்தார்.

தமிழ் நாட்டின் ராஜீய வாழ்விலும் சரி, பத்திரிகைத் தமிழ் வளர்ச்சியிலும் சரி, 1917 முதல் 1930 வரையில் டாக்டர் நாயுடு இணையில்லாத மகத்தான சேவை

செய்து தமிழ் நாட்டைப் பெருமைப்படுத்தி இருக்கிறார். அந்த அஸ்திவார வேலையைத் தமிழ் நாடு என்றென்றும் மறக்க முடியாது.

1923-ஆம் வருஷம் ஏப்ரல் மாதத்திலிருந்து 1931-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் முடிய நான் 'தமிழ் நாடு' பத்திரிகையில் சேவை செய்தேன். இந்த எட்டு வருஷ காலங்களில், 'தமிழ் நாடு' நடத்திய போராட்டங்கள் எத்தனையோ உண்டு. முக்கியமான பிரச்னை எதையாவது ஒன்றைத் 'தமிழ் நாடு' கிளப்பி மக்களுக்குச் சிரத்தை ஏற்படும்படி செய்துகொண்டே இருக்கும். ஹிந்துமத பரிபாலன போர்ட் என்ற இலாகா கோவில் நிர்வாகங்களைச் சரியாய் நடத்துவதற்கு எவ்வளவு அவசியமானது என்பதை இக்காலத்தில் எல்லாரும் அறிவார்கள். ஆனால், ஹிந்துமத பரிபாலன போர்ட் சட்டம் ஏற்பட்ட சமயத்தில் சில தினப் பத்திரிகைகளும் அவைகளைச் சேர்ந்தவர்களும் பிரமாதமாக அதை எதிர்த்து வந்தார்கள். காங்கிரசைச் சேர்ந்த பத்திரிகைகளில் 'தமிழ் நாடு' அந்தச் சட்டத்திற்குத் தீவிரமாக ஆதரவு கொடுத்தது. கோவிலில் தேவதாசிகள் பொட்டுக் கட்டும் வழக்கத்தை ஒழிக்கச் சட்டம் செய்யப்பட்டபோது அதையும் சத்தியமூர்த்தி உள்பட பல பிரபலஸ்தர்களும், பத்திரிகைகளும் பலமாய் எதிர்த்தார்கள். ஆனால், அந்தச் சட்டத்தைத் 'தமிழ் நாடு' தீவிரமாய் ஆதரித்து மக்களிடம் கிளர்ச்சி செய்தது. சமபந்தி போஜனத்திற்காக நடந்த குருகுலக் கிளர்ச்சியைத் 'தமிழ் நாடு' முன்னின்று நடத்தி வந்தது. அக்காலத்தில் காங்கிரசைச் சுமாராக ஆதரிக்கக்கூடிய தமிழ்த் தினப் பத்திரிகை என்பது 'சுதேசமித்திரன்' ஒன்றுதான். தீவிரமாகக் காங்கிரசை

ஆதரிக்கவும், முற்போக்குக் கொள்கைகளைப் பிரச்சாரம் செய்யவும் தமிழ்த் தினசரி ஒன்று அவசியம் என்று டாக்டர் நாயுடு நினைத்தார். அதனால் 1927-இல் தமிழ்ப் புதுவருஷப் பிறப்பன்று ‘தமிழ் நாடு’ தினப் பதிப்பை ஆரம்பித்தார். பத்திரிகைக்கு நல்ல ஆதரவு இருந்தது. நல்ல ஆதரவு என்றால், ஆயிரக்கணக்காகப் பிரதிகள் செலவாயின என்று நினைக்க வேண்டாம். தமிழ் நாட்டில் மொத்தம் தமிழ்த் தினப் பத்திரிகை படிப்பவர்களே அக் காலத்தில் நாலாயிரம் பேர்தான். அதனால் 1500 வாசகர் களோடு ‘தமிழ் நாடு’ தினப்பதிப்பு ஆரம்பமானதைத் தான் நல்ல ஆதரவு என்று சொன்னேன். 1930-ஆம் வருஷம் உப்புச் சத்தியாக்கிரகத்தை மகாத்மா காந்தி ஆரம்பித்தபோதுதான் தமிழ்த் தினப் பத்திரிகைகளின் வாசகர்கள் அதிகமானார்கள். ‘தமிழ் நாடு’ பத்தாயிரம் பிரதிகள் வரை அச்சமயம் செலவாயிற்று.

# 10. டாக்டர் சங்கரய்யர்

திருநெல்வேலி ஜில்லாவில் சுயராஜ்யக் கிளர்ச்சியை வளர்த்த முக்கியமானவர்களில் டாக்டர் சங்கரய்யரும் ஒருவர். கல்லிடைக்குறிச்சியில் ரயில்வே ஸ்டேஷனுக்கு எதிரான அவருடைய பங்களாவில் டாக்டர் வரதராஜுலு நாயுடு வந்திருந்தார். அவரைத் தென்காசிக்கு வரவழைப்பதற்காகப் போனபோது டாக்டர் சங்கரய்யரை முதன் முதலில் சந்தித்தேன். அவருடைய பேச்சிலே வீரம் ததும்பும். ஆனால், நிதானம் தவறாது. அவருடைய பேச்சைக் கேட்டுக்கொண் டிருந்தாலே கோழைகளும் வீரர்களாவார்கள். வைத்தியத் தொழிலில் நல்ல வரும்படி இருந்தது. சொந்தமாக மோட்டார்க் காரும் வைத்திருந்தார். தமது சம்பாத்தியத்தில் வருவதையெல்லாம் தேசீய காரியங்களுக்காகவே செல விட்டு வந்தார். அவர் ஜெயிலுக்குப் போனதில்லை.

தாம் ஜெயிலுக்குப் போனால், மற்ற வேலைகள் கெட்டு விடும் என்பதற்காகப் போராட்டக் காலங்களில் தமது மனைவியை ஜெயிலுக்கு அனுப்பி வந்தார். சட்ட சபைக்கும் மனைவியை அனுப்பினாரே தவிர, தாம் போக வில்லை. அவர் மனைவியார்தான் ஸ்ரீமதி லக்ஷ்மி சங்கரய்யர். நானும் டாக்டர் சங்கரய்யரும் பல கிராமங் களுக்குப் போய் பிரச்சாரம் செய்திருக்கிறோம். அவருடன் பிரச்சாரம் செய்யப்போவதே குஷியாய் இருக்கும். திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள கல்லிடைக்குறிச்சி அக்காலத்தில் பணக்காரர்கள் நிறைந்த இடம். அதனால், திருநெல்வேலி ஜில்லாவுக்கு வருகிற எந்தத் தலைவரும் கல்லிடைக்குறிச்சிக்குப் போகாமல் இருப்ப தில்லை. கல்லிடைக்குறிச்சிக்கு வருகிற ஒவ்வொரு தலைவரும், டாக்டர் சங்கரய்யரின் பங்களாவிலேயே தங்குவார்கள்.

திருநெல்வேலி ஜில்லா காங்கிரஸ் வேலைகளில் எங்கள் இருவருக்கும் கருத்து ஒற்றுமை அதிகமாய் உண்டு. ஒரு தடவை தென்காசியில் சாராயக்கடை மறியல் நடத்தினோம். வழக்கம் போல சாராயக் கடைக் காரர் எங்கள் மீது காலிகளை ஏவி விட்டார். ஆனால், காலிகள் எதுவும் செய்ய மறுத்து விட்டார்கள். பின்னால், நானும் பாப்பாங்குளம் சொக்கலிங்கம் பிள்ளையும் சாராயக் கடைக்குள் புகுந்து பணப் பெட்டியைக் கொள்ளை யடித்துக்கொண்டு போனதாக மாஜிஸ்திரேட் டிடம் பிராது கொடுத்தார். அந்தப் பிராதை மாஜிஸ் திரேட் தள்ளிவிட்டார். அப்புறம் வேறு வழியில்லாமல் போகவே எப்படியாவது சமரசம் செய்வதற்கு முயற்சி செய்தார். ஜில்லா கமிட்டி அதிகாரிகளைப் போய்ப் பார்த்

தார். தங்களால் ஒன்றும் செய்யமுடியாதென்று அவர்கள் கைவிரித்து விட்டார்கள். டாக்டர் சங்கரய்யரைப் பிடித்தா லொழிய வேறுயார் சொன்னாலும் நான் கேட்கமாட்டேன் என்பதைச் சாராயக் கடைக்காரர் தெரிந்த பின்பு,டாக்டர் சங்கரய்யரைப் போய்ப் பார்த்தார். அவர் தென்காசிக்கு வந்து சமரசம் செய்து வைத்தார். அடுத்த குத்தகைக்கு இரண்டு மாதங்களே இருந்தன. இனிமேல் சாராயக் கடை குத்தகையை எடுப்பதில்லை என்று அவர் எழுதிக் கொடுத்து, பகிரங்கமாய்ப் பொதுக்கூட்டத்தில் ஒப்புக் கொண்ட பின்பு மறியலை நிறுத்தினோம்.

திருநெல்வேலி ஜில்லாவில் அக்காலத்தில் ஜில்லா கமிட்டி காரியதரிசிகளாக ஓர் அய்யரும் ஒரு பிள்ளையும் இருந்தார்கள். இருவரும் மிதவாதிகள். அதாவது, வாலிபர்களின் தீவிர போக்கிற்கு முட்டுக்கட்டைகளாய் இருந்தார்கள். என்றாலும், வாலிபர்களான எங்கள் கூட்டத்திற்கு டாக்டர் சங்கரய்யர் எப்பொழுதும் பக்கத் துணையாய் இருந்து வந்தார். அதனால், நாங்கள் ஏற்பாடு செய்த திருநெல்வேலி ஜவுளிக்கடை மறியலைக் காரிய தரிசிகளால் தடுக்க முடியவில்லை. மறியலை நடத்த கமிட்டியில் பணமில்லை என்று காரியதரிசிகள் முதலில் சொன்னார்கள். பணத்தை நாங்கள் தயார் செய்து கொள்கிறோம் என்று சொல்லி கமிட்டியின் அநுமதியைப் பெற்றோம். மறியல் ஆரம்பமாயிற்று. சீமை ஜவுளி விற்பனை அடியோடு நின்று போயிற்று. தீபாவளிக்கு ஒரு வாரம்தான் இருந்தது. அச் சமயம் அங்கே ஜில்லா கலெக்டராக டேவிஸ் என்ற வெள்ளையர் இருந்தார். ஒரு நாள் மாலை ரிசர்வ் போலீசோடு கடைத் தெருவுக்கு வந்து மறியல் செய்த தொண்டர்களைக் கழுத்தில்

கைகொடுத்துத் தெருக் கடைசியில் கொண்டுபோய்த் தள்ளினர். ஒவ்வொரு கடை முன்பும் ஒரு ரிசர்வ் போலீஸ்காரரை நிறுத்திவைத்து 144-வது பிரிவுப்படி மறியலுக்குத் தடையுத்தரவு போட்டார். தீபாவளிக்கு ஒரு வாரமே இருந்தபடியால் தினம் 2 பேர் வீதம் தடையுத்தரவை மீறி மறியலை வெற்றிகரமாக்கிவிட வேண்டுமென்று தொண்டர்கள் தீர்மானித்தோம். ஆனால், காரியதரிசிகளுக்கு அது சம்மதமில்லை. அதனால், மறியலை நிறுத்திவிட்டதாக இரவோடு இரவாக நோட்டீஸ் அச்சடித்து விநியோகித்தார்கள். மறியலை நிறுத்திவிட்டதாக மட்டும் துண்டுப் பிரசுரத்தில் கண்டிருந்தால் பாதகமில்லை; தொண்டர்கள் அஹிம்சையிலிருந்து புரண்டுவிட்டதாகக் குறிப்பிட்டிருந்தார்கள். இது வெறும் பச்சைப் புளுகு. காரியதரிசிகள் செய்த இந்த அக்கிரமம் தொண்டர்களுக்கு எவ்வளவு கோபத்தை உண்டு பண்ணியதோ, அவ்வளவு தூரம் டாக்டர் சங்கரய்யருக்கும் உண்டுபண்ணியது. அதனால், அடுத்த தேர்தலில் அந்தக் காரியதரிசிகள் மீண்டும் பதவிக்கு வரமுடியாதபடி பிரச்சாரம் செய்தோம். இதில் டாக்டர் சங்கரய்யர் எங்களுடன் வேலை செய்தார். அடுத்த தேர்தலில் அந்தக் காரியதரிசிகள் மீண்டும் பதவிக்கு வரவில்லை. தீவிர காங்கிரஸ் வேலைகளிலிருந்தே அவர்கள் அச்சமயம் விலகிக் கொண்டார்கள்.

ஒத்துழையாமை இயக்கம் ஏற்பட்டதும் கல்லிடைக் குறிச்சியிலிருந்த உயர்தரப் பள்ளியைச் சர்க்கார் உதவி பெருத தேசீயப் பள்ளியாக மாற்றினர்கள். திலகர் தேசீய வித்தியாலயம் என்ற பெயரால் அது நடந்து வந்தது. சர்க்காரின் உதவியைப் பெருமல்

நடத்துவதில் எவ்வளவு கஷ்டம் என்பதை எல்லாரும் அறிவார்கள். தேசீயப் பள்ளியாக மாற்றக்கூடாது என்ற கட்சியும் பலமாய் இருந்தது. அந்த எதிர்ப்பைச் சமாளித்துத் தேசீயப் பள்ளியாக மாற்றியதற்கு டாக்டர் சங்கரய்யரின் சேவை ரொம்ப முக்கியமானதாய் இருந்தது.

# 11. ஸ்ரீ. ராமசாமி ரெட்டியார்

**காங்**கிரஸ்காரர்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று, தங்களால் காங்கிரசுக்குப் பெருமையைக் கொடுப்பது. மற்ருென்று, காங்கிரசின் பெருமையால் தாங்கள் பெருமையடைவது. இந்த இரண்டில் ஸ்ரீ. ஓ. பி. ராமசாமி ரெட்டியார் முதல் வகுப்பைச் சேர்ந்தவர். தமிழ் நாட்டில் காங்கிரஸ் பலம் பெற்று வளர்ந்ததற்கு அவர் ஒரு காரணம். 1952-ஆம் வருஷத்துப் பொதுத் தேர்தல் சமயத்தில் காங்கிரசுக்குப் பெரிய சோதனை ஏற்பட்டது. பழைய காங்கிரஸ் தலைவர்கள் சிலர் காங்கிரசை விட்டுப் பிரிந்து, சோஷலிஸ்ட் கட்சியில் சேர்ந்தார்கள். இதனால் ஆந்திராவிலும் கேரளத்திலும் காங்கிரஸ் பலவீனமடைந்தது. அநேக ஸ்தானங்களைத் தேர்தலில் இழந்தது. தமிழ் நாட்டில் அத்தகைய துர்ப்பாக்கியம் ஏற்படாமல் இருந்ததற்குக் காரணம் ஒன்றே ஒன்றுதான்.

அதாவது பழைய காங்கிரஸ்காரர்களில், செல்வாக்குள்ள வர்களில், ஒருவராவது காங்கிரஸைவிட்டு விலகி சோஷலிஸ்ட் கட்சியில் சேரவில்லை. 1951-ஆம் வருஷத்தில், தேர்தல் வேலைகள் மும்முரமாக நடந்த சமயத்தில், சோஷலிஸ்ட் கட்சி தீவிரமாக—காங்கிரசுக்கு விரோதமாக வேலை செய்து வந்த காலத்தில், ஸ்ரீ. ரெட்டியாருக்கும் காங்கிரஸ் ஆட்சிமீது பெரிய மனக்குறை இருக்கத்தான் செய்தது. பல வருஷங்களாக மழையில்லாமல் பஞ்சமும், பட்டினியுமாக இருந்த மக்களுக்குச் சர்க்கார் தங்கள் கடமையைச் செய்யவில்லை என்பது ரெட்டியாரின் புகார். ரெட்டியாரைத் தங்கள் கட்சியில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கிருபளானி உள்பட பலர் முயற்சி செய்தார்கள். ரெட்டியார் சோஷலிஸ்ட் கட்சியில் சேருவதாய் இருந்தால், வேறு காங்கிரஸ்காரர்களும் சேரத் தயாராய் இருந்தார்கள். ஆனால், ரெட்டியார் மட்டும் ஒரே பிடிவாதமாய்ச் சேர மறுத்துவிட்டார். 1951-ஆம் வருஷத்தில் ரெட்டியாரையும் சேர்த்துத் தேர்தல் கமிட்டியை அமைக்க வேண்டுமென்று நான் உள்பட, பலர் விரும்பினோம். பஞ்சத்தினால் வெறுப்புற்றிருக்கிற மக்களின் ஓட்டுகளை மெஜாரிட்டியாகப் பெற வேண்டுமானால், ரெட்டியாரின் ஒத்துழைப்பு அவசியமென்று நான் நினைத்தேன். காமராஜும் ஒப்புக் கொண்டார். இந்த வேலையைச் செய்வதற்காகத் தமிழ் ஜில்லாக்களிலிருந்து ஜில்லாவுக்கு ஒருவர் வீதம் முக்கியமானவர்கள் சேர்ந்து கொண்டு ரெட்டியாரைப் பார்த்தோம். அவருடைய ஒத்துழைப்புக்கு அவர் இரண்டு காரியங்களைச் சொன்னார். ஒன்று, தீய்ந்த நிலங்களுக்கு வரி வஜா செய்வது. மற்றொன்று, பஞ்சப் பிரதேசங்களில் உடனே

கஞ்சித் தொட்டிகளை அமைப்பது. இந்த இரண்டையும் செய்யாத வரையில், எந்தத் தேர்தலிலும் தமக்குச் சிரத்தை இல்லையென்று தெளிவாய்ச் சொன்னார். அவருடைய விருப்பப்படி அச்சமயம் இருந்த சர்க்கார் முன் வந்து செய்யாதபடியால், அவரும் தேர்தலில் கலந்து கொள்ளவில்லை. அவர் சொல்லியபடி செய்திருந்தால், அந்தத் தேர்தலில் இன்னும் அதிகமான ஸ்தானங்களைக் காங்கிரஸ் பெற்றிருக்க முடியும். அதைவிட முக்கியமான விஷயம், அச்சமயம் கிடைத்த அந்த ஸ்தானங்கள் கூட குறைந்து போகாமல் இருந்ததற்கும் ரெட்டியாரே காரணம். சோஷலிஸ்ட்கள் எவ்வளவோ வற்புறுத்தியும், அவர் காங்கிரசுக்கு எதிராகப் போக முடியாது என்று சொன்னதே அதற்குக் காரணம். அதற்கு அவர் சொல்லிய காரணம் அற்புதமானது; அவருடைய காங்கிரஸ் பக்தியைக் காட்டச் சிறந்த அத்தாட்சியானது. அவர் சொன்னதாவது :—"காங்கிரஸ் கட்சியில் எத்தனையோ குறைகள் இருக்கின்றன என்பது உண்மைதான். என்றாலும் நானே வளர்த்த காங்கிரசுக்கு நானே கெடுதல் செய்ய எப்படி என் மனம் ஒப்ப முடியும் ?''

இந்தக் காரணத்தினால் 1952-ஆம் வருஷம் காங்கிரசுக்கு ஏற்பட்ட சோதனையில் தமிழ் நாட்டில் ஸ்ரீ. ரெட்டியார் காங்கிரசைக் காப்பாற்றினார். மற்ற ராஜ்யங்களில் காங்கிரசில் பிளவுகள் ஏற்பட்டும் தமிழ் நாட்டில் மட்டும் அந்தத் துர்ப்பாக்கியம் ஏற்படவில்லை.

ஸ்ரீ. ரெட்டியார் தமிழ் நாடு காங்கிரஸ் தலைவராய் இருந்தபோதுதான் அவருடன் அதிகமாய்ப் பழகக்கூடிய சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. சென்னைக் கார்ப்பரேஷன் ஊழலைப் பற்றி அச்சமயம் நான் 'தினமணி'யில்

கிளர்ச்சி செய்து கொண்டிருந்தேன். அந்த ஊழலை விசாரிக்க அவர் ஒரு விசாரணைக் கமிட்டியை நியமித்தார். எதற்கும் பயப்படாமல் நேர்மையாக நடக்கக் கூடிய ரெட்டியாரின் தைரியத்தில் எப்பொழுதுமே எனக்கு மதிப்புண்டு. இச்சமயம் ஒரு விஷயம் ஞாபகத்திற்கு வருகிறது. ரெட்டியார் முதல் மந்திரியாய் இருந்த சமயத்தில் பிரான்ஸிலிருந்து கலோனியல் உதவி மந்திரி புதுச்சேரிக்கு வந்திருந்தார். அவர் சென்னைக்கு வந்தபோது ராஜதந்திர சம்பிரதாயத்தை ஒட்டி முதல் மந்திரி ரெட்டியாரை அவர் பார்த்துப் பேசினார். இரண்டு அயல் நாட்டுச் சர்க்கார் மந்திரிகள் ஒருவரையொருவர் மரியாதைக்காகச் சந்திக்கும்போது கூடிய வரையில் தகராறான விஷயங்களைப் பற்றிப் பேச மாட்டார்கள். அம்மாதிரி ரெட்டியார் இருக்கவில்லை. புதுச்சேரியை, பிரான்ஸ் சீக்கிரம் காலி செய்து விடுவதுதான் நல்லதென்றும், இல்லாவிடில் மூட்டை முடிச்சுகளுடன் வெளியேற வேண்டி யிருக்குமென்றும் காரமாகப் பேசினாராம். அதை அந்த உதவி மந்திரி பிரெஞ்சு சர்க்காருக்குத் தெரிவிக்க, அவர்கள் இந்திய சர்க்காருக்குத் தெரிவித்தார்கள். பிரதம மந்திரி ஜவஹர்லால் நேரு அச்சமயம் பாரிஸில் இருந்தார். அவருக்கு இந்த அறிக்கை போயிற்று. அதைப் பார்த்ததும் அவர் ரெட்டியாரைப் பற்றிச் சொன்னது ரெட்டியாரின் குணத்தை அப்படியே சித்திரிப்பதாய் இருந்தது. அவர் சொன்னார் :—"ரெட்டியாரா, பேஷாய்ச் சொல்லி யிருப்பார். அவர் சாணை பிடிக்காத வைரம்."

உண்மையில் ரெட்டியார் வைரத்தைப் போன்ற குணமும் மேன்மையும் உள்ளவர். ஆனால், சாணை பிடிக்காத வைரம். நாஸுக்காகப் பேசத் தெரியாதவர்.

ஆளைப் பார்த்தால் பட்டிக்காட்டு ஆளைப்போல இருப்பார். ஆனால், சிறுமைப் பித்து என்பது கடுகளவும் இல்லாதவர். முதல் மந்திரியாக அவர் வந்தவுடன் அவருக்கு ஒன்றும் தெரியாது என்று நினைத்தவர்கள், ராஜாங்க விஷயங்களில் அவர் காட்டிய திறமையைப் பார்த்து அயர்ந்து போனார்கள்.

ரெட்டியார் முதல் மந்திரியாக வந்ததே ஓர் அதிசயமான விஷயம். பிரகாசத்தை முதல் மந்திரி பதவியிலிருந்து இறக்கவிட வேண்டுமென்று ராஜாஜியும் காமராஜும் ஏகமனதாகத் தீர்மானித்த பின்பு பிரகாசத்திற்குப் பதிலாக யாரைப் போடுவது என்ற பிரச்னை வந்தது. இருவரும் ஒப்புக் கொள்ளக் கூடிய ஆளாய் ஒருவர் வேண்டும். அப்படி யோசனை செய்த காலத்தில் ரெட்டியார் பெயரை ராஜாஜி சொன்னார். அந்த யோசனையைக் கேள்வியுற்ற ரெட்டியார் வெட்கப்பட்டுக் கொண்டு மறுக்கவில்லை. முதல் மந்திரி பதவியைத் தேடிக்கொண்டு அவர் எப்படிப் போகவில்லையோ அதே மாதிரி அந்தப் பதவி அவரைத் தேடிக்கொண்டு வந்தபோது அவர் மறுக்கவுமில்லை. ரெட்டியாரைத் தலைவராய்த் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதைப் பற்றிப் பேசி முடிவு செய்வதற்காக நண்பர்கள் ஒரு சமயம் கூடியபோது ரெட்டியாரைச் சிலர் எதிர்த்தார்கள். அவருக்கு என்ன தெரியும் என்று கூடக் கேட்டார்கள். அந்தப் பேச்சுகளைக் கேட்டு ரெட்டியார் கோபம் கொள்ளவில்லை. "என்னைத் தலைவராய் இருக்க வேண்டுமென்று நீங்கள் விரும்பினால் நான் இருக்கிறேன். அந்தப் பதவியில் இருக்கிற வரையில் நான் உண்மையாய்ச் சேவை செய்வேன். நான் சொல்லக் கூடியது அவ்வளவுதான்" என்று

அந்தக் கூட்டத்தில் பதில் சொல்லிவிட்டு உட்கார்ந்து விட்டார்.

கடைசியில் ஸ்ரீ. ரெட்டியார் சட்ட சபைக் காங்கிரஸ் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் தேர்ந்தெடுக்கப்படுவதற்குக் காரணமாய் இருந்த பலர் ஒரு விஷயத்தில் அவரிடம் ஏமாந்து போனார்கள். ரெட்டியாரைத் தலைவராய்த் தேர்ந்தெடுத்தால் அவர் தலைவராய் மட்டும் இருந்துகொண்டு முதல் மந்திரி பதவிக்கு ஆங்கிலப் பட்டம் பெற்ற ஒருவரை நியமிப் பார் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால், அவ்விஷயமாக ஒருவரும் அவரைக் கேட்கவும் இல்லை; அவர் ஒப்புக் கொள்ளவும் இல்லை. ஆனால், பலர் அம்மாதிரி எதிர் பார்த்தார்கள். ஆங்கிலப் பட்டம் பெற்றவர்கள்தான் முதல் மந்திரியாய் இருக்க முடியும் என்ற தவறான அபிப்பிராயம்தான் அம்மாதிரி எதிர்பார்த்ததற்குக் காரணம். ரெட்டியாரிடம்தான் சிறுமைப் பித்துக் கடு களவும் கிடையாதே! அதே மாதிரி தன்னம்பிக்கையும் அவரிடம் ஏராளமாய் உண்டு. அதனால் வேறு யாரையும் முதல் மந்திரி பதவியில் போடவில்லை. தாமே முதல் மந்திரி பதவியை ஏற்றுக் கொண்டார். அவர் தைரியமாக அம்மாதிரி செய்ததால்தான் பின்னால் குமாரசாமி ராஜா வும், காமராஜும் முதல் மந்திரி பதவிக்கு வருவது சுலப மாய் இருந்தது.

# 12. ஸ்ரீ. அவிநாசிலிங்கம்

மகாகவி பாரதியாரின் கவிதைகளும், கட்டுரைகளும் தனிப்பட்டவர்களின் உரிமையாக இல்லாமல் மக்களின் பொதுச் சொத்துக்களாக மாறிவிட்டன. இம்மாதிரி செய்து பாரதியாரின் கவிதைகளைத் தங்கு தடையில்லாமல் யார் வேண்டுமானாலும் உபயோகிக்கலாம் என்ற நிலைமையை ஏற்படுத்திய பெருமை மாஜி கல்வி மந்திரி அவிநாசிலிங்கத்தைச் சேரும். அது மட்டுமல்ல; தமிழ் வளர்ச்சிக் கழகம், தமிழ் எழுத்துச் சீர்திருத்தம், தமிழ்க் கலைச் சொற்கள் அமைப்பு, தமிழ் அறிவுக் களஞ்சியம், தமிழர் திருவிழா போன்ற தமிழ் வளர்ச்சிக்கான பல காரியங்களை ஆதரித்து வளர்க்கும் பெருமையும் அவரையே சேரும். எல்லாரும் தமிழின் பெருமையை வளர்க்க வேண்டுமென்று பேசிக்கொண்டிருக்கலாம். ஆனால், உருப்படியான காரியங்களைச் செய்து முடித்

தவர் அவிஞசிலிங்கம் ஒருவர்தான். கல்வி மந்திரிகளாய் இருந்தவர்களில் அவிஞசிலிங்கத்தைப் போல அதிகமான காரியங்களைச் செய்து முடித்தவர் வேறு யாரும் கிடையாது. எப்பொழுதும் சுறுசுறுப்பு; எதையாவது புதிதாக உபயோகமுள்ள வேலைகளைச் செய்து முடிக்க வேண்டுமென்ற ஆவல்; எடுத்த காரியத்தைச் சீக்கிரம் நிறைவேற்ற வேண்டுமென்ற துடிதுடிப்பு—இவ்வளவும் சேர்ந்தவர்தான் அவிஞசிலிங்கம். கல்வித் துறையில் அவருக்குள்ள ஆர்வம் வேறு எதிலும் கிடையாது. அவரே ஒரு பெரிய ஹைஸ்கூலை நடத்தி வருகிருர். அதனுல் அவருக்கு நல்ல அநுபவமும் உண்டு. புதிய புத்தகங்களைப் படிப்பதிலும் ஆர்வமுள்ளவர். அதனுல் அவர் வளர்ந்து கொண்டே இருக்கிருர். சிலரைப் போல "எல்லாம் எனக்குத் தெரியும். இனி, புத்தகப் படிப்பு அவசியமில்லை" என்று நினைக்கிறவரல்ல. அவர் தொடர்ந்து கல்வி மந்திரியாக இல்லாமல் போனது தமிழ் நாட்டுக்கு நஷ்டம்.

ஸ்ரீ. அவிஞசிலிங்கத்தை முதன் முதலில் கடலூர் ஜெயிலில் 1932-இல் சந்திதேன். ஜெயிலுக்குள் இருக்கும்போது மனக்கோட்டை கட்டுவது எல்லாருக்கும் வழக்கம். பெரிய பெரிய திட்டங்களெல்லாம் ஜெயில்களில் உருவாகும். ஆனுல், வெளியில் வந்த பின்பு அவைகளில் நிறைவேறுபவை ரொம்ப சொற்பம். ஜெயிலுக்குள் அடைபட்டுக் கிடக்கும்போது சொந்தக் கவலைகள் எதுவும் பிடிப்பதில்லை. வெளியே வந்தால் அவை பிடித்துக்கொள்ளுகின்றன. இதனுல், நிறைவேறுகிற திட்டங்கள் சொற்பமாகவே இருக்கும். தமிழில் நல்ல புத்தகங்கள் மலிவான விலைக்கு வரவேண்டும்

என்ற கருத்து எனக்கு வெகு காலமாய் உண்டு. இதைக் கடலூர் ஜெயிலிலும் நான் பரப்பி வந்தேன். இந்தக் கருத்துக்கு ஸ்ரீ. அவினாசி எனக்கு முதலில் ஆதரவு கொடுத்தார். ஜெயிலிலேயே இதற்காக ஒரு கூட்டம் போட்டு விடுதலை யடைந்து வெளியில் வந்ததும் ஒரு கம்பெனியை அமைப்பது என்று தீர்மானமும் செய்து புத்தகத்தில் கையெழுத்து வாங்கினோம். விடுதலை யடைந்து வெளியே வந்ததும், 'பொருளாதாரம்', 'தென் னாப்பிரிக்கா சத்தியாக்கிரகம்' என்று இரண்டு புத்தகங் களை ஸ்ரீ. அவினாசிலிங்கம் எழுதி, பிரசுரிக்க என்னிடம் ஒப்படைத்தார். ஆனால், கம்பெனியை உடனே ஆரம் பிக்க முடியவில்லை. இரண்டு வருஷங்கள் கழித்து "நவயுகப் பிரசுராலயம்" என்ற பெயருடன் நான் ஒரு கம்பெனியை ஆரம்பித்தேன். மலிவான விலையில் புத்தகங்களைப் பிரசுரிக்கவும் செய்தோம். ஆனால், இரண்டாவது மகாயுத்தம் தோன்றிய பின்பு மலிவான விலையில் பிரசுரிப்பதென்பது சாத்தியமில்லாமல் போயிற்று. ஆனால், கடலூர் ஜெயிலில் நாங்கள் பேசிய "அறிவுக் களஞ்சியம்" யோசனையை அவினாசிலிங்கம் மறந்து விடவில்லை. அவர் கல்வி மந்திரியாக வந்ததும் அதை நிறைவேற்ற நடவடிக்கை எடுத்துக்கொண்டார்.

மந்திரி பதவியில் இருந்த வரையில் குன்றின் மேலிட்ட விளக்குப்போல அவினாசிலிங்கம் பிரகாசித்து வந்தார். மந்திரி பதவியை விட்ட பின்பு குடத்துக்குள் அடைபட்ட விளக்காய்விட்டார். குன்றின்மீது இருந் தாலும், குடத்திற்குள் இருந்தாலும் விளக்கு விளக்குத் தான்! அவரால் தமிழ் நாட்டுக்குப் பயன் ஏற்பட வேண்டுமானால், அவர் கல்வி மந்திரியாய் இருக்க

வேண்டும். அந்தப் பதவி அவருக்குக் கிடைக்கா விட்டால் அதற்காக அவர் மூலையில் போய் உட்காரு கிறவர் அல்ல. அவருடைய வழியில் கல்வித் துறையில் வேலை செய்துகொண்டே இருப்பார். ராஜீய வேலை களில் முண்டியடித்துக் கொண்டு முன்னால் நிற்கும் சுபாவம் அவருக்கு இல்லை. அதனால்தான் தமிழ் நாட்டு ராஜீயத்தில் அவர் பெயர் பிரபலமாய் அடிபடுவதில்லை. அவர் அம்மாதிரி ராஜீயத்தில் தீவிர சிரத்தை கொள்ளா மல் இருப்பது தமிழ் நாட்டுக் கல்வித் துறைக்கு அள வற்ற லாபமாகும்.

# 13. ஸ்ரீ. குமாரசாமி ராஜா

குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட காரியங்களைச் செய்வது, எதிலும் ஒரு ஒழுங்கை அனுசரிப்பது, வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப் பேசுவது, விரோதி என்ருல் விரோதி, நண்பன் என்ருல் நண்பன் என்பதில் கொஞ்சங்கூடப் பிசிர் இல்லாமல் நடந்து கொள்ளுவது, இத்தகைய குணங்களுடைய ஒருவரைப் பார்க்கவேண்டுமாஞல் அவர்தான் ஸ்ரீ. பி. எஸ். குமாரசாமி ராஜா. இரவு 9-மணிக்குத் தூங்க ஆரம்பிக்கிற பழக்கம் அவருக்குண்டு. தட்ட முடியாத காரியங்கள் இருந்தாலொழிய 9-மணிக்குத் தூங்குவதை அவர் விடமாட்டார். திருச்சி ஜெயிலில் நானும் மட்டப்பாறை அய்யரும் இருந்த ஹாலில்தான் ராஜாவும் இருந்தார். இரவு 9-மணிக்குமேல் நாங்கள் சீட்டாட்டம் போடுவதுண்டு. சீட்டாட்டத்தில் ஏற்படும் சத்தம்,விளக்குவெளிச்சம் இவையெல்லாம் இருந்தாலும்

ராஜாமட்டும் 9-மணிக்குத் தூங்குவதை விடமாட்டார். எங்கள் சப்தத்தை லட்சியம் செய்யாமல் அவர் குறட்டை போட்டுத் தூங்கிக்கொண்டிருப்பார். அதேமாதிரி என்ன மழைபெய்தாலும், என்ன வெயில் அடித்தாலும் காலை 6-மணிக்கெல்லாம் குளிப்பதை அவர் நிறுத்துவதில்லை. 1952-ஆம் வருஷத்தில் நடந்த தேர்தலில் ராஜாவின் ஸ்தானத்திற்குப் பலத்த போட்டி இருந்தது. வோட்டு எண்ணி முடிவு சொல்லுகிற தினத்தில் ஏதாவது தகவல் வந்ததா என்று கேட்பதற்காக அவருக்கு டெலிபோன் செய்தேன். இரவு 9-மணி இருக்கும். அவர் படுக்கப் போய்விட்டதாக அவர் வீட்டில் சொன்னார்கள். ஆனால், உடனே அவர் எழுந்து வந்து டெலிபோனில் பேசினார். "தேர்தல் முடிவைத் தெரிந்துகொள்ளாமல் அதற்குள் படுக்கப்போய்விட்டீர்களே?" என்று கேட்டேன். "முடிவு என்ன இப்படியோ அப்படியோதானே இருக்கும்? இதற்காகத் தூங்காமல் இருப்பார்களா?" என்று பதில் சொன்னார். அப்பேர்ப்பட்ட மனோபக்குவமுள்ளவர் ராஜா. எது எப்படியானாலும் சரி, குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட காரியத்தைச் செய்ய அவர் தவறவே மாட்டார். மனத்தில் ஒரு விஷயத்தை முடிவு செய்துவிட்டால் அப்புறம் அவரை மாற்றுவது முடியாத காரியம். சிலர் மற்ற விஷயங்களில் பிடிவாதமாய் இருந்து, சொந்த விஷயம் வரும்போது கோழைகளாய் நடப்பார்கள். அம்மாதிரி பல பேர்களை நான் பார்த்திருக்கிறேன். அதிலும் இருக்கிற பதவிகள் போகிறதாய் இருந்தால் பலர் அழுதே விடுவார்கள். முதல் மந்திரி பதவி போகிற காலத்தில் அதைக் காப்பாற்றிக் கொள்ளப் பிரகாசம் என்ன பாடுபட்டார்? ராஜா அப்படிப்பட்டவரல்ல.

தேர்தலில் அவர் தோற்றுப் போனதும் அடுத்தபடியாக முதல் மந்திரி பதவியைத் துறந்துவிடுவது என்று முடிவு செய்தார். அந்த முடிவுக்கு வந்ததும் முதல் மந்திரி தங்குவதற்காக சர்க்கார் கொடுத்திருந்த கட்டிடத்திலிருந்தும் காலி செய்துவிடுவது என்று ஏற்பாடு செய்தார். அவருடைய அந்தத் தீர்மானத்தை மாற்ற யாராலும் முடியவில்லை. அவர் சம்மதித்திருந்தால் முதல் மந்திரியாகத் தொடர்ந்து இருந்திருக்க முடியும். ஸ்ரீ. ஜவஹர்லால் அம்மாதிரி அவர் இருக்க விரும்பினர்; 6 மாதங்களுக்குள் மற்றொரு தொகுதியில் தேர்தலுக்கு நின்று வந்து விடலாம் என்றுகூடச் சொன்னர். ஆனல், ராஜா பிடிவாதமாக மறுத்துவிட்டார். பொதுத் தேர்தலில் காங்கிரசுக்கு மெஜாரிட்டி கிடைக்கவில்லை என்பதற்காகத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் பதவியிலிருந்து ஸ்ரீ. காமராஜ் அச்சமயம் விலகினர். அந்தப் பதவிக்காவது வரும்படி ஸ்ரீ. ராஜாவிடம் கேட்டேன். அதற்கும் அவர் சம்மதிக்கவில்லை. "தேர்தலில் பொது ஜனங்கள் நம்மை வேண்டாமென்ருல் விலகிக் கொள்ளுவதுதான் ஒழுங்கு; ஒரு பதவியைவிட்டு மற்றொரு பதவிக்குப் போனுல் பதவி ஆசை பிடித்திருப்பதாக நினைப்பார்கள். கொஞ்ச காலம் ஒன்றிலும் கலந்து கொள்ளாமல் விலகி இருப்பது தான் நல்லது" என்று பதில் சொன்னர். தவிர அந்த வருஷத் தேர்தலில் காங்கிரசுக்குச் சட்ட சபையில் மெஜாரிட்டி கிடைக்காததால் அப்பொழுதுள்ள நிலைமையைச் சமாளிக்க ராஜாஜிதான் சரியானவர் என்று அவர் நினைத்தார். அதனுல் ராஜாஜியை வற்புறுத்திப் பதவி ஏற்கும்படி செய்தார். அவர் பதவியை ஏற்பதற்காக, அவரை மேல்சபை அங்கத்தினராக நியமனமும்

செய்தார். ஆகவே, ஒன்றைத் தீர்மானித்தால் அதை நிறைவேற்றியே தீருவார். அவ்வளவு உறுதியுள்ளவர்.

ராஜாவுக்கும் எனக்கும் நெருங்கிய பழக்கம் கடலூர் ஜெயிலில்தான் ஏற்பட்டது. அதற்கு முன்னுல் ஒருவரை ஒருவர் அறிந்திருந்தோம். ஆனுல், பேசியதில்லை. ரயில்வேயில் சாப்பாட்டு வசதிகள் இல்லாத அக்காலத்தில், ராஜாவுக்குத் தெரிந்த நண்பர்கள் ராஜபாளையம் வழியாகப் போவதாக இருந்தால் அவர்களுக்குச் சாப்பாட்டுக் கவலை இல்லாமல் ராஜா பார்த்துக்கொள்ளுவார். ஒருநாள் அம்மாதிரி யாரையோ சந்திப்பதற்காக ராஜபாளையம் ரயில்வே நிலையத்திற்கு ராஜா வந்திருந்தார். அதே வண்டியில் நான் சென்னைக்குப் போய்க்கொண்டிருந்தேன். அச்சமயம்தான் முதல் முதலில் நான் ராஜாவைப் பார்த்தேன்.

ராஜபாளையத்தில் குமாரசாமி ராஜா பொது வாழ்க்கையில் இறங்க ஆரம்பித்தபோது அவருக்குப் போதுமான சொத்துக்கள் இருந்தன. ஆனுல், அவையெல்லாம் தேர்தல்களிலும் பொதுச் செலவிலும் அநேகமாய்க் கரைந்தன. மீதமிருந்த சொத்துக்களையும் அவர் கவர்னரான பின் நாட்டிற்கு எழுதிவைத்துவிட்டார். பணத்தில் எப்பொழுதுமே அவருக்கு ஆசை இருந்தது கிடையாது. நாட்டிற்காக எல்லாவற்றையும் அவர் துறந்தது அவருடைய தியாகத்திற்குச் சிகரம் வைப்பதாய் அமைந்தது.

பணத்திலோ பதவியிலோ பேராசையில்லாத அவருடைய போக்கிற்குப் பொருத்தமாய் அவருக்குத் திடீரென்று முதல் மந்திரி பதவி கிடைத்தது. அப் பதவி அவருக்குக் கிடைக்குமென்பதை அவர் நினைத்ததே கிடையாது. அவர் அச்சமயம் சென்னை ஜெனரல் ஆஸ்

பத்திரியில் அவருடைய மைத்துனருக்கு உதவியாய் இருந்தார். ஸ்ரீ. ராமசாமி ரெட்டியார்தான் அப்பொழுது முதல் மந்திரி. வருஷா வருஷம் சட்டசபைக் காங்கிரஸ் கட்சித் தலைவரைத் தேர்ந்தெடுப்பது அப்பொழுதெல்லாம் வழக்கம். இரண்டு வருஷங்கள் அவர் தலைவராய் இருந்த பின்பு மூன்றாவது வருஷத் தலைவர் தேர்தல் நெருங்கியது. இரண்டு வருஷங்களில் காமராஜுக்கும் அவருக்கும் அபிப்பிராய பேதம் பலமாயிற்று. ரெட்டியாரைத் தவிர வேறு யாரையாவது தலைவராகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்பது காமராஜின் அபிப்பிராயம். ரெட்டியார் தேர்தலுக்கு நின்றால் தோற்றுப் போவார் என்று தோன்றியது. அதனால், அவர் விலகிக்கொள்ளுவது நல்லதென்றும், இல்லாவிடில் ரெட்டியாரும் வெற்றி பெறாமல், காமராஜின் ஆளும் வெற்றிபெறாமல், பிரகாசத்தின் கோஷ்டியே வெற்றி பெறுமென்றும், இதைப்பற்றி ரெட்டியாரிடம் பேசவேண்டுமென்றும் காமராஜ் கேட்டுக் கொண்டார். இதற்காக நானும், குமாரசாமி ராஜாவும், சி. சுப்பிரமணியமும், சர்தார் வேதரத்தினமும் ரெட்டியாரைப் போய்ப் பார்த்துப் பேசினோம். ரெட்டியார் சம்மதிக்கவில்லை. காமராஜின் ஆளுக்காகத் தாம் விலக முடியாதென்று சொல்லிவிட்டார். பின்னால் நான் தனியாக அவரைப் பார்த்துப் பேசினேன். அதற்குள்ளாகத் தமக்கு மெஜாரிட்டி கிடைக்காதென்பதை அவரும் அறிந்து கொண்டார். அதனால் ஒரு நிபந்தனைக்கு உட்பட்டு விலகிக்கொள்ள அவர் ஒப்புக் கொண்டார். அதாவது காமராஜ் சொல்லிய ஆளை அவர் நிராகரித்தார். அப்படியானால் வேறு யாரை அவர் ஒப்புக் கொள்ளுவார் என்பதைப்பற்றிப் பேசினோம். பல நபர்களைப் பற்றிச்

சர்ச்சை செய்தோம். கடைசியாகக் குமாரசாமி ராஜா பெயரை அவர் ஒப்புக்கொண்டார். ஆனுல், காமராஜரைச் சேர்ந்தவர்கள் ஸ்ரீ. பக்தவத்சலத்தை ஆதரித்தார்கள். இதை எப்படிச் சமாளிப்பது என்பது காமராஜின் பிரச்னை யாய் வந்து அமைந்தது. தேர்தல் தினம்வரையில் பேசாமல் இருந்தார். தேர்தல் தினத்தன்று காலையில் 'குமாரசாமிராஜாவையே போட்டுவிடுவோம். ரெட்டி யாரிடம் சொல்லி முடித்துவிடுங்கள்' என்று காமராஜ் என்னிடம் சொன்னுர். உடனே நான் ரெட்டியாரிடம் சென்று அவர் சம்மதத்தைப் பெற்றேன். ராஜாவிடம் சொல்லி அவரையும் தயாராய் இருக்கும்படி செய்ய வேண்டிய வேலை எனக்கும், சி. சுப்பிரமணியத்துக்கும் ஏற்பட்டது. நாங்கள் இருவரும் ஜெனரல் ஆஸ்பத்திரிக் குச் சென்று ராஜாவைச் சந்தித்தோம். முதல் மந்திரி யாக அவர் வரப்போகும் செய்தியைத் தெரிவித்தோம். அவருக்கும் ஆச்சரியமாய்த்தான் இருந்தது. என்ருலும், அதற்காக அவர் துள்ளிக் குதிக்கவில்லை. நிதானத் தோடு தமது சம்மதத்தைத் தெரிவித்தார். அதன்பின்ஞல் பொதுத் தேர்தல் நடந்து முடிகிறவரையில் அவரே முதல் மந்திரியாய் இருந்தார். ராஜா முதல் மந்திரியாய் வரவேண்டுமென்று நான் எண்ணிய எண்ணமும் நிறை வேறியது.

ஸ்ரீ. ராஜா முதல் மந்திரியாய் இருந்தபோது இந்த ராஜ்ய சர்க்காருக்கு ஏற்பட்டவிருந்த ஒரு பெரிய அப வாதத்தைத் தமது உடனடி நடவடிக்கையால் தடுத்தார். வேலூர் ஜெயிலில் கம்யூனிஸ்ட் கைதிகள் இருந்தார்கள். அங்கேயிருந்த ஜெயில் சூப்பிரென்ட் முதலில் சரியாய்த் தான் இருந்தார். வரவர அவரை எப்படியோ கம்

யூனிஸ்ட்கள் கைக்குள் போட்டுக் கொண்டார்கள். இதன் பலனாக இரவு வெகுநேரம் வரையில் கம்யூனிஸ்ட்கள் ஜெயிலுக்குள் சுற்றிவரவும், ஒலிபெருக்கி மூலம் பிரசங்கம் செய்யவும் ஆரம்பித்தார்கள். போகிற போக்கைப் பார்த்தால் சிறையிலிருந்து ஒருநாள் எல்லோரும் தப்பி ஓடினால்கூட ஆச்சரியம் இல்லை யென்ற நிலைமை ஏற்பட்டது. ஜெயிலுக்குள் கைதிகளை இரவு பூட்டிவைப்பது தான் விதி. அதை மீறி சூப்பிரெண்ட் ஏன் நடந்துவந்தார் என்பது முக்கியமான விஷயம். அதைப்பற்றிச் சர்க்காருக்கு எதுவும் தெரியாமல் இருந்தது அதைவிட முக்கியமான விஷயம். அச்சமயம் அங்கங்கே ஒன்றிரண்டு கம்யூனிஸ்ட் கைதிகள் ஜெயிலைவிட்டுத் தப்பி ஓடிக்கொண்டும் இருந்தார்கள். இந்த நிலைமையில் ஒருநாள் காலையில் வேலூரிலிருந்து எனது நண்பர் ஸ்ரீ. டி. ஜி. ஏகாம்பரம் டெலிபோன் செய்தார். அவர்தான் 'தினசரி' பத்திரிகைக்கு வேலூரில் பிரதிநிதியாய் இருந்தார். ஜெயில் நிலைமை ரொம்ப நெருக்கடியாய் இருக்கிறதென்றும், உடனே சர்க்கார் கவனிக்காவிட்டால் கைதிகள் தப்பி ஓடச் சந்தர்ப்பம் ஏற்படலாமென்றும் சொன்னார். இவ்வளவு மோசமான நிலைமை ஏற்பட்டிருப்பது உண்மையாய் இருந்தால், உடனே சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம் என்று நினைத்து முதல் மந்திரி ராஜாவுக்கு விஷயத்தைத் தெரிவித்தேன். அவர் உடனே நடவடிக்கை எடுத்துக்கொண்டார். முதலில் ஓர் அதிகாரியை அனுப்பி விசாரிக்கச் செய்தார். விஷயம் உண்மைதான் என்று தெரிந்ததும் சூப்பரின்டென்ட் வேலையிலிருந்து விலக்கி வைக்கப்பட்டார். சென்னை சர்க்காருக்கு நேரவிருந்த இழுக்கு ராஜாவின் நடவடிக்கையால் தடுக்கப்பட்டது.

# 14. மணிக்கொடி சீனிவாசன்

பத்திரிகையின் ஆசிரியரே சொந்தக்காரராய் இருந்த காலம் ஒன்றிருந்தது. அக் காலத்தில் ஆசிரிய ருக்கும் சொந்தக்காரருக்கும் கொள்கையில் முரண்பாடு என்ற பேச்சுக்கே இடமில்லாமல் இருந்தது. இருவரும் ஒரே நபராய் இருந்ததுதான் அதற்குக் காரணம். காலம் மாறிவிட்டது. சொந்தக்காரர் வேறு, ஆசிரியர் வேறு என்ற காலம் வந்தது. அதன் கூடவே பத்திரிகையின் கொள்கை ஆசிரியருடையதா, சொந்தக்காரருடையதா என்ற கேள்வியும் தொடர்ந்தது. இவற்றிற்கான காரண காரியங்களையோ, நியாய அநியாயங்களையோ பற்றி இங்கே விவாதிப்பது என்னுடைய நோக்கமல்ல. ஆசிரியரின் கொள்கையே பத்திரிகையின் கொள்கை என்ற காலம் அநேகமாய் மாறி மறைந்து போயிற்று

என்பதை மட்டும் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். அந்த மறைந்த காலத்தில் நடந்த பத்திரிகைகள் பல மிகுந்த செல்வாக்கோடு விளங்கின; மிகச் சிறந்த தேச சேவை செய்தன. அக் காலத்தில் திகழ்ந்த ஆசிரியர்கள் பலர் சிங்கங்களாய் விளங்கினார்கள். அவர்களில் ஒருவர் தான் மணிக்கொடி சீனிவாசன். ஒரு காலத்தில் இந்தியாவில் ஆங்கிலப் பத்திரிகைத் தொழிலில் தலை சிறந்து விளங்கினார். இன்று பத்திரிகைத் தொழிலையே விட்டுவிட்டார். ஆசிரியர்களின் சுயேச்சை குறைந்து நிர்வாகிகளின் ஆதிக்கம் அதிகமாய் வளர்ந்து வருவது அவர் அந்தத் தொழிலை விட்டதற்கான காரணங்களில் ஒன்று.

இந்தியாவில் காந்தி சகாப்தத்தில் பத்திரிகைத் தொழிலில் சிங்கங்களாக மதிப்பிடக்கூடியவர்கள் இரண்டே பேர். ஒருவர், ஸ்ரீ. ராமநாத் கோயங்கா. மற்றொருவர், காலஞ்சென்ற ஸ்ரீ. சதானந்தம். கோயங்கா வடநாட்டிலிருந்து சென்னை வந்து பத்திரிகைக் கொடியை நாட்டினார். சதானந்தம் சென்னையிலிருந்து பம்பாய்க்குப் போய்ப் பத்திரிகைக் கொடியை ஊன்றினார். அந்தச் சதானந்தத்தின் கலாசாலைத் தோழர்தான் மணிக்கொடி சீனிவாசன். சீனிவாசனுக்கு இலக்கியத்தில் எவ்வளவு ஆர்வமுண்டோ அவ்வளவு சங்கீதத்திலும் உண்டு. ஜோசியத்தில் அவருக்கு நம்பிக்கையே கிடையாது. என்றாலும் பழங்காலப் பழக்க வழக்கங்களில் அவருக்கு நம்பிக்கையுண்டு. அசல் புரட்சிக்காரர் என்பதிலும் சந்தேகமில்லை என்றாலும் அவர் ஒரு லட்சியவாதி. ஆங்கிலத்திலும் சரி, தமிழிலும் சரி, அவர் பேனாப் பிடித்து எழுதினால் அந்த எழுத்துக்களை யாராலும் அசைக்கமுடியாது. 1930-ஆம்

வருஷம் மகாத்மா ஆரம்பித்த உப்புச் சத்தியாக்கிரகத்தில் பம்பாய்தான் இந்தியாவில் தலைசிறந்து விளங்கியது. அச் சமயம் இவர் சதானந்தரின் "பிரீபிரஸ் ஜர்னல்" பத்திரி கையின் ஆசிரியராய் இருந்து எழுதிய தலையங்கங்கள் அபாரமானவை. பம்பாயில் இருந்த உற்சாகத்தை அவருடைய தலையங்கங்கள் பன்மடங்காய்ப் பெருக்கி நாட்டிற்கே பெருமையளித்து வந்தன. அச்சமயம்ஆயிரக் கணக்காய்ப் 'பிரீபிரஸ் ஜர்ன'லிடம் ஜாமீன் கேட்டு சர்க் கார் பறிமுதல் செய்து வந்தார்கள். எதற்கும் அஞ்சாமல் சதானந்த் பணத்திற்கு ஏற்பாடு செய்தார். சீனிவாசன் தமது வேகத்தைக் குறைக்காமல் எழுதி வந்தார்.

முதலில் சதானந்தர் "பிரீ பிரஸ்" என்ற செய்தி ஸ்தாபனத்தை ஆரம்பித்தார். அச்சமயம் சீனிவாசன் அவருக்கு உதவியாய் இருந்தார். சென்னையில் "பிரீ பிரஸ்" காரியாலயத்தை வைப்பதற்கு, "தமிழ்நாடு" காரியாலயத்தில் 1925-இல் டாக்டர் நாயுடு இலவசமாக இடம் கொடுத்தார். அங்கேதான் முதலில் சீனிவாசனைச் சந்தித்தேன். அவர், நான், வ. ரா. ஆகிய மூவரும் அடிக்கடி சந்தித்துப் பேசுவதுண்டு. "தமிழ் நாடு" காரியாலயத்திற்குப் பக்கத்தில்தான் "சுயராஜ்யா" காரி யாலயம் இருந்தது. அச்சமயம் "தமிழ் சுயராஜ்யா"வில் வ. ரா. வேலை பார்த்து வந்தார். ஆங்கில "சுயராஜ்யா" வில் சீனிவாசன் வேலை பார்த்த பின்புதான் அதை விட்டு, பிரீபிரஸில் சேர்ந்தார். பின்னல் சென்னையி லிருந்து பம்பாய்க்குப் போனர். அதன் பின்னல் 'பிரீ பிரஸ்' நிருபராக லண்டனில் சில வருஷங்கள் இருந்தார்.

சீனிவாசன் ஒரு லட்சியவாதி. சதானந்தர் காரிய வாதி. அதனல் இருவருக்கும் அடிக்கடி அபிப்பிராய

பேதங்கள் ஏற்படுவதுண்டு. எத்தனை தடவைகள் அவர் கள் பிரிந்து மீண்டும் சேர்ந்தார்கள் என்பது யாருக்கும் தெரியாது. அம்மாதிரி அவர் பிரிந்திருந்த ஒரு சமயத்தில் தான் 1927-இல் "தமிழ்நாடு" தினசரி வெளிவந்தது. தினப் பத்திரிகையில் இருந்து அநுபவமடைந்த யாரும் அச்சமயம் "தமிழ்நாடு" காரியாலயத்தில் இல்லை. சீனி வாசன் உடனிருந்து உதவி செய்து "தமிழ்நாடு" ஒழுங் காய் வெளிவர ஏற்பாடுகள் செய்து கொடுத்தார். அதே மாதிரி அவர் பிரிந்திருந்த ஒரு சமயத்தில்தான் "மணிக் கொடி"யை அவர் சென்னையில் ஆரம்பித்தார்.

பத்திரிகைத் தொழிலில் மட்டுமல்ல;சட்டசபை வேலை களிலும் அவருக்கு நல்ல அநுபவமுண்டு. 1937-இல் ஏற்பட்ட பம்பாய் சட்டசபை காங்கிரஸ் கட்சிக்கு அவர் காரியதரிசியாய்ப் பல வருஷங்கள் இருந்தார். பின்னுல் அகில இந்திய பத்திரிகாசிரியர் மகாநாட்டுக்கு அவர் பல வருஷங்கள் காரியதரிசியாய் இருந்தார். அச்சமயம் அந்த மகாநாட்டில் பல சீனிவாசன்கள் இருந்தபடியால் இவரை அடையாளம் சொல்ல ஸ்டாலின் சீனிவாசன் என்று பெயர் வைத்தார்கள். அவர் மீசைதான் அந்தப் பெயருக்குக் காரணம். அதைத் தவிர கம்யூனிஸ்ட் கட்சிக்கும் அவருக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது. கம்யூனிஸ்ட்கட்சியைக் கிண்டலாகவும் பலமாகவும் தாக்கி எழுதியது அவரைப்போல வேறு யாரும் கிடையாது.

பம்பாயில் "பிரீபிரஸ் ஜர்னல்", "டெய்லி சன்", "நாஷனல் ஸ்டாண்டர்ட்", "பார்லிமெண்ட்" ஆகிய பத்திரிகைகளுக்கும், டெல்லியில் "நாஷனல் கால்" பத்திரிகைக்கும் ஆசிரியராய் இருந்து திறம்பட நடத்திப் பெயரும் புகழும் பெற்ருர். பின்னுல் சென்னையில் சினி

மாப் படத் தணிக்கையாளராக மூன்று வருஷம் வேலை பார்த்தார். அதன் பலனாக சினிமா உற்பத்தியாளர் சங்கத்தின் காரியதரிசியானார். சினிமாவுக்கும் சீனிவாச னுக்கும் சம்பந்தம் என்ன என்று கேட்கலாம். புத்தி சாலிகள் எந்த வேலையையும் திறம்படச் செய்ய முடியும் என்பது உண்மையே. ஆனால், யாருக்கு எந்த வேலை யில் ஆர்வமும் திறமையும் உண்டோ, அவர்களுக்கு அந்த வேலை கிடைப்பதில்லை. அதுதான் உலக வழக்கம். எழுதத் தெரியாதவர்களுக்குப் பத்திரிகாசிரியர் வேலை கிடைக்கும். எழுதத் தெரிந்தவர்களுக்கு அந்த வேலை கிடைக்காது. ஏனெனில் அவர்களை வைத்துச் சமாளிக்க முடியாதென்று பத்திரிகைத் தொழிலில் பணம் போடுகிற வர்கள் நினைக்கிறார்கள். இதனால்தான் எழுத்துத் திறமையுள்ள சீனிவாசன் பத்திரிகாசிரியராய் இல்லா மல், சினிமா சங்கக் காரியதரிசியானார். அவர் பத்திரிகா சிரியராய் இல்லாமல் இருப்பது தமிழ் நாட்டுக்கு நஷ்டம்.

1934-ஆம் வருஷத்தில் டெல்லி சட்டசபைத் தேர்தல் நடந்தது. வில்லிங்டனின் அடக்குமுறைக்கொடுமையைக் கண்டு நாடு கொதிப்புற்றிருந்தது. அந்தத் தேர்தலில் காங்கிரஸ் போட்டிபோடுவதாகத் தீர்மானித்தது. ஆனால், காங்கிரசுக்கு எதிராகப் பலர் வேலை செய்யத் தமிழ்நாட் டில் திட்டம் போட்டார்கள். நான் "காந்தி" பத்திரிகை நடத்திக்கொண்டிருந்தேன். காங்கிரசுக்கு ஆதரவாக ஒரு தினப் பத்திரிகையை எப்படியாவது ஆரம்பித்து எதிர்ப்பை அடக்கிவிட வேண்டுமென்று என் மனம் துடித்தது. அதற்காக அச்சடிப்பதற்கு ஒரு யந்திரம் பார்த்துக் கொடுக்கும்படி சீனிவாசனுக்குக் கடிதம் எழுதி னேன். அதன் பலனாக சதானந்தே ஒரு தமிழ்ப் பத்

திரிகை ஆரம்பிப்ப தென்றும், அதற்கு நான் ஆசிரியராய் வருவதென்றும் சீனிவாசன் ஏற்பாடு செய்தார். அந்த ஏற்பாட்டின்படி "தினமணி" உதயமாயிற்று. அச் சமயம் "தினமணி"யின் பிரசாரம் காங்கிரசின் வெற்றிக்கு எவ்வளவு தூரம் உதவியாய் இருந்த தென்பது தமிழ்நாடு அறிந்த விஷயம்.

# 15. ஸ்ரீ. பக்தவத்சலம்

ஸ்ரீ. பக்தவத்சலம் என்றால், மந்திரி சபை ஞாபகம் கூடவே வரும். அதே மாதிரி மந்திரி சபை என்றால் ஸ்ரீ. பக்தவத்சலத்தின் பெயர் ஞாபகத்திற்கு வராமல் இருக்காது. ஏனெனில், இதுவரை இந்த மாகாணத்தில் ஏற்பட்ட காங்கிரஸ் மந்திரி சபைகளில் முதல் மந்திரிகளாகப் பலர் வந்திருக்கிறார்கள். ஆனால், யார் முதல் மந்திரியாக வந்தாலும் பக்தவத்சலம் இருக்காத மந்திரி சபையே இருக்காது. அதனால் அவருடைய திறமையையோ, அவசியத்தையோ எல்லா முதல் மந்திரிகளும் ஒப்புக் கொள்ளுகிறார்கள் என்பதுதான் அதற்கு அர்த்தம். அவ்வளவு சாமர்த்தியமோ அல்லது முக்கியத்துவமோ உள்ளவர் முதல் மந்திரியாக இதுவரை ஏன் வரவில்லை என்று கேட்கலாம். இது ரொம்ப நியாயமான கேள்வி. அது மட்டுமல்ல. எல்லாருமே இந்தக் கேள்வியைக் கேட்

கிறார்கள். அவருக்கு முதல் மந்திரி பதவி முன்பே வந்திருக்க வேண்டும். ஒரு தடவை அவருக்கு வெகு சமீபம் வரை அந்தப் பதவி வந்தது. என்றாலும் அவருக்குக் கிடைக்காமல் போய் விட்டது. ராஜ தந்திரத்தில் அவரை யாரும் மிஞ்ச முடியாது. எவ்வளவு நேரம் அவரிடம் பேசினாலும் கேட்டுக் கொண்டே இருப்பார். ஆனால், அவருடைய அபிப்பிராயத்தைச் சுலபமாய் அறிந்துவிட முடியாது. பேச வந்திருக்கிறவர் எதற்காக வந்திருக்கிறார் என்பதைச் சுலபமாகப் புரிந்து கொள்ளுவார். வாய் பேசாமல் சிறிய சிரிப்புகளாலும், தலையசைப்புகளாலும் பேசப் போனவரின் கருத்தை ஆதரிப்பதாகக் காட்டிக் கொள்ளுவார். பேசப் போனவர் அவற்றைக் கொண்டு பக்தவத்சலம் தம்மை ஆதரிப்பதாக எண்ணுவாரானால் அது அவருடைய தவறே ஒழிய, பக்தவத்சலத்தின் தவறல்ல. அவர்தான் வாய் திறந்து ஒன்றும் சொல்லுவதில்லையே! ஒரு காரியத்தைச் செய்து முடிக்க வேண்டும் என்று தீர்மானித்து விட்டால், எப்படியாவது அதைச் செய்து முடித்து விடுவார். காரியத்தை முடிக்கக் கூடிய விதத்தில் கடிதப் போக்குவரத்துகளையோ, யாதாஸ்துகளையோ தயாரிப்பதில் அவருக்குள்ள சாமர்த்தியம் அபாரமானது. தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியில் காரியக் கமிட்டி அங்கத்தினராக அவர் இல்லாமல் இருந்ததே கிடையாது. இவ்வளவு திறமையும் முக்கியத்துவமும் இருந்தும் அவர் ஏன் முதல் மந்திரியாக வரவில்லை என்று நானும் யோசித்து யோசித்துப் பார்த்தேன். திறமையிலும் குறைச்சலில்லை; முக்கியத்துவத்திலும் குறைச்சலில்லை. பின் ஏன் முதல் மந்திரியாக வரவில்லை? இதைப் பற்றி நான் சிந்தனை செய்தபோது

பக்தவத்சலத்திடம் இருந்த குணங்களை ஒவ்வொன்றாக எண்ணிக்கொண்டு வந்தேன். அப்பொழுதுதான் அவரிடம் ஒரே ஒரு குணம் அறவே இல்லை என்பதைக் கண்டேன். அது என்ன தெரியுமா? அதுதான் கோபம். யார் என்ன சொன்னாலும், முகத்திற்கு நேராகக் கோபமாகப் பேசினாலும் கூட அவருக்குத் துளி கூடக் கோபம் வராது. யாராலும் அவரைக் கோபப்படும்படி செய்து விட முடியாது. இந்த ஒரு குணத்தை அவரிடம் படைப்பதற்குப் பிரமன் மறந்து விட்டான். பிரமன் மட்டும் அதை அவருக்குப் படைத்திருந்தால் அவர் முன்பே முதல் மந்திரியாக வந்திருப்பார்.

ஸ்ரீ. பக்தவத்சலத்தை முதல் முதலில் குருகுலக் கிளர்ச்சியில் அறிந்தேன். சமபந்தி போஜனத்தைக் கட்டாயப்படுத்தக் கூடாதென்று அவர் பத்திரிகைகளில் எழுதிக் கொண்டிருந்தார். வைதிகக் கட்சியை இவர் ஆதரித்தது எனக்கு ஆச்சரியமாய் இருந்தது. காரணம் தெரியாததால் அவர்மீது எனக்குக் கோபம் கூட ஏற்பட்டது. பின்னால்தான் அவர் குடும்பம் பெரிய வைதிகக் குடும்பம் என்பது எனக்குத் தெரிந்தது.

ஸ்ரீ. பக்தவத்சலம் அவர் வாழ்க்கையிலேயே செய்த பெரிய தவறு அவர் பத்திரிகைத் தொழிலில் இறங்கியது தான். அதனால் பல கஷ்ட நஷ்டங்களை அடைந்தார். பத்திரிகைத் தொழிலில் இறங்குவது குதிரைப் பந்தயத்தில் பணம் கட்டுவது மாதிரி. வெற்றியடையும் சந்தர்ப்பம் சொற்பம்; தோல்வியடையும் சந்தர்ப்பங்களே ஏராளம். நல்ல வேளையாக அதிலிருந்து விலகிக் கொண்டார்; அல்லது அவர் விலகிக் கொள்ளும்படி சந்தர்ப்பங்கள் செய்து விட்டன.

# 16. மட்டப்பாறை சிங்கம்

காங்கிரஸ் போராட்ட காலங்களில் சிறைச்சாலை களுக்கு ஏராளமான காங்கிரஸ்காரர்கள் போவது வழக்கம். ஆனால், சென்னை ராஜ்யத்தைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு போராட்டத்திலும் முதலில் ஜெயி லுக்குப் போகிறவரும் கடைசியில் அதைவிட்டு வெளியே வருகிறவரும் ஒரே ஒருவர்தான். அவரைத்தான் மட்டப் பறை சிங்கம் என்று அக்காலத்தில் மக்கள் அழைத்து வந்தார்கள். மதுரை, இராமநாதபுரம் ஜில்லாக்களில் அவ ருக்கு இருந்த செல்வாக்கைப் போல வேறு யாருக்கும் கிடையாது. அப்பகுதிகளில் இருந்த ஜமீன்தார்கள் எல்லாரும் அவருடைய நண்பர்கள். ஜமீன்தார்க ளாகட்டும், குடிகளாகட்டும் அவர் பேச்சுக்கு மறுபேச்சுக் கிடையாது. கோழிச் சண்டைகள்தான் அக்காலத்தில்

ஜமீன்தார்களுக்குப் பெரிய பொழுதுபோக்கு. நமது சிங்கத்திற்கும் அதிலே ரொம்பக் கிறுக்கு. அந்தக் கோழிச் சண்டையில் அவரை நிபுணர் என்று சொல்லவேண்டும். குஸ்தியிலும் சரி, பெரிய வஸ்தாத். ஆள் ஒல்லியாய், உயரமாய் இருப்பார். ஆனால், உடல் வலிமை மட்டும் சிங்கத்தின் வலிமையைப் போன்றதாய் இருக்கும். தெலுங்குப் பிராமணராகையால் மீசை வைத்திருப்பார். அந்த மீசையும் பிரமாதமாய் இருக்கும். கதர் ஜிப்பா போட்டுக் கொண்டு மீசையையும் முறுக்கிவிட்டு வெளியே கிளம்பிவிட்டாரானால், அசல் சிங்கம் புறப்பட்ட மாதிரியே இருக்கும். அவர் பெயர் ஆர். எஸ். வெங்கட்டராமய்யா. ஆனால், எல்லாரும் வெங்கட்ட ராமய்யர் என்றுதான் சொல்லுவார்கள். அக்காலத்தில் அப்பகுதிகளில் அவருக்கு இருந்த செல்வாக்கை இக் காலத்தில் யூகிக்க முடியாது. இராமநாதபுரம் ராஜாவை 1937-ஆம் வருஷ சட்டசபைத் தேர்தலில் முத்துராம லிங்கத் தேவர் தோற்கடித்தாரென்றால், அதற்கு மூல காரணம் மட்டப்பாறை சிங்கம்தான். அய்யரின் செல் வாக்கு அவ்வளவு அதிகமாய் இருந்தபடியால் காங்கிரஸ் இயக்கம் தோன்றுகிற சமயங்களில் முதலில் மதுரை ஜில்லா அதிகாரிகள் அய்யரைத்தான் ஜெயிலில் போடு வார்கள். ஒவ்வொரு தடவையிலும் 2 வருஷங்களுக்குக் குறைந்து அவருக்குத் தண்டனை கிடையாது. இம் மாதிரி நீண்டகாலத் தண்டனைகளை அவர் அநுபவிக்க வேண்டி வந்ததால், அவருடைய சொத்துக்களுக்கும் குடும்பத்திற்கும் ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்கள் கொஞ்ச மல்ல. என்றாலும், அய்யர் இவற்றைக் கண்டு அஞ்ச வில்லை. சிங்கத்தைப் போல அஞ்சாமல் நின்றார்.

நானும் அய்யரும் ஜெயிலில் இருந்த காலங்களில் ஒரு விஷயத்தை நான் கண்டேன். மதுரை, இராமநாத புரம் ஜில்லாக்களிலிருந்து ஜெயிலுக்குள் வந்த சாதா ரணக் கைதிகள்கூட அய்யரை, "மட்டப்பாறை சாமி" என்று பார்த்தவுடன் கையெடுத்துக் கும்பிடுவார்கள். அவ்வளவு செல்வாக்குள்ள வேறு யாரும் காங்கிரஸ் கைதிகளில் இருந்ததில்லை. மட்டப்பாறை சிங்கத்தைப் பற்றி முன்பே நான் அறிந்திருந்தாலும், நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் கடலூர் ஜெயிலில் 1932-இல்தான் கிடைத்தது. என்னைவிட வயதில் பத்து வருஷமாவது அவர் அதிகமாய் இருப்பார். என்றாலும், நானும் அவரும் சந்தித்த உடனேயே எங்கள் இருவர் மனமும் ஒன்றுசேர்ந்து, நாங்கள் நண்பர்களானோம். எங்கள் கூட்டுறவு எங்களுடைய வெற்றிலை பாக்குப் போடும் பழக்கத்தால் இன்னும் அதிகமாயிற்று. ஒருவேளை எங்கள் இருவருக்கும் சில பொதுவான குணங்கள் இருந்து, அவற்றால் அந்த நட்பு ஏற்பட்டிருக்கலாம். வெற்றிலை பாக்கு என்றபோது கடலூர் ஜெயிலில் நாங்கள் இருந்த காலத்தில் நடந்த ஒரு சம்பவம் ஞாபகத்திற்கு வருகிறது. அதைச் சொல்லுகிறேன் :

ஜெயிலுக்குள் என்னதான் கட்டுப்பாடுகள் இருந் தாலும் வெற்றிலை, பாக்கு, புகையிலை, சுருட்டு, சிக ரெட்டுகள், பொடி ஆகியவை எப்படியாவது வந்துவிடும். ராஜீயக் கைதிகளில் பலர் இவைகளில் ஏதாவது ஒரு பழக்கத்தைக் கொண்டவர்களாய் இருப்பார்கள். அச் சமயம் ஜெயிலில் சூப்பிரண்டாக ஒரு பிரிட்டிஷ்காரர் இருந்தார். ரொம்பக் கண்டிப்புள்ளவர். பி-வகுப்பு ராஜீயக் கைதிகளை மட்டும் கடலூர் ஜெயிலில் வைத்திருந்தார்கள்.

ஜெயிலராக அச்சமயம் இருந்தவர் ஓர் ஆந்திரர். அவர் அதற்கு முன்னுல் பல ஜெயில்களில் ராஜீயக் கைதிகள் மீது தடியடி நடத்திப் பெயர் வாங்கியவர். ஜெயிலரும் சூப்பிரண்டும் இப்படிப்பட்டவர்களாய் இருந்தும் எங்களுக்கு வேண்டிய புகையிலைச் சரக்குகள் மட்டும் ஒழுங்காய்க் கிடைத்து வந்தன. இந்த விஷயம் சூப்பிரண்டுக்கு எட்டியது. அவருக்குக் கோபம் வந்து, ராஜீயக் கைதிகளின் அறைகளைச் சோதிக்க வேண்டும் என்று சொல்லி ஜெயிலர், உதவி ஜெயிலர், வார்டர்களுடன் கிளம்பிவிட்டார். சோதனை போட்டால் அநேகமாய் ஒவ்வொருவர் அறையிலும் ஏதாவது ஓர் ஆட்சேபணையான சரக்கு அகப்படத்தான் செய்யும். அப்படி அகப்பட்டால் அதற்காகத் தனியாகத் தண்டனை வேறு கிடைக்கும். அதற்கு என்ன செய்வது என்று நானும் அய்யரும் யோசனை செய்தோம். முடிவாக எல்லாரிடமும் இருக்கிற சரக்குகளை நாங்கள் இருவரும் வாங்கி வைத்துக் கொள்ளுவதென்று முடிவு செய்தோம். அதே மாதிரி சரக்குகள் எல்லாம் எங்கள் அறைகளில் வந்து சேர்ந்தன. மற்ற வரிசைகளில் சோதனைபோட்டு ஒன்றும் அகப்படாத ஜெயில் அதிகாரிகள் எங்கள் வரிசைக்கு வந்தார்கள். எங்கள் வரிசையில் அய்யர் அறை ஒரு கோடியிலும், என்னுடைய அறை மற்ருெரு கோடியிலுமாக இருந்தன. அய்யர் அறையைச் சோதனை போட்டபோது சரக்குகள் ஏராளமாய் அகப்பட்டதைப் பார்த்ததும் சூப்பிரண்டு அப்படியே அசந்து போனுர். என்ன செய்வதென்று அவருக்குத் தெரியவில்லை. மற்ற அறைகளில் மேற்கொண்டு சோதனை போடுவதையும் நிறுத்தினுர். ராஜீயக் கைதிகளில்

முக்கியமானவர்களில் இரண்டொருவரை அழைத்துத் தனியாகப் பேசினர். என்னதான் கட்டுப்பாடு இருந் தாலும் புகையிலைச் சரக்குகள் எப்படியாவது ஜெயிலுக் குள் வந்துவிடுமென்றும், அவற்றைக் கவனிக்காதது போல இருந்து விடுவதுதான் நல்லதென்றும் அவர்கள் சொன்னர்கள். ராஜீயக் கைதிகளிடம் போய் மோதிக் கொள்ளுவதால் தம்முடைய வேலைத் திறமையைப்பற்றிச் சர்க்கார் குறை கூறுவார்களோ என்ற பயம் அவருக்கு ஏற்பட்டது. அதனல் ஒரு சமரசத்திற்கு வந்தார். புகையிலைச் சரக்குகள் வேண்டியவர்கள் ஜெயில் சப்ளேயர் மூலம் வரவழைத்துக் கொள்ளலாம் என்றும், வார்டர்கள் மூலம் வரவழைக்கக் கூடாதென்றும் சொன்னர். நாங்கள் சந்தோஷமாக ஒப்புக்கொண்டோம். ஜெயிலுக்குள் சரக்குகள் வந்து சேரவேண்டுமானல் ரூபாய்க்கு எட்டணு வார்டர்களுக்குக் கமிஷன் கொடுக்க வேண்டும். ஜெயில் சப்ளேயர் மூலம் வரவழைத்தால் ரூபாய்க்கு ரூபாய் சரக்குகள் கிடைத்துவிடும். இதில் எங்களுக்கு என்ன ஆட்சேபணை இருக்க முடியும்? அதன் பின்னல் எல்லாம் சுமுகமாய் நடந்து வந்தது.

திருச்சி ஜெயிலில் 1941-இல் நாங்கள் இருந்தபோது ஒரு சம்பவம் நடந்தது. எங்களுடன் இருந்த ஒரு ராஜீயக் கைதி, தாம் நேத்தாஜி கட்சியைச் சேர்ந்தவர் என்று சொல்லிக்கொண் டிருந்தார். அவரது உண்மைப் பெயரைச் சொல்ல வேண்டாம். அவரைக் கணபதி என்று அழைப்போம். அவர் கடப்பையைச் சேர்ந்தவர். அவரும் தனிப்பட்டவர் சத்தியாக்கிரகம் செய்தே ஜெயிலுக்குள் வந்ததாகச் சொல்லிக்கொண் டிருந்தார். ஆனல், அவர் அதற்கு முன் காங்கிரசில் வேலை செய்ததாக யாருக்கும்

தெரியவில்லை. காங்கிரஸ்காரர்கள் இருக்கும் ஜெயிலுக்குள் காங்கிரஸ்காரர்கள் என்ன பேசிக்கொள்ளுகிறார்கள், என்ன செய்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளுவதற்காகக் காங்கிரஸ்காரர்கள் வேஷத்தில் உளவர்களைப் போலீசார் அனுப்புவதுண்டு. அம்மாதிரி வந்தவர்தான் கணபதி என்று நாங்கள் சந்தேகப்பட்டோம். அந்தச் சந்தேகத்திற்கு ஏற்றாற்போல, அந்தக் கணபதி நமது தலைவர்களைத் தூஷிக்க ஆரம்பித்தார். மகாத்மாவின் சத்தியாக்கிரகத் திட்டப்படி அந்த நபர் ஜெயிலுக்குள் வந்திருப்பாரானால் மகாத்மாவை அவர் தூஷிக்க வேண்டிய அவசியமென்ன? இதுதான் எங்களுக்கு ஆச்சரியமாய் இருந்தது. கணபதியின் தூஷணை கொஞ்சங் கொஞ்சமாக ராஜாஜி மீதும் திரும்பியது. ராஜாஜி குளித்துக்கொண்டிருக்கும்போது அங்கே போய் நின்றுகொண்டு திட்டுவதும், சாப்பாட்டுக்கு எல்லாரும் உட்கார்ந்திருக்கும்போது இவர் ராஜாஜி பக்கத்தில் போய் உட்கார்ந்துகொண்டு திட்டுவதுமாக ஆரம்பித்தார். ஜெயிலில் இருந்த தேசபக்தர்களுக்கெல்லாம் இந்தச் செய்கைகள் மிகுந்த மனவேதனையைக் கொடுத்தன. கணபதியின் நண்பர்களிடம் சொல்லி, இதை நிறுத்தும்படி எச்சரிக்கை செய்தோம். ஆனால், கணபதி திருந்துகிறவராய் இல்லை. ஜெயிலைவிட்டு விடுதலையாகி வெளியே போகிறவர்கள் முதல் நாள் ஜெயிலில் நண்பர்களுக்கு விருந்து வைப்பது வழக்கம். அம்மாதிரி ஒருநாள் மாலையில் ஒரு தேக்கச்சேரி நடந்தது. அதில் திருவண்ணாமலை அண்ணாமலைப் பிள்ளை பேசியபோது தலைவர்களைத் தூஷித்து ஜெயிலுக்குள் பேசுவதைக் கண்டித்தார். இதை யாரோ போய்க் கணபதியிடம்

சொல்லியிருக்கிறார்கள். உடனே கணபதி, அண்ணுமலைப் பிள்ளை அறை முன்பு வந்து நின்றுகொண்டு, "ஏ அண்ணுமலை, அண்ணுமலை, வெளியே வா. என்னைப் பற்றி என்ன பேசினாய்?" என்று கத்தினார். அச்சமயம் மட்டப்பாறை நூல் நூற்றுக்கொண் டிருந்தார். நான் அவர் பக்கத்தில் உட்கார்ந்து பேசிக்கொண் டிருந்தேன். கணபதி தாறுமாறுகப் பேசுவது நிற்கவில்லையாகையால், அடுத்த தடவை அவர் பேசும்போது அவருக்குப் பாடம் கற்பிப்பது என்று நானும் மட்டப்பாறையும் தீர்மானம் செய்திருந்தோம். அதற்காக நண்பர்களிடம் சொல்லி வைத்துக் கணபதி கலாட்டா செய்யும்போது, எங்களிடம் வந்து சொல்லும்படி ஏற்பாடு செய்திருந் தோம். அதன்படி ஒரு நண்பர் வந்து, 'அண்ணுமலைப் பிள்ளையைக் கணபதி திட்டிக்கொண் டிருக்கிறார்' என்று சொன்னார். உடனே நாங்கள் இருவரும் போனோம். அங்கே கணபதி நின்றுகொண்டு ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்தார். நான் அவர் பக்கத்தில் போய்த் தட்டிக் கொடுத்தேன். பக்கத்தில் மட்டப்பாறை நின்றுகொண் டிருந்ததால் கணபதி எதிர்க்கவில்லை. பூர்ண அஹிம்சை யைக் கைக்கொண்டார். "இனிமேல் இம்மாதிரி பேசினால், ஜாக்கிரதை" என்று சொல்லிவிட்டுத் திரும்பி னோம். இதற்குள் மாலை 6 மணியாய் விட்டது. சாப் பிடுகிற நேரம். ஜெயிலில் ஒரே பரபரப்பு. சூப்பிரண்டிடம் கணபதி போய்ப் புகார் செய்தார். மறுநாள் காலையில் ராஜாஜியையும், பிரகாசத்தையும் சூப்பிரண்டு தமது காரியாலயத்திற்கு அழைத்து விசாரணை செய்தார். அவர் ஒரு பிரிட்டிஷ்காரர். பின்னல் என்னையும் அழைத்து விசாரித்தார். 'கணபதி சொல்லுவது உண்மை

என்பதை நிரூபிக்கும்படி சாட்சியம் விடட்டும்' என்று நான் கேட்டேன். கணபதி சில பெயர்களைக் குறிப்பிட்டார். அவர்கள் எல்லாரும் ஆந்திரர்கள். அவர்கள் சாட்சியம் சொல்லும்போது, கணபதி சொல்லும் சம்பவத்தைத் தாங்கள் பார்க்கவில்லை என்று கூறினார்கள். ஆகவே, கணபதி கொடுத்த புகார் ஆதாரமில்லாத புகாராயிற்று. ஆதாரமில்லாத புகார் கொடுத்ததற்காகக் கணபதிமீது நடவடிக்கை எடுப்பதா அல்லது அவர் புகாரை வாபஸ் வாங்கிக் கொள்ளுகிறாரா என்ற நிலைமை ஏற்பட்டது. புகார் செய்த கணபதி தமது புகாரை வாபஸ் வாங்கிக் கொண்டார். அன்றே அவரைச் சென்னை ஜெயிலுக்கு மாற்றிவிட்டார்கள். அப்புறம் அவர் நாங்கள் இருந்த தனி ஜெயிலுக்கு வரவே இல்லை.

விளக்கெண்ணெய் சமாச்சாரமே அய்யருக்குப் பிடிக்காது. எதிலும் வெட்டு ஒன்று, துண்டு இரண்டு தான். ஆனால், ஒரே விஷயத்தில் மட்டும் இம்மாதிரி அவரால் இருக்க முடிந்ததில்லை. காங்கிரசுக்குள் ராஜாஜி கோஷ்டி, சத்தியமூர்த்தி கோஷ்டி என்று இரண்டு இருந்து வந்தன. ராஜாஜிக்கு எதிராக அய்யர் எக்காலமும் போகக்கூடியவரல்ல. என்றாலும், சத்தியமூர்த்தியிடமும் அவருக்கு மிகுந்த பிரியமுண்டு. இதனால் ராஜாஜிக்கும், சத்தியமூர்த்திக்கும் போட்டி ஏற்பட்டு, நெருக்கடியான கட்டங்கள் வரும்போது அய்யர் தர்ம சங்கடத்தில் அகப்பட்டு விழிப்பார். ஓர் உதாரணம் சொல்லுகிறேன் : 1940-ஆம் வருஷம் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் தேர்தல் நடந்தது. ராஜாஜி கோஷ்டி சி. பி. சுப்பையாவையும், சத்தியமூர்த்தி

கோஷ்டி காமராஜையும் ஆதரித்தார்கள். இதில் யாரை ஆதரிப்பதென்று முடிவு செய்யக் கூடாமல் அய்யர் திகைத்தார். பெயர்களைப் பிரேரித்தபோது காமராஜ் பெயரைச் சத்தியமூர்த்தி பிரேரித்தார். ஆனால், சி. பி. சுப்பையா பெயரை ராஜாஜி தாமே பிரேரிக்கவில்லை. வேறு ஒருவரைக் கொண்டு பிரேரிக்கச் சொன்னார். இதில் அய்யருக்கு ஒரு பிடி அகப்பட்டது. ராஜாஜி தாமே பிரேரிக்காதவருக்குத் தாம் வோட்டுக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்று தம்முடைய மனத்தைத் தேற்றிக்கொண்டார். சத்தியமூர்த்தி பிரேரித்த காமராஜுக்கு வோட் கொடுத்தார். அந்தத் தேர்தலில் ஒரு வோட் மெஜாரிட்டியில்தான் காமராஜ் வெற்றி பெற்றார்.

மற்றோர் உதாரணம் சொல்லுகிறேன்: ராஜாஜி முதல் மந்திரியாக இருந்தபோது அய்யர் சட்ட சபையில் அங்கத்தினராய் இருந்தார். மாகாண சுயாட்சி ஏற்பட்டுங்கூட, காங்கிரஸ்காரர்கள் சர்க்காரை நடத்தி வந்துங்கூட மதுரை போலீஸ் அதிகாரிகளுக்கு அய்யர் மீதுள்ள பழைய கோபம் போகவில்லை. ஒரு வெள்ளைக்காரர் ஜில்லா சூப்பிரண்டாய் இருந்தார். அவருக்கும் அய்யருக்கும் பிடிக்கவே பிடிக்காது. அவர் துணிந்து அய்யர்மீது ஒரு வழக்குப் போட்டார். அந்த வழக்கில் அய்யர்மீது கொலை, கொள்ளை, தீ வைத்தல் இவ்வளவு குற்றங்களையும் சுமத்தினார். வழக்கு, பொய் வழக்கு என்பதை ராஜாஜி அறிவார். என்றாலும், தம்மீதுள்ள வழக்கை வாபஸ் வாங்க வேண்டுமென்று அய்யர் கேட்ட போது ராஜாஜி மறுத்துவிட்டார். கோர்ட்டில் விசாரணை நடந்தால் அய்யர் மீதுள்ள வழக்கு வெறும் பொய்

என்று நிரூபணமாகி அய்யர் விடுவிக்கப்படுவார் என்றும், அப்படி விடுதலை யடைவதுதான் நல்லது என்றும் சொல்லிவிட்டார். வழக்கை வாபஸ் வாங்கிஞல் காங்கிரஸ் ஆட்சிக்குக் கெட்ட பெயர் வருமென்பது ராஜாஜியின் கருத்து. கடைசியில் வழக்கு நடந்து அய்யரும் விடுதலையாஞர். ஆஞல், ஒரு கொலை, கொள்ளை வழக்கை நடத்துவதென்ருல், எவ்வளவோ கஷ்ட நஷ்டங்கள் இருக்கின்றன. அவ்வளவையும் அய்யர் அநுபவித்தார். என்ருலும், ராஜாஜிமீது அவருக்கிருந்த மதிப்பும் பிரியமும் மட்டும் குறையவில்லை. அதே மாதிரி ராஜாஜிக்கும் அய்யர் மீதிருந்த அன்பும் நம்பிக்கையும் குறையவில்லை.

பழங்காலத்துப் பெருங்குணம், மரியாதை, சொன்ன சொல்லைக் காப்பாற்றல் - இம்மாதிரியான உயரிய குணங்களைக் கொண்டவர் அய்யர். நண்பர் என்ருல் உயிரைக் கொடுப்பார். யார் போய் அவருடைய உதவியைக் கோரிஞலும் இல்லையென்று சொல்ல மாட்டார். அதஞல் ஒருவருக்கு ஒரு காரியத்தைச் செய்து கொடுப்பதற்காகத் தம் வீட்டைவிட்டு வெளியே கிளம்பிப் போகும்போது அதைவிட அவசரமான காரியமாக மற்ருருவர் வந்து வழியில் பிடித்துக் கொண்டால் அவரோடு போய்விடுவார். அக்காலங்களில் அய்யர் வீட்டைவிட்டுப் புறப்பட்டால் அவர் எங்கே போஞர், எங்கே இருப்பார் என்பதை யாராலுமே அறிந்துகொள்ள முடியாது.

ஜெயில் வாழ்க்கையில் ஒரு விநாடிகூட அவரால் சும்மா இருக்க முடியாது. அவர் உடம்பில் உள்ள உணர்ச்சியும் வேகமும் அவரைச் சும்மா இருக்கவிடுவ

தில்லே. பெரும்பான்மையான நேரங்களில் அவர் நூல் நூற்றுக்கொண்டே இருப்பார். ரொம்ப மெல்லிய நூலாய் நூற்பார். அதைக்கொண்டே தமக்கு வேண்டிய துணிகளைத் தயார் செய்து கொள்ளுவார். ஏதோ சில நாட்களில் சீட்டாடுவார். சீட்டாட்டத்திலும் கெட்டிக் காரர். ரொம்பக் குஷி வந்துவிட்டால் அவருக்குப் பிடித்த மான மீனுட்சி அம்மன் மீது பாடியுள்ள சமஸ்கிருத சுலோகங்களைச் சொல்லி அர்த்தஞ் சொல்லுவார். பெரிய கலா ரசிகர். நூற்பதில் அவருக்கு எவ்வளவு பிரியம் உண்டோ, அவ்வளவு பிரியம் சங்கீதத்திலும் உண்டு. காரைக்குடி சாம்பசிவ ஐயர் வீணைக்கச்சேரி என்ருல், எல்லா வேலைகளையும் விட்டு விட்டு அதில் லயித்து விடு வார். நவீன நாகரிக நடையுடைகள் அவருக்குப் பிடிப்ப தில்லை. அதற்குக் காரணம் அவருடைய பழமையான பண்பாடேதான். மறைந்துவரும் பழைய பண்பாட்டின் உருவகமாய் அய்யர் விளங்குகிருர். சுயராஜ்யப் போராட் டத்தில் அவருக்கு இருந்த அடக்கமுடியாத ஆவலினுல் அவர் மதுரை ஜில்லாவில் செய்த காரியங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. சுயராஜ்யத்திற்காக மதுரை ஜில்லாவில் அரும்பெரும் தியாகங்கள் செய்த அய்யர், சுயராஜ்யம் கிடைத்த பின்பு முன்னணி ராஜீய வேலையிலிருந்து விலகிக்கொண்டார். என்ருலும், மதுரை ஜில்லாவின் சுயராஜ்யப் போராட்ட சரித்திரத்தில் அய்யரின் பெயர் தான் முதல் இடத்தை நிச்சயமாய்ப் பெறும்.

———

MADURAI UNIVERSITY LIBRARY
4 AUG 1970